
சுந்தரம்
தமிழ்த்
தொண்டர்

# தமிழ்த் தொண்டர்

## (வீரமாமுனிவர்)

ஆசிரியர்

**ஜே. ஜி. சுந்தரம்**

*தேம்பாவணி ஆராய்ச்சியாளர்*

---

**தமிழ் இலக்கியக் கழகம்**

தூத்துக்குடி

# A critical study of the life and writings of JOSEPH CONSTANTINE BESCHI S.J. Catholic Missionary in the Tamil country (1703—1747)

BY

J. G. Sundaram

Published by
The Tamil Literature Society
Tuticorin, S. India

*De Nobili Press, Madura*
1942

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்
தமிழ்ப் பேராசிரியர்
டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் எம். ஏ.
அளித்த

# முகவுரை

பதினேழாம் நூற்றாண்டின் கடைப்பகுதியிலே இத்தாலி நாட்டின்கண் தோன்றிப் பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் நாடு போந்து அருந்தமிழ்த் தொண்டாற்றிய வீரமாமுனிவர் வரலாற்றைக் கூறும் இந்நூல் தமிழ் மக்களால் விரும்பிப் படிக்கத் தக்கதொன்றாகும். வேறொரு மொழிப் புலவர் தமிழ்மொழியில் நிரம்பிய புலமையொடு திகழ்தல் அரிது. அதனினும் அரிது, அம் மொழியிற் சிறந்த காவியங்களையும் இலக்கணங்களையும் இயற்றுதல் என்பது. கான்ஸ்டெண்டைன் யோசெப் பெஸ்கி என்ற வீரமா முனிவர் "தேம்பாவணி" என்னும் காவியத்தை வாடாத மணி யாகத் தமிழன்னைக்கு நல்கியுள்ளார். அக்காவியம் சீவகசிந்தா மணி, கம்பராமாயணம் முதலியவற்றோடு ஒப்புநோக்கி இன்புறத் தக்கது. முன்னோர் செய்த நூலின் பொருளையும் சொல்லையும் வாங்கிக் கொண்டு, புதிய இனிய எளிய முறையில் வீரமாமுனிவர் "தொன்னூல் விளக்கம்" என்னும் பெயரால் ஓர் ஐந்திலக்கண நூல் இயற்றியுள்ளார். மேலும், சதுர அகராதி என்று அவரால் இயற்றப் பட்டுள்ள அகராதி தமிழ் மக்களுக்கு ஊன்றுகோலாய் உதவும் ஒரு பனுவலாகும்.

இவையன்றியும், அவரால் இயற்றப்பட்ட பல உரைநடை நூல்கள் தமிழிற்கு அணிசெய்வன. உரமுடை உரைநடை வகையைப் புதுக்கித் தமிழிற் பெரு வழக்கத்திற்குக் கொண்டுவர வழிகாட்டியவருள் தலைசிறந்தவர் வீரமாமுனிவர்.

இம்முனிவருடைய வரலாற்றை நன்கு ஆய்ந்து, இனிய நல்ல தமிழிலே திருவாளர். **J. G.** சுந்தரம் அவர்கள் நமக்கு அளித் துள்ளார்கள். அவர் வீரமாமுனிவருடைய புலமை நலத்தில் மிக்க ஈடுபாடுடையவர்; முன்னரே "தேம்பாவணி ஆராய்ச்சி" என்ற நூலியற்றியவர். முனிவருடைய புலமைத் திறத்தை ஏழாவது

அத்தியாயத்தில் (பக். 57-78) அழகாக விளக்கியுள்ளார். கவிஞரின் வாழ்க்கைத் திறத்தைப்பற்றிக் கூறும் எட்டாம் அத்தியாயம் (பக். 79-95) சிறப்பாகப் படிக்கத் தக்கது.

நூலிற்கு முகப்பில், "காப்பிய ஆசிரியர் வீரமாமுனிவர்" என்ற ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை அருள்மிகு. டாக்டர் தனிநாயகம் அவர்களால் எழுதப்பெற்று, வெளியிடப்பட்டிருக்கிறது.

வீரமாமுனிவருக்குத் தமிழ் மக்கள் செய்யக்கூடிய நன்றி களுள் ஒன்று அவர் வாழ்க்கையைப்பற்றியும் அவர்தம் நூல்களைப் பற்றியும் அறிந்துகொள்வதாகும். அந்நன்றியைச் செலுத்த நல்ல வழியில் உதவிசெய்யும் இந்நூலினை நான் வரவேற்கிறேன். தமிழன்பர்கள் படித்துப் பயனெய்துவர் என்று நம்புகின்றேன்.

அ. சிதம்பரநாதன்

10-12-48

## உள்ளுறை


| | |
|---|---|
| | பக்கம் |
| காப்பிய ஆசிரியர் வீரமாமுனிவர் | 1 |
| க. தோற்றுவாய் .. .. | 9 |
| உ. பிறப்பும் வளர்ப்பும் .. .. | 11 |
| ௩. 18-ம் நூற்றாண்டின் கத்தோலிக்கர் நிலைமை .. .. | 13 |
| ௪. சமயத் தொண்டுகளும் சார்ந்த சங்கடங்களும் .. .. | 18 |
| ௫. வேறிடங்களில் ஆற்றிய விழுமிய தொண்டுகள் .. .. | 30 |
| ௬. முனிவர் நம் மொழிக்குச் செய்த தொண்டு .. .. .. | 41 |
| ௭. வீரமாமுனிவரின் புலமைத்திறம் | 57 |
| ௮. வரகவியின் வாழ்க்கைத்திறம் | 79 |

# காப்பிய ஆசிரியர் வீரமாமுனிவர்

(தனிநாயக அடிகள்)

தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் காப்பியங்கள் பல்வேறு சமயங்களைச் சார்ந்தவை. மணிமேகலை புத்த ஆசிரியரால் வரையப்பெற்றது. சீவக சிந்தாமணி சமணரால் இயற்றப்பெற்றது. கம்ப இராமாயணத்தை வைணவர் போற்றுவர். சேக்கிழாரின் பெரிய புராணத்தைச் சைவர் தலைமேற்கொள்வர். உமறுபுலவர் பாடிய சீறாப்புராணம் மகுமதிநபியின் வரலாற்றைக்கூறும். இவ்வாறே வீரமாமுனிவர் யாத்த தேம்பாவணியெனும் பெருங்காப்பியம் கத்தோலிக்குக் கருத்துக்களையும், கிறீஸ்துபெருமானுடைய பெற்ேறாரின் வரலாற்றையும், கிறீஸ்துபெருமானின் வரலாற்றையும், அவர் நிறுவிய சமயச்சபையின் வரலாற்றையும் கூறும்.

தேம்பாவணியெனும் தொடர்நிலைச்செய்யுளை நன்கு படிப்பதற்கு, அதனை இயற்றிய புலவரின் வாழ்க்கை வரலாற்றை அறிவது இன்றியமையாதது. வீரமாமுனிவர் பிறநாட்டவர். பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் நாற்பது ஆண்டுகளாகக் கத்தோலிக்குக் குருவாய்த் தொண்டுபுரிந்து தமிழகத்தில் தமிழரினும் தமிழனாய் உயிர்துறந்தவர். தம் முப்பதாம் ஆண்டின்பின் பிறமொழியைக் கற்று இத்துணை புலமை பெற்று விளங்குவதற்கு உலகவரலாற்றில் வீரமாமுனிவருக்கு வேறு ஒப்பற்றசான்று இல்லை. சூசை கொன்றாடு (Joseph Conrad) போலாந்து நாட்டவர். ஆங்கிலத்தில் சிறந்த நூலாசிரியர். ஆனால், அவரோ தம் பதினேழாம் ஆண்டில் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். மேலும் இத்தாலியத்திற்கும் தமிழிற்கும் இருக்கும்தூரம் ஆங்கிலத்திற்கும் போலிஷ்க்கும் இல்லை.

வீரமாமுனிவர் தமிழ்த்தொண்டும், சமயத்தொண்டும் செய்துவந்தவர். அவர் சமயத்தொண்டு தமிழ்த் தொண்டிற்கு உதவியதுபோல், அவர் தமிழ்த்தொண்டு சமயத்தொண்டிற்கு உதவியாயிற்று.

**நூலின் சுருக்கம்**

தேம்பாவணியில் அடங்கிய காண்டங்கள் மூன்று; படலங்கள் முப்பத்தாறு; செய்யுட்கள் மூவாயிரத்து அறுநூற்றுப்பதினைந்து. வீரமாமுனிவரின் இயற்பெயர் சூசை (Joseph). எனவே தான் தாங்கிய பெயரின் நாமகளை இக்காப்பியத்தில் போற்றினார்போலும். இஸ்பானிய தேயத்தில் ஆகிர் என்பது ஒரு நகர். அங்கு யேசு பற்று மிக்குடைய கன்னி ஒருத்தி வாழ்ந்துவந்தாள். அவள் இறைவனின் திரு அருளால் யேசுநாதரின் காவல் தந்தையாகிய சூசை யெனும் திருத்தொண்டரின் வரலாற்றை எழுதலானாள். அந்நூலே நம் புலவருக்கு முதல் நூலாகும். இனி, விவிலியநூலில்வரும் பல வரலாற்றுக்களையும் தன்னுடைய சொந்தக் கருத்துக்களையும் சேர்த்தாங் காப்பியத்தை இயற்றினார்.

காப்பிய ஆசிரியர் அனைவரும் அவ்வாறே செய்வர். தமிழில் கம்பரும், ஆரியத்தில் காளிதாசரும், கிரேக்கில் ஹோமரும், இலத்தீனில் வெர்ஜிலும், இத்தாலியத்தில் தாந்தேயும், போத்துக்கீதத்தில் காமோவும், ஆங்கிலத்தில் மில்டனும், தம் காப்பியங்களில், நிகழ்ந்ததை மட்டும் கூறவில்லை. அடிப்படையான வரலாற்றை வைத்துக் கொண்டு, தங்கள் நோக்கத்தோடொப்ப, காப்பியத்தை விரிப்பர். பல சிற்றாறுகள் வந்துவிழும் பேராற்றைப் போல், பல சிறுகதைகளும் வரலாறுகளும் செய்திகளும் திரண்டு, சிறப்புறப்போடு இயைந்து, தொடர்நிலைச் செய்யுள் உருவாகும்.

பாலைத்தீன் (Palestine) நாட்டில் யூதர்குலத்தில் பாட்டுடைத் தலைவராகிய சூசை பிறக்கின்றார். அவர்

மக்களுள் ஒப்பாரும் மிக்காருமின்றி வளர்ந்து இளைஞ ராகவே துறவறம் புக எண்ணி வனத்தைநோக்கிச் செல் கின்றார். வானுறையும் தேவதூதன் அவரைக்கண்டு அவர் இல்லறத்திலே துறவறம் காண்பது இறைவன் ஆணையெனக் கூறுகின்றார். அந்நாட்டின் தேவாலயத் தில் கன்னித்தவம் பூண்டு, மங்கையர்க் காசியாயும், மாசறு மாதாவாயும் விளங்கும் மரியாய்க்கும் தேவ தூதன் சென்று சூசையைத் திருமணம் செய்யும்படி கூறு கின்றார். இருவரும் தம் கன்னிமைக்குச் சிதைவில்லாமல் இல்லறத்தை இனிது நடத்தும்பொழுது, இறைவனின் திருவருளால் கன்னிமரியம்மையார் "கருவில்லாக் கருத் தாங்கிக் கன்னித்தாயாகி" "உருவில்லானை மனித உருவாக" உலகிற்கு ஈந்தார். இடையரும் அரசரும் இயேசுவை வணங்குகின்றனர். ஆயினும் அவ்வூரின் அரசன் இயேசுவைக்கொல்ல எண்ணுவதால், திருக் குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் எகிப்துதேயம் செல் கின்றனர். அவர்கள் செல்லும் வழியில் அமைந்திருக் கும் ஊர்களும் இடங்களும் விவிலிய வரலாறுகளோடு தொடர்புடையன. எனவே அவ்வரலாறுகள் அனைத்தை யும் காப்பியாசிரியர் இணைத்துக் கூறுகின்றார். இயேசு நாதரும், அவர் பெற்றோரும் நாசரே எனும் ஊருக்குத் திரும்பி, அங்கு சில ஆண்டுகளாக ஒப்பற்ற இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுவருகின்றனர். பாட்டுடைத் தலை வனாகிய சூசையப்பரைப் பிணிசேர்வதும், அவர் அதனைப் பொறுமையுடன் தாங்குவதும், அவர் உயிர்துறப்பதும் மண்ணுலகும் விண்ணுலகும் அவருக்கு முடிசூட்டி அவரைப் போற்றுவதும், இறுதிப்படலங்களின் பொரு ளாவன.

## சிறப்பு இயல்பு

சூசையப்பரின் வரலாற்றுடன் வேறு செய்திகள் இணைக்கப்பெறும் முறை குறிக்கற்பாலது. எடுத்துக்

காட்டாக, வளன் எனும் சூசை யூதேயாவின் அரச குலத்தில் பிறந்தவர். அவ்வரசகுலம் தாவீது அரசனைக் குலத்தலைவனாகக் கொண்டது. எனவே சூசையின் குலத்தைப்பற்றிக் கூறும் புலவர் தாவீதின் அருஞ் செயல்களையும் வரைகின்றார். இவ்வாறு விவிலியநூலி லிருந்து நூற்றைம்பது பகுதிகள் இக்காப்பியத்தில் இடம்பெறலாயின.

மேலும் கத்தோலிக்குத் திருச்சபையின் வரலாற்றுக் குறிப்புக்களை எதிர்கால முன்வாக்குப்போல் நூலாசிரியர் கூறலானார். இயேசுநாதர் தம் தாய் தந்தையரோடு வாழும்பொழுது தம் இல்லத்தைப் பிற்காலத்தில் வானோர் இத்தாலிநாட்டுக்கு எடுத்துச் செல்வரென்றும், ஆங்கு லொறெத்தோ நகரில் எந்நாளும் அடியாரால் பெருஞ் செல்வமாய்க் காப்பாற்றப்படுமென்றும் கூறும் இடம் இத்தகையது. அப்படலத்தில் ஒரு செய்யுள்—அவ்வில் லத்தைப்பற்றி,

ஓங்கியதோர் உடல்முகமோ, முகக்கண்ணே
கண்மணியோ—ஒளிசெய்மார்பிற்
றாங்கியதோர் பூண்கலனே சுடர்முடியோ
முடிமணியோ சொல்லுந்தன்மை
நீங்கியதோர் வனப்பிவ் வில்நிலத்தெல்லை
நிகரில்லா நேமிதன்னில்
வீங்கியதோர் பேரின்ப வீடதுவே மேல்வீட்டு வாயலஃதே.

தேம்பாவணி கிறிஸ்துவ நீதிநூலாகவும் விளங்கு கின்றது. இயற்கைவனப்பில் இறைவனின் தோற்றம், இல்லறம் துறவறங்களின் முதன்மை, தொழிலின் மாண்பு, வறுமையின் சிறப்பு, கற்பின் தலைமை, கடவு ளின் இலக்கணம், வானோரின் உயர்வு, நரகரின் தாழ்வு, பாவத்தின் கொடுமை, அறத்தின் அருமை, காமத்தின் தீமை, காதலின் பெருமை, இவையாவும் வெகு புலமை யுடன் உருவாக்கிக் காட்டப்பெற்றுள்ளன. மேலும் கத்

தோலிக்கர் சிறப்பாகப் போற்றும் உண்மைகள் யாவையும் காப்பியத்தில் விளக்குகின்றார். ஞானஸ்நானம் முதலிய அருள் அளிக்கும் வாயில்களாகிய தேவதிரவிய அனுமானங்களைப் பற்றியும், கத்தோலிக்குமறைக்கு மனம்மாற்றுவதற்கு ஒருவன் கூறக்கூடியவற்றையும் கதைமயமாகவும், தத்துவமயமாகவும் கூறியுள்ளார். சுருங்கச் சொல்லின் இக்காப்பியம் அவர் போதித்து வந்த திருமறையின் கோட்பாடுகளும், வரலாறுகளும், தத்துவங்களும், நீதிகளும் வழிபாட்டு முறைகளும் அடங்கிய பெருங் களஞ்சியம்.

உவமை முதலிய அணிநயங்களிலும், சொல்வளம் பொருள்வளங்களிலும், வீரமாமுனிவர் ஏனைய காப்பிய ஆசிரியருக்குக் குறைந்தவர் அல்லர். பிறகாப்பிய ஆசிரியர் செய்யுள் இயற்றினர். வீரமாமுனிவரோ இலக்கண நூல்கள், மொழிநூல்கள், அகரவரிசைகள், உரைநடை நூல்கள் ஆகிய பல்வேறு நூல்களை இயற்றியும் காப்பிய ஆசிரியராக விளங்கும் தன்மையை எங்ஙனம் போற்றுவோம்.

## தமிழ் மணம்

இவை யாவற்றையும், வீரமாமுனிவர் தமிழ் மரபு வழுவாமல் கூறுவர். காப்பியத்தின் தோற்றுவாயில் நாட்டுப்படலம். நகரப்படலம் ஆகிய படலங்களைக் காணலாம். கம்பரின் அயோத்தி தமிழ்நாட்டைப் போன்றது ; கங்கையென ஆற்றைப் பெயரிட்டாலும் அவர் வர்ணிக்கும் ஆறு காவேரி. வீரமாமுனிவர் காட்டும் பாலைத்தின் நாடும் தமிழ்நாடு. ஆங்குள்ள எருசலேம் நகரும் ஒருவாறு தமிழ்நகர். காலத்தால் பின்னே வந்தவராதலால் வீரமாமுனிவர் தம்முன்னோரின் மொழியைப் பொன்னேபோல் போற்றினார். திருவள்ளுவர், திருத்தக்கதேவர், கம்பர், மாணிக்கவாசகர் முதலியோரின் நடையும், முறையும், உவமையும் சொல்லும் இக்காப்

பியத்தில் உள. தமிழ்க்காப்பியம், பரணி, உலா முதலிய இலக்கியங்கள் நன்கு பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. மரியாயின் முகத்திலிருந்து கபிரியேல் தேவதூதன் அவ் வம்மையாரின் எண்ணங்களை அறிந்தார் எனும் இடத்தில் "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும்முகம்" எனும் குறட்பா அமைவதைக் காண்க. எருசலேம் நகரை வர்ணிக்கப்போந்த புலவர் இவ்வாறு கூறுகின்றார். மக்களின் மனங்கள் நீதியிலிருந்து அசைவன அல்ல, அங்கு அசைவன நீரின் அலைகளே; களங்கமற்ற மக்களும் ஊருமாதலால் மேகம் தான் கறுப்பாயிருக்கும். வேறெங்கும் தூய்மை. ஒரு வகைப் போர்தான் அங்குண்டு. இரப்போர்க்கு ஈவதில் நிகழும் புகழ்ச்சிக்குரிய போட்டி.

**நீரல்லது மலையில்லது; நிறைவான் பொருளிடுவார்**
**போரல்லது பகையில்லது புரிவான் மழை பொழியும்**
**காரல்லது கறையில்லது; கடிகாவலு மறனுற்**
**சீரல்லது சிறையில்லது திருமாநகரிடையே**

திருநாவுக்கரசநாயனார் புராணத்தில் சேக்கிழார் திருவாமூரைப்பற்றிக் கூறுவதுடன் ஒப்பிட்டு இன்புறத்தக்க செய்யுள் இது.*

ஆங்கிலம் வணிகத்தின் மொழியென்பர். இனி, இலத்தீன் சட்டத்தின் மொழியென்றும், கிரேக்கு இசையின் மொழியென்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழியென்றும், பிரெஞ்சு தூதின் (Diplomacy) மொழியென்றும், இத்தாலியம் காதலின் மொழியென்றும் கூறுவது வழக்கம். இவ்வாறே தமிழும் இரக்கத்தின் மொழி, பத்தியின் (Bakthi) மொழி. தமிழில் இரங்குவதுபோல் வேறெம்மொழியிலும் இரங்குவது அரிது. தமிழில் இரப்பதுபோல் வேறெம்மொழியில் இரப்பதூஉம் அரிது.

* "ஓங்குவன மாடநிரை யொழுகுவன வழுவிலறம்
நீங்குவன தீங்குநெறி நெருங்குவன பெருங்குடிகள்...
புலர்நீல மிருள்காட்டும்..."

தமிழின் அவலச் சுவையை நன்கறிந்த வீரமாமுனிவர் இயேசு இளவல் மறைந்த வரலாற்றைக் கூறும் பகுதி மிகச் சிறந்தது. தண்காவையும், பூம்பொழிலையும், இன்னிசைக் குயில்களையும் சூசையெனும் வளன் விளித்து இயேசுவைக் கண்டீரோ வெனப் புலம்புகின்றார். பறவைகளே! என் உயிரும், மரியாயின் அரசருமாகியவர் பகைவரின் மனம்போல் இருண்டகாட்டில் சென்ற வழியைக் கூறுங்கள். அவரை யான் அடையவேண்டும்.

பொன்னார் சிறகாற் புட்கரஞ்சேர் புட்குலமே
யென்னாருயிரே யென்னெஞ்சத் தா ளரசே
யொன்னார் மனநேர் மனஞ்சேரவுற்றவழி
யன்னாட வறையிரோ வெனக்கென்றான்.

இப்பகுதியினைத் திருக்கோவையாரின் சில பகுதிகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க.

இசைப் பயிற்சி மிக்குடையவர் வீரமாமுனிவர். சில செய்யுட்கள் சிலப்பதிகார வரிப்பாட்டைப்போல் ஒலிக்கின்றன. பாற்கடலில் மலரும் தாமரை மிகவும் அழகாக மலரும். என் உள்ளமும் அவ்வாறு மலர்ந்தது. வேத நூற்கடலாகிய நீ, நாங்கள் பாவம் செய்ததால் துன்பக் கண்ணீர் சொரிகின்றாய். நாதா, இறைவனை நீ மனிதனாய் உதித்ததால் ஈடேற்றம் அடைந்தேன் என்று ஆனந்தக்கண்ணீர் சொரிகின்றேன்.

பாற்கடல் என் உள்ளப் பதும மலர் அரும்ப
நூற்கடலே நீஉதித்தாய் நும்மலர்க்கண் முகத்தரும்ப
நும்மலர்க்கண் முகத்தரும்ப நோய் செய்வினை செய்தோம்
எம்மலர்க்கண் முகத்தரும்ப இன்று வினை தீர்த்தா

இனிக் கடவுளைப்பற்றிய செய்யுளொன்று :—

அறக்கடல் நீயே ; அருட்கடல் நீயே
அருங் கருணாகரன் நீயே
திறக்கடல் நீயே ; திருக்கடல் நீயே
திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே ; நிகர் கடந்துலகில்

*நிலையும் நீ ; உயிரும் நீ ; நிலைநான்*
*பெறக்கடல் நீயே ; தாயும் நீ ; எனக்குப்*
*பிதாவும் நீ ; அனைத்தும் நீயன்றே*

இச்செய்யுளினது பொருள் யாவர்க்கும் புலனாகும். இங்கு திருவாசகமணம் கமழ்கின்றது.

மேலும் வீரமாமுனிவர் தனி முறையில் தமிழை வளர்த்ததை ஆராய்ச்சியாளர் இதுகாறும் கூறினார் அல்லர். தமிழ்ப்புலவரைப் பயன்படுத்தியதுபோல் வீரமாமுனிவர் தாந்தே, தாசோ, வெற்ஜில் முதலிய மேல்நாட்டுப் புலவர் நூல்களையும் பயன்படுத்தி யுள்ளார். இருபதாவது படலத்தில் தாசோவின் காப்பியம் "எருசலேமின் விடுதலை" (Gerusalemme Liberata) நம் புலவருக்குத் துணை நூலாவதைக் காண்க. தமிழ் அன்னைக்கு அவரை அறிமுகப்படுத்திய பெருமை புலவருடையது. மேல்நாட்டுக்கலையாறும், தமிழ்நாட்டுக்கலையாறும் கலக்கும் ஏரியாம் தேம்பாவணி.

இத்தகைய நூலினை நம் முன்னோர் போற்றியதூஉம், மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் இதனை அரங்கேற்றியதூஉம், தமிழ் அன்னைக்கே இதனை வாடா மாலையாகக் கருதியதூஉம் வியப்பன்று. சுத்தானந்தபாரதியார் கூறுவது போல் தேம்பாவணியினைத் **தொடினும்** தமிழ்மணம் கமழும்.

*வீரமாமுனிவர் தைரியநாதர்*
*விரிதமிழ்க் கலைமணங் கமழும்*
*ஆரமாமுனிவர் அகத்தியர்போலே*
*அருளினர் அரிய நன்னூல்கள்*
*சாரமாந் தேம்பா வணியினைத் தொடினுந்*
*தமிழ்மணங் கமழுமென்கரமே*
*ஈரமாநெஞ்சில் இடம்பெற நட்டால்*
*இன்பமாய் மலருமென் வாழ்வே*

---

**இக்கட்டுரையின் பெரும் பகுதி வானொலி உரையாய் முதல் வெளி வந்துள்ளது இங்கு இதனை அச்சிட உடன்பாடு அளித்த இந்திய வானொலிக் கழகத்தார்க்கு எம் நன்றி — ஆசிரியர்**

# க. தோற்றுவாய்

நமது செம்மை சான்ற தமிழ் மொழிக்கண் ஆர்வமும் அன்பும் உடையராய், ஆற்றல் மிக்கத் தொண்டுகள் ஆற்றி, அதனைச் சிறப்பித்தார் பலர் உளர். செயற்கரிய அத்தகைய தொண்டுகள் புரிந்தாருள் வீரமாமுனிவரும் ஒருவர்.

தமிழன் ஒருவனுக்குத் தமிழ்மீது ஆர்வம் உண்டெனின், அது இயல்பேயாகும். தமிழன் அல்லாத ஒருவன் அதுவும் புற நாட்டான் ஒருவன் நம்மொழியை ஆர்வத்தோடு பயின்று, நுண்மாண் நுழைபுலம் மிகுந்து, புலவர் ஏறாய் விளங்குவான் எனின், அப்பெரியானைப் பாராட்டாமல் இருக்கமுடியுமோ? பாராட்டவேண்டியது நமது கடமையும் ஆகுமே!

ஜெர்மனி, இத்தலி, இங்கிலாந்து முதலிய நாடுகள் ஆரியத்திற்கு இனமான மொழிகள் வழங்கப்பெறும் நாடுகள். அந்நாட்டு மக்களுள் ஒரு சிலர் எத்தகைய இனத்தோடும் சேராது, தனக்குத்தானே நிகராயும் தனியாயும் விளங்கும் நம் சீரிய மொழியைப் பயின்று, நேரிய புலமை சான்று, காவியம் செய்யும் திறமும் படைத்துப், பூவுலகில் அனைவராலும் போற்றப்படுவாரெனின், அன்னவர் தம் தாயின் வயிற்றிலிருந்தே அண்ணல்களாய்ப் பிறந்தவர்களாய்த்தான் இருத்தல் வேண்டும். மேலை நாட்டிலிருந்து ஈண்டுப்போந்து, தமிழ்மொழிக்குச் செய்த அமித தொண்டுகளால் அண்ணல்களாய் விளங்குவாருள் வீரமாமுனிவரும் ஒருவரென்றால், அவரது வாழ்க்கை வரலாறு தமிழன் என்று தலையெடுத்த ஒவ்வொருவனும் அறிந்துதான் ஆகவேண்டும்.

திராவிட மொழிகளின் ஒப்புமை இலக்கண நூல் செய்து, நந்தமிழ் மொழியைச் சிறப்பித்தவர் ஆகிய கால்டுவெல் என்னும் கண்காணியார் மேனாட்டவரே. நிபுணத்துவம் நிரம்பி, பல மொழிபெயர்ப்பு நூல்களைத்

தத்தம் மொழிகளில் ஆக்கித்தந்து, நம்மொழியைப் பெருமைப்படுத்திய பெரியார்களாகிய போப்பையரும், கிராலும், எலிஸ்பிரபும் மேனாட்டினர்களே. தமிழ் மொழிப்புலமை சாலவும் எய்தி, இலக்கண நூல்களும், காவிய நூலும், பிரபந்தங்களும், அகராதிகளும், வசன நூல்களும், தர்க்கநூல்களும் ஆகிய பல்வகை அணிகளா லும் தமிழ் மாதை அலங்கரித்து, மேனாட்டு அண்ணல் ஏறாய் நம்மிடை இற்றை நாள்வரை புகழ்மணம் வீசிக் கொண்டிருப்பவர், இந்த வீரமாமுனிவர் ஒருவரே. இவர் நமக்குக் கிடைத்தது நமது பாக்கியமே யாகும்—இவர் தம் வரலாற்றை அறிவது நமக்குப் புத்துயிரும் புத்து ணர்ச்சியும் பயப்பதாகும்.

# உ. பிறப்பும் வளர்ப்பும்

தமிழ் நாட்டில் வீரமாமுனிவர் என்று பாராட்டப் படும் கான்ஸ்டென்ஷியஸ் ஜோசப் பெஸ்கி என்பவர் கி. பி. 1680-ம் ஆண்டு, நவம்பர் திங்களில் தோன்றினர். இத்தலி நாட்டிலே, வெனிஸ் குடியரசுப் பகுதியில் உள்ள தும், மகா கவி வெர்ஜிலின் பிறப்பிடத்திற்கு அண்மை யில் இருப்பதுமான கஸ்டிகிலியோன் என்னும் நகரே வீரமாமுனிவரின் பிறப்பிடமாகும். அவருடைய தந்தை யின் பெயர் கண்டால்போ பெஸ்கி. அவர் பிரபுப்பட்டம் பெற்றவர். அவர்தம் தாயார் பெயர் எலிசபெத் பெஸ்கி. வீரமாமுனிவரின் இளம் பருவச் செய்திகள் ஒன்றும் தெரியவில்லை—அவர் இலக்கியப் படிப்பை முடித்த பின்னர் ஓராண்டளவும் மனேதத்துவ சாஸ்திரம் பயின் ருர். அதன் பின்னர் அவர் தம்மைக் கடவுள் திருப்பணி ஆற்றற்கு ஒப்புக்கொடுத்து, 1698-ம் ஆண்டு, அக்டோபர் திங்களில், பதினெட்டு ஆட்டைப் பருவத்தின்போது, இயேசு சபையில் சேர்ந்தார்.

1700-ம் ஆண்டில் அவர் ரவீனு நகரில் இலக்கண ஆசிரியராய் அமர்ந்தார், ஆயினும் அப்பணியை நீத்து 1701-ம் ஆண்டில் மீண்டும் தம் மனேதத்துவ அறிவை விருத்தி செய்வான் வேண்டி, பொலோனு நகரை அடைந் தார். பின்னர் அங்கேயே இலக்கணமும் வரலாறும் கற் பிக்கும் ஆசிரியராய் மூவாண்டுகள் இருந்தார். இக் காலத்தில் அவர் பல்வேறு மொழிப் பயிற்சிகளில் இறங்கி, பிரஞ்சு, கிரேக்கு, எபிரேயு, போர்த்துக்கீஸ், ஆதிமொழிகளில் ஓரளவு பாண்டித்தியம் பெற்ருர். பிற்றை நாளில் கிழக்கிந்திய மொழிகளில், சிறப்பாகச் சொல்லப்போனல், தெலுங்கு, சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் இவரைப் போலும் புலமை வாய்ந்த வர்கள் இல்லை என்னுமாறு விளங்கினர். எல்லாவற்றிற் கும் மேலாகத் தமிழ்மொழிப் புலமைக்கண் மிக்காராய் மிளிர்ந்தார்.

1706-ம் ஆண்டுமுதல் நான்கு ஆண்டுகள்வரை பெஸ்கி வேத சாஸ்திரம் கற்று, ஈற்றில் குருவாக அபிஷேகம் பெற்ருர். பெஸ்கி சுவாமியார், சமயத் தொண்டுகளில் ஈடுபட்டவர்; அத்தகைய சிறந்த சேவையை இந்திய நாட்டிற்கே அளிக்க வேண்டுமென்று எண்ணி விட்டார். சுவாமிகள் தமது விருப்பத்தை இயேசு சபை தலைவருக்குத் தெரியப்படுத்த, அவரும் மனமிசைந்து, மதுரைக்குச் சமயத்தொண்டராக அனுப்பிவைத்தார். உடனே பெஸ்கி சுவாமியார் போர்த்துக்கீஸில் உள்ள லிஸ்பன் துறைமுகத்தில் கப்பல் ஏறி, 1710-ம் ஆண்டின் முற்பாதியில், இந்தியா வந்து சேர்ந்து, மேற்குக் கரையில் உள்ள கோவாத் துறைமுகத்தில் இறங்கினர்.

# ௩. 18-ம் நூற்றூண்டின் கத்தோலிக்கர் நிலைமை

பெஸ்கி சுவாமியார் இந்திய கத்தோலிக்கருக்குத் தலைநகரமாய்த் திகழ்ந்த கோவாவில் சிறிது காலம் இளைப்பாறித் தம் பிரயாணக் களைப்பை மாற்றிக்கொண்டார். பின்பு, அவர் கரைக்கப்பல் ஒன்றில் ஏறி, மேல்கரை ஓரமாகப் பிரயாணஞ்செய்து கொச்சித் துறைமுகத்தில் இறங்கி, உள் நாட்டிலுள்ள அம்பலக்காடு என்னும் இடத்தை அடைந்தார். அவண் இயேசு சபைக் குருக்களைப் பயிற்றுவிக்கும் வேத சாஸ்திரக் கல்லூரி ஒன்று இருந்தது. சமயத்தொண்டிற்கு ஏற்றவாறு தம்மை ஆயத்தம் செய்து கொள்ளுமாறு, அக்கல்லூரியில் ஒரு மாதம் தங்கி, ஜெபத்திலும் தபத்திலும் ஈடுபட்டார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுக் கரையோரமாக யாத்திரை செய்து, மதுரைப் பகுதியிலுள்ள காமநாய்க்கன்பட்டி என்னும் சிற்றூரைத் தமது ஊழியக் களமாகத் தெரிந்துகொண்டார்.

18-ம் நூற்றூண்டில் மதுரைப் பகுதியில் திகழ்ந்த கத்தோலிக்கர்தம் நிலைமையைத் தெரிந்துகொள்வது நன்று. ஆதியில் கத்தோலிக்குச் சமயத்தைத் தழுவிய சிலர் ஐரோப்பிய பெயர்களைப் பூண்டு, தம் சமூக வாழ்க்கையிலும் ஐரோப்பிய பழக்க வழக்கங்களைப் பின்பற்றினர். போர்த்துகீசருடன் வாழ்ந்து வந்ததால் அவ்வாறு நேரிட்டது. கத்தோலிக்கு சமயம் எந்த நாட்டிலும், அந்நாட்டின் பழக்க வழக்கங்களைச் சத்தியத்திற்கு முரண்படாதிருப்பின் மாற்றுவதில்லையென மறந்தனர். இதனால் கிறிஸ்தவ சமயம் அந்நிய சமயமென்றும் கிறிஸ்தவர்களை அந்நியர்களான பரங்கிகள் என்றும் பலர் இகழ்வுடன் எண்ணலாயினர். ஒருவன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிவிட்டால், அவன் இறந்துவிட்டதுபோல் எண்ணப்பட்டா

வன்றி, ஜாதிப் பிரஷ்டம், சொத்துரிமை இன்மை முதலிய பல இன்னல்களுக்கும் ஆளாவதுண்டு. இந்த இடுக்கண்களையும், கிறிஸ்தவ வேதத்திற்கிருந்த அபவாதத்தையும் நீக்குமாறு, 1611-ம் ஆண்டில் மதுரையில் சமய குருவாயிருந்த ராபர்ட் நொபிலி (Robert de Nobili) என்னும் பெயர் பூண்ட சுவாமியார் ஓர் யுக்தி சூழ்ந்தார். அதன்படி அவர் பிராமணர்களுக்கு ஒப்பாகத் தமது வாழ்க்கை முறையைத் திருத்தியமைத்தது மல்லாமல் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளையும் நன்கு கற்றுத், தாம் இயற்றிய நூல்களாலும், திறம்படச் செய்த சிறந்த கவர்ச்சி வாய்ந்த சொற்பொழிவுகளாலும், பல பிராமணர்களையும் கிறிஸ்தவ சமயத்தில் சேர்த்திருந்தார். நொபிலி சுவாமியார் ஆற்றிய சமயத் தொண்டின் பயனை கக் கிறிஸ்தவ வேதத்தைத் தழுவியவர்களில் பலர் நாலா பக்கங்களுக்கும் சென்று தம் திருமறையைப் போதித்து வந்தனர். ஏறக்குறைய தென்னிந்தியா முழுவதும் பற் பல இடங்களில் கிறிஸ்தவ சமயமும் இடம் பெற்றது. எனவே, 18-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சுமார் இலட்சம் கிறிஸ்தவர்கள் இருந்தனர் என்பது மிகை யாகாது. சுவிசேஷ திருப்பணி நடைபெற்ற இடங்களுள்ளே மதுரையின் பெயரே புகழோசையுடன் மணம் பெறுவதாயிற்று. அதற்குக் காரணம் நொபிலி சுவாமியாரின் அரிய சேவையே யாகும். இந்த நொபிலி சுவாமியார் செய்த தொண்டுகளின் வெற்றிக்குக் காரணங்கள் எவை என்பதை பெஸ்கி சுவாமியார் துருவிப்பார்த்துக் கண்டுகொண்டார். அவர் கையாடிய முறைகளே சிறந்தன என்று துணிந்து, அவைகளைத் தாமும் மேற் கொண்டார்.

ஐரோப்பிய குருக்கள் இந்தியருடைய நடையுடை பாவனைகளை மேற்கொண்டு சுவிசேஷ ஊழியம் செய்தார்கள் என்று கேட்பது நமக்குப் பேரதிசயத்தை விளைக்க

லாம். ஏனெனில் இக்காலத்தில் அவர்களில் பெரும்பாலார் ஐரோப்பிய நடையுடை பாவனைகளையே அநுசரித்து வருகின்றனர். ஆனல் முற்காலத்தில் எல்லோரும் அப்படியில்லை. ஒன்றிரண்டு ஊழியர்கள் இந்திய நாட்டில் இந்தியராகவே வாழ்ந்து, எண்ணருஞ் சேவை புரிந்து, இந்நாளிலும் நமது நல் எண்ணத்தைக் கவர்ந்து நிற்கின்றனர். அக்காலத்தில் ஈண்டு சுவிசேஷ ஊழியம் செய்த மதக் குருக்களில் அநேகர் எளிய வாழ்க்கையே மேற்கொண்டு, இனக்காமனும் சனக்காமனும் எவரும் விரும்பி வரவேற்கும்படியான சேவைகள் செய்து வந்தனர் என்பதை திருபிக்கப், பல சான்றுகள் உள்ளன.

ஹென்ரி காட்டன் என்ற மேனுட்டு அதிகாரி ஒருவர் தாம் எழுதிய "புதிய இந்தியா" என்னும் நூலில், பின்வருமாறு வரைந்துள்ளார். "பழங்காலத்துச் சமயத் தொண்டர்கள் இந்திய மக்கள் மீது அளவு கடந்த பரிவும் பாசமும், உடையராய், அம்மக்களுக்கு ஏற்றவாறு நடந்து கொண்டனர். இக்காரணங்களினுல் அவர்களுடைய சேவைக்கு நல்ல பலன் கிடைத்தது. மக்களுடைய ஆன்ம நன்மைகளைக்கருதிப் பணியாற்றி வந்தமையோடு நில்லாமல், எல்லோருக்கும் தேவையான எல்லாவித உதவிகளையும் புரியலாயினர். அவர்கள் தாம் கற்பித்த போதனைகளைத் தம் சாதனைகளினுல் காட்டி வந்தபடியால், எல்லா மக்களுக்கும் அவர்கள் மிக்க ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்தனர்" என்பதே. மேலும், நொபிலி சுவாமியார் போன்ற அநேகர், தமிழ் மக்களது நடையுடை பாவனைகளையும், பேச்சு நடையையும் தங்களுடைய சொந்த நடைகள் போலக் கொண்டு, வாழ்க்கையில் அவர்களைப் போலவே ஒழுகி வந்தபடியால், சத்துருக்களும் மித்துருக்களும் அவர்களை நன்கு மதித்து, யாண்டும் முழுமனதோடு வரவேற்று மகிழ்வாராயினர். இந்தக் குழுவினருள் தலைசிறந்த குருவாக விளங்கினவர் வீரமாமுனிவர் எனினும் வழுவாகாது.

மதுரைப் பகுதியில் அக்காலத்தில் ஏறத்தாழ 12 குருக்களும் 100 உபதேசிமாரும் இருந்தனர். அவர்கள் திருப்பணி ஆற்றிய இடங்கள் பத்து அல்லது பன்னிரண்டு இருக்கலாம். குருக்கள் வதிந்த வீடுகள் பெரும்பாலும் ஓலைக் குடிசைகளே. கற்கோயில்களேனும் பள்ளிக்கூடங்களேனும், இதர நிலையங்களேனும் பல கிடையா. அங்கங்கே நெடுந்தூரங்களில் சிதறியிருந்த கோவில்களுக்குக் குருக்கள் காலால் நடந்து சென்று, சபையார்களைத்திரட்டி, செப ஆராதனை நடத்துவர்.

மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர், செஞ்சி முதலிய இடங்கள் சுதேச மன்னர்களாலும், மற்றும் இடங்கள் ஜமீன்தார்கள் பாளையக்காரர்கள் முதலியவர்களாலும் ஆளப்பட்டு வந்தன.

1700-ம் ஆண்டில், மதுரையில் இருந்து சமயத்தொண்டாற்றிய வினன்ஷியஸ் சாமியார் கூறுகிறபடி, அக்காலத்தில் இருந்த தமிழ் மக்கள் கிறிஸ்துவ சமயத்தை மிகவும் வேண்டியதொன்ருகக் கருதிக், கூட்டங் கூட்டமாக வந்து அதில் சேர்ந்து கொண்டனர். ஆகவே 5 ஆண்டுகளில் அவர் பதினோராயிரம் பேர்களுக்கு ஞானதீட்சை அளித்ததாகவும், மொத்தத்தில் 30,000 கிறிஸ்தவர்களும் 30 வேதக் கோவில்களும் இருந்ததாகவும் கூறுகின்ருர். தவிர, அந்நாளில் மக்களிடையே நிலவிய ஜாதித்துவேஷத்தைப் பற்றியும் எழுதிவைத்துள்ளார். கடவுளைப் பற்றிய உயரிய எண்ணம் இல்லாமையே ஜாதித் துவேஷத்திஞல் எழுந்த பல இன்னல்களுக்குக் காரணம் என்றும், கடவுளின் உன்னத அன்பையும் மனித சகோதரத்துவத்தையும் கிறிஸ்து மார்க்கம் விளக்கமுடன் காட்டியபடியால், இந்துக்களாகிய மக்கள் தங்கள் பண்டைப் பழக்கங்களை உதறித் தள்ளும் பொருட்டுக் கிறிஸ்து சமயத்தைத் தழுவினுர்கள் என்றும் எழுதியுள்ளார். கிறிஸ்தவக் கூட்டத்தாருள் அன்பும் ஐக்கியமும் நிலவிய தென்

றும், அதை மற்றவர்கள் பார்த்து மிகவும் வியப்பொடு பாராட்டினுர்களென்றும், அவர் கூறுவதிலிருந்து பெஸ்கி சுவாமியார் ஊழியம் நடத்த வந்த காலத்தின் தன்மையும் மக்களின் மனப்போக்கும் எத்தகையன என்பது ஒருவாறு அறியக்கிடக்கின்றது. பெஸ்கி சுவாமியாரே 1731-ம் ஆண்டில் எழுதிய ஒரு கடிதத்தில் அக்கால நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறுர் :— " இந்திய உடை அணிவது இந்நாட்டு வெப்பதட்ப நிலைகளுக்கு ஏற்றதே இல்லை. உண்ணுவது மரக்கறி உணவு. குடிப்பது சுத்தம் அற்ற தண்ணீர். போதாக்குறைக்குக் காயும் கதிரவன் கொடுமை. அனைத்தும் புதியராய் வரும் தொண்டர்களால் பொறுத்தற்கு அரியனவே என்றுலும் கடவுள் திருவருளால் காலாந்தரத்தில் இத்தொல்லைகள் எல்லாம் கொடியனவாகத் தோன்றுவன அன்று. ஆயிரக்கணக்கான மக்கள் எங்களைச் சூழ இருக்கின்றனர். அவர்கள் எங்கள் உபதேசங்களை விரும்பிக் கேட்கின்றனர். ஆனுல், நாட்டில் நிலவும் குழப்ப மிகுதியால் சமயத் தொண்டர்களாகிய நாங்கள் ஒன்று கூடி வசித்தபாடில்லை. ஒவ்வொரு குருவிடமும் 20,000 அல்லது 30,000 கிறிஸ்தவர்கள் ஒப்பிவிக்கப் பட்டுள்ளார்கள். ஓயாத வேலை—இளைப்பாறுதற்கான இடமில்லை. சிறிது அவகாசம் கிடைக்கும் வேளையில் யாராமொரு சுவாமியாரைச் சந்திக்க நேரின், வேலை நடுவில் இருந்த அவர் அதை விட்டுவிட்டு வந்து, நம்மை வரவேற்று, நம்மையும் தம்மோடு வேலை செய்யுமாறு அழைப்பார். பிரயாண வசதி யாண்டும் இல்லை; எங்கும் வழிப்பறி செய்வோரின் அட்டகாசம் உண்டு. நோயும் நொம்பலும் இல்லாத கிறிஸ்தவ வீடுகள் கிடையா. ஆகவே கணக்கு வழக்கு இல்லாத நிலையில் கடும் பணியாற்றி வருகின்றோம் " என்பன அவர்தம் வாயின் உண்மையான வார்த்தைகளே.

# ௪. சமயத் தொண்டுகளும் சார்ந்த சங்கடங்களும்

வீரமாமுனிவர் அறுபத்தேழு வயதுவரை தமிழகத்தில் தரித்திருந்து, சுமார் நாற்பது ஆண்டுகள் சமயத் தொண்டுகள் புரிந்தார்—தொடக்கத்தில் ஆறு ஏழு ஆண்டுகளாகத் தொண்டாற்றும் நிலவரமான நிலைக்களம் இன்றிப், பல இடங்களைச் சுற்றிச் சுற்றிப் போந்து, வேலைசெய்தார். கடைசியாகச் செந்தமிழ் நாடென்று அறிந்தோர் புகழும் பாண்டிய நாட்டில், தமிழ் மொழியை நன்கு பயின்ற பின்னர் பணியாற்றத் தலைப்பட்டார். திருநெல்வேலியில் உள்ள குருக்கள்பட்டியிலும், திருச்சிராப்பள்ளியிலுள்ள ஆவூரிலும், பின்னர் தஞ்சாவூரை அடுத்து உள்ள ஊர்களிலும் மாற்றி மாற்றித் தொண்டாற்றி வந்தார்.

அக்காலத்தில் நாட்டில் கலவரம் நிலவரமாயிருந்தது. கிறிஸ்தவர்களுக்குச் சலுகை அளிப்பார் யாருமிலர். தஞ்சாவூரில் அரசுபுரிந்த மராட்டியத் தலைவன் சாஜி என்பவன் அந்நாளில் கிறிஸ்தவர்களைப் பகைப்பதில் ஒரு நீரோவாக விளங்கினான் என்று கூறினுங் குற்றமில்லை. 1682 முதல் 1711 வரை முப்பது ஆண்டுகளாக அம்முடிமன்னன் கிறிஸ்தவர்களுக்குச் செய்த இன்னல்கள் பல, அவனால் சிறையிடப்பெற்ற குருக்கள் பலர். ஆகையால் கத்தோலிக்க குருமாரில் பலர் தஞ்சையைவிட்டு வெளியேறி, அங்கங்கே சபைகளை நாட்டத் தொடங்கினர். தஞ்சாவூர்க் கிறிஸ்தவர்கள் அனைவரும் அவ்விடத்தினின்று பெயர்ந்து, சோழமண்டலக் கரையில் ஒதுங்கினர். பெஸ்கி சுவாமியாரும் தஞ்சாவூரை விடுத்து, வேறிடம் செல்வாராயினர். சில காலம் சோழமண்டலக் கரையில் ஒதுங்கியிருந்த கிறிஸ்தவர்களிடையே சமயத்தொண்டுகள் ஆற்றிவந்த அவர் 1713-ம் ஆண்டு இறுதியில் முதல் முதலாகப் பணிவிடை செய்த திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டார்.

திருநெல்வேலி ஜில்லாவில் கயத்தாற்றுப்பாளையத்தைச் சார்ந்த குருக்கள்பட்டி என்னும் கிராமத்தில் அமர்ந்து திருப்பணி புரியலானார். வீரமாமுனிவரின் உண்மையுழைப்பின் பயனாகப் பலர் கிறிஸ்து மதத்தைத் தழுவினர். சுவாமியாரின் உயரிய போதனைகளும் உண்மை உழைப்பின் சாதனைகளும், கீழ்க்குலத்து வறியவரை யல்லாது, மேற்குலத்து அறிஞரையும் கிறிஸ்தவ சபைக்குள் கொண்டுவந்தன. அன்னவருள் சேர்வைக்காரன் ஒருவன் இருந்தான். இவன் கயத்தாற்றுப் பாளையத் தலைவனாகிய மழவராயனுக்கு மைத்துனன். சேர்வைக்காரன் கிறிஸ்தவர்களில் ஒருவன் ஆனான் என்ற செய்தி பாளையம் முழுவதும் பரவிற்று. தவிர, கயத்தாற்றுப் பூசாரி யொருவன் குடும்பத்துடன் வீரமாமுனிவரால் ஞானதீட்சை பெற்றுக் கிறிஸ்தவர் குழாத்தைச் சேர்ந்தான். இச்செய்தி பாளையம் முழுவதும் மிக்க பரபரப்பை உண்டாக்கிற்று. கிறிஸ்தவ சமய' விரோதிகள் வெகுண்டனர், பிராமண வேதியர்கள் வெருண்டனர். வீரமாமுனிவரை வெறுத்தனர். ஆயினும் மழவராயனும் சேர்வைக்காரனும் முனிவருக்குச் சிறந்த நண்பர்களாய்த் திகழ்ந்தமையால், மக்கள் முனிவருக்கு யாது தீங்கும் இயற்ற வேலாது பேதுற்று மயங்கினர். சொல்லம்புகளால் அவரை ஏசிப்பேசினரேயன்றி, வேறு பொல்லாங்குசெய்ய அவர்களால் முடியவில்லை.

இவ்வாறு சமயப்பணி தலைசிறந்து வளர்ந்தோங்கி வரும் நாளில், தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொண்டு, பக்கிரி உடை தரித்து, அக்கம்பக்கமெங்கும் அலைந்துகொண்டிருந்த ஆசாமி ஒருவன், குருக்கள் பட்டியை அடுத்த வடக்கன்குளத்தை வந்தடைந்தான். செல்லும் இடங்களுக்கு ஏற்ப, ஒல்லையில் ஓர் வேடம் புனைந்து, ஏழை மக்களை ஏமாற்ற வல்லனாகிய அக்கயவன் வடக்கன்குளத்திற்கு வந்ததுமுதல், நல்லவனும் ஒரு

கிறிஸ்தவன்போல் நடித்து, வயிறு வளர்க்கத் தொடங்கி னன். அவன் அவ்வூர்க் கிறிஸ்தவ உபதேசியாரிடம் சென்று தன்மீது பரிவுறுமாறு பரிந்து வேண்டினன். காலமெல்லாம் பாவியாக அலைந்த தன்னைப் பகவான் கருணைக்குப் பாத்திரவானாகச் செய்யுமாறு கண்ணீர் விட்டழுதனன். இயேசுநாதரே முழுமுதற் கடவுள் என்றும், அவராலே தான் பாவமன்னிப்பு உண்டு என்றும் தன் விசுவாசத்தை விகசிதமாக விளம்பினன். உடனே உபதேசியார் அவனைக் குருவானவரிடம் அழைத்துச் சென்றார்.

அவ்விடம் அப்பொழுது இருந்த குருவானவர் அவனுக்குக் கிறிஸ்தவ வேத உண்மைகளை விளக்கமாக எடுத்துரைக்க, அவன் அவற்றை மனமார ஏற்றுக் கொண்டவன்போல நடித்துச், சின்னாள்வரை அங்கே தங்கியிருந்தனன். பின்னர் அவன் ஒருநாள் இரவில் எவருக்கும் தெரியாமல் வீரமாமுனிவர் இருந்த ஊரை நோக்கி அகன்றுவிட்டான். அகன்றவன் செல்லும் வழி யில் இருந்ததும் கிறிஸ்துவர்கள் நிறைந்ததுமான ஒரு கிராமத்தில் தங்கி, அங்கே உள்ள கிறிஸ்தவர்களுக்குச் சமயபோதனைகளை மாறுபட்டமாகச் சாற்றினன். இவன் கூறிய விபரீத போதனைகளின் கருத்தை யுணரக் கூடா மல், அக்கிறிஸ்தவர்கள் திகைத்தனர். இயேசு சமயத் தையும் இஸ்லாமிய மார்க்கத்தையும் சமப்படுத்தி, வாய்க்குவந்தவாறு மாறுபாடான கொள்கைகளை உப தேசம் செய்த அவனை அவ்வூர்க் கிறிஸ்தவர்கள் தங்கள் உபதேசியாரிடம் உய்த்துச் சென்றனர். காவியுடை யணிந்த அப்போலிக் கிறிஸ்தவன், தான் ஒரு கிறிஸ்தவன் என்றும், இந்து, இஸ்லாம் முதலிய சமயங்களும் இயேசு சமயமும் ஒன்றுதான் என்றும், இரண்டக மொழிகளைப் பின்னும் சாற்றவே, உபதேசியார் மிகவும் சீற்றம் கொண் டார். பித்தன் மென்மேலும் பித்துரைகளைப் பிதற்றவே; ஊரார் சிலர் திரண்டுவந்து, அவனை நையப் புடைத்தனர்.

வேடதாரி அவண் நின்று கிளம்பிக், குருக்கள்பட்டியில் இருந்த வீரமாமுனிவரைக்கண்டு, அவருடைய மேற்பார்வையின்கீழ் இருந்த உபதேசியார், கிறிஸ்தவனுகிய தனக்குச் செய்த கொடுமைகளைக் கூறி முறையிட்டான். தன்னைக் கட்டிவைத்தடித்ததால் பட்ட காயங்களெனக் காட்டி, அவ்வுபதேசியாரைப் பழிக்குப்பழி வாங்குவதாக வஞ்சினங் கூறினன். தவிர, அவ்வுபதேசியார் தன்பாலுள்ள வேதநூல்களையும் கவர்ந்து கொண்டதாகக் குற்றம் கூறினன். வாயில் எழுந்த வன்புரைகளையும், மேனியில் எழுந்திருந்த வடுக்களையும், கண்ட வீரமாமுனிவர் போலித்துறவிபால் மெய்யன்பு கூர்ந்து, ஆறுதல் மொழிகள் கூறினர்; அகத்தின் நோவும் புறத்தின் நோவும் நீங்குமாறு மருந்தும் விருந்தும் அளித்து, அன்பார்ந்த அறிவுரைகள் கூறி, அவனை ஒருவாறு சாந்தப்படுத்தி அனுப்பினர்.

நல்லவன்போல் சென்றவன் பொல்லாத எண்ணங்களுக்கு ஆளாகிக், கிறிஸ்தவர்களுக்குக் கேடு சூழ்வானுயினன். அதற்கான சந்தர்ப்பத்தை அவன் எதிர்நோக்கி இருக்கும்பொழுது, பக்கத்து ஊரில் மதுரை நாயக்க மன்னரது சேனை வரிவசூலின் பொருட்டு வந்திறங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டு, உடனே அங்கே சென்றான். பக்கிரி வேடம் புனைந்த அத்துக்கடாக் கிறிஸ்தவன், மகம்மதியர் அடங்கிய அச்சேனை தங்கியிருந்த பாசறை முன்போய், அன்னவரை நோக்கி, "ஐயன்மீர், யான் ஒரு முஸல்மான். மகம்மதிய மத போதனைகளை மக்களுக்கு ஊட்டியதன் பயனுகக் கிறிஸ்தவர்களால் அடியும் உதையும் பட்டேன். அல்லாவின் பொருட்டு யான் அடைந்த எல்லா அவமானத்தையும் அறவே நீக்குவது உங்கள் கடனும். மகம்மதிய மத வைராக்கியம் படைத்த எனக்கு நேர்ந்த நிந்தையை நீங்கள் நீக்காவிடில், நபி நாயகத்தின் சீற்றத்திற்கு ஆளாவீர்கள். அன்றேல் நீங்களே மதத்துரோகிகள் ஆவீர்கள்". என்று அரற்றி

னன். படைவீரர் வேடதாரியின் கூற்றுக்களை நம்பிக் கிறிஸ்தவக் குருக்கள்மீது சீற்றங்கொண்டார். தம் மதத்தைச் சேர்ந்தவனுக்கு நேர்ந்த இன்னல்களை அகற்ற எண்ணங்கொண்ட அவ்வீரர் அவனைத் தம் தானைத் தலைவன்பால் அழைத்துச் சென்றனர். தானைத்தலைவன் வேடதாரியின் வாக்குமூலத்தை வினவியபொழுது, போலித்துறவி தானைத்தலைவனுக்குப் பொருளாசையுண்டாகும்படி பொய்யுரை கூறத் தொடங்கி, "ஐயனே, குருக்கள்பட்டியில் உள்ள குருக்கள்மார் பெரும் பொருள் புதைத்து வைத்துள்ளார். அக்குருக்களுக்குத் தலைவரான வீரமாமுனிவரிடம் உள்ள பொன்னும் மணியும் இன்ன அளவின என்று இயம்பல் ஏலாது. அத்துணை ஏராளமான பொருள்வைப்பே அன்னவர்தம் கொடுமைகளுக்கெல்லாம் காரணம்." என்று கதைகட்டி விட்டான்.

பணவெறி கொண்ட படைத்தலைவன் உடனே குருக்கள்பட்டியில் உள்ள கோயில் சொத்தைக் கொள்ளையடிக்கப் பிரியங்கொண்டான். அதுவே நாயக்க மன்னருக்கு ஆற்றக்கூடிய அரிய சேவை என்றுணர்ந்து, கண மேனும் காலந்தாழ்க்காது, இருநூறு காலாள் வீரரையும், நாற்பது குதிரை வீரர்களையும் குருக்கள்பட்டியை நோக்கிச் செலுத்தினன். மகம்மதிய பக்கிரிக்குப் பருவரல் செய்தவர்களைச் சிறைப்பிடித்து வருவதோடு, அவர்களது கோயில் செல்வங்களையும் கொள்ளைகொண்டு வருமாறு, தானைத்தலைவன் தன் படை வீரர்களுக்கு ஆணையிட்டான். படைக்கு வழிகாட்டியாகப் பக்கிரி ஆரவாரத்தோடு முன் செல்லாநிற்க, அவனைப் பின்சென்ற படைகள் பகல் படு வேளையில் குருக்கள்பட்டியைக் கிட்டின. சேனையின் ஒரு பகுதி பட்டியைச் சூழ்ந்து காவல் செய்ய, மற்றொரு பகுதி வீரமாமுனிவருடைய இருப்பிடத்தையும், திருக்கோயிலையும் சுற்றிக்கொண்டது. ஊரில் உள்ள மக்கள் யாவரும் உள்ளம் பதைத்தனர். படைக்கலந்தாங்கிய வீரர்களைக்கண்ட ஆடவரும் மனம் உடைந்தனர்.

வீதியில் நின்றவர்கள் வீட்டினுட் பாகத்தில் பாதிக்கும் அப்பால்போய் பதுங்கினர். வெறி பிடித்தன்ன நின்ற வீரர்களுடைய முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும், ஏன் என்று கேட்கவும் எவருக்கும் தைரியம் எழவில்லை. இவ்வாறு எல்லோரும் அஞ்சி அரற்றுவதைக் கண்ட அஞ்சா நெஞ்சன் சவரியடியான் என்னும் பெயரிய கிறிஸ்தவப் பெருமகன் தன் வீட்டினின்று வெளியேவந்து, சுற்றும் முற்றும் பார்த்தான். பக்கிரி அவனைக் கண்ணுற்றவுடனே மிகுதியும் களிப்புற்று, அவனே தன்னை மரத்தில் கட்டியடித்த மாபாவி என்று சேனைவீரர்களுக்கு அறிமுகம் செய்தான். இச்செய்தியைக் கேட்ட சேனைவீரர்கள் சவரியடியான் மேல் சாடி, அவ்வுபதேசிகர் அணிந்திருந்த ஆடைகளைக் கிழித்தும், ஆகத்தைக் காயப்பட அடித்தும் துன்புறுத்தவே, ஊரார் பூராவும் ஓவென்றலறி, கூவென்று கூக்குரலிட்டுச், சோவெனக் கண்ணீர் மழை சிந்திக் கொடுந்துயர் கூர்ந்தனர்.

இந்நிகழ்ச்சி 1713-ம் ஆண்டு, டிசம்பர் திங்கள், கிறிஸ்துவின் பிறப்புப் பண்டிகைக்குச் சற்று முன்புதான் நடந்தது. படையெடுப்பின்போது வீரமாமுனிவர் பண்டிகைக்குரிய பணிகளில் மிகுதியும் ஈடுபட்டிருந்தார். முனிவருக்கு உதவியாக ஞானேந்திரன் என்னும் பெயர் வாய்ந்த சமயபோதகர் ஒருவர் அங்கே வந்திருந்தார். படைவீரர்தம் முழக்கொலியைக்கேட்ட வீரமாமுனிவர் ஞானேந்திரரோடு கலக்கமின்றி வெளியேவந்து, வீரரோடு வார்த்தையாட விரும்பினார். அப்பொழுது முனிவரை முன்னமே அறிந்திருந்த வீரனொருவன், அவரை அன்புடன் நெருங்கி அளவளாவிச், சேனைத்தலைவன் நிறைவேற்றற்கிருந்த ஆணையை அறிவித்தனன். தலைவன் ஏற்றிருந்த ஆணைக்கு ஏற்பத் தானும் ஞானேந்திரனும் சிறையாகப் போகும் செய்தியை யறிந்த முனிவர் வியப்பும் திகைப்பும் எய்தினர். ஒரு துறவியைப் பிடித்துச்செல்ல இத்துணை வீரர்களும் வேண்டுமோ? என்று

வினவினர். தலைவன் இட்ட ஆணையை நிறைவேற்றுவதே தானைவீரர்களுடைய கடமையாகும் என்பதை அவ் வீரன் விளக்கமுடன் கூறினன். 'சரி' என்று சாற்றிய முனிவர் ஆலயஞ்சென்று, அமலமாதாவை வணங்கிக், கோவிலினின்றும் வெளியேறிக் காவிக்கோலந் தாங்கிய வராய்ப், பாசறையை நோக்கிப் பேசலற்று நடந்தார். ஞானேந்திரனும் உபதேசியாரும் படைகள் புடைசூழ்ந்து வரக் கைதிகளாகப் பின்நடந்து போனார்கள்.

மூன்று கைதிகளும் மோனமுடன் நடந்து, பாச றையைநோக்கிப் படருங்கால், படைத்தலைவன் பக்கிரி யைக் கூட்டிக்கொண்டு, குருக்கள்பட்டி சென்று, புதை யலைநாடி, திருக்கோயில், திருமடம், திருமடவளாகம் யாங்கணும் துருவித் துருவிப்பார்த்தும் யாதுங்காணாது மறுகி மறுகித் தவித்தான். தண்டத்தலைவன் அடைந்த ஏமாற்றத்தை உடனிருந்து அநுபவிக்க விரும்பாத பக்கிரி எங்கேயோ கம்பி நீட்டிவிட்டான். புதையலின் ஆசை காட்டிய போக்கிரி மறைந்தமை கண்டும் தானைத் தலைவனது ஆசை தணியவில்லை. ஆகலின், அவன் மேலும் மேலும் அவ்விடத்தை ஆராய்ந்ததன்பயனாகப் புதையல் ஒன்று கண்டான். மஞ்சட்காமாலை நோய் கொண்டவனுக்குப் பார்க்குமிடமெல்லாம் மஞ்சளாய்த் தோன்றுவதுபோல, அங்கே பொன் முலாம் பூசப்பெற் றுக் குவிந்துகிடந்த சொரூப வட்டங்களெல்லாம் அவனுக்குப் பொற்காசுகள் போலவே தோன்றலாயின. தானெடுத்த முயற்சிக்கு ஏற்பத் தனங்கிடைத்தமைக்குச் சாலவும் மகிழ்ச்சியடைந்த தண்டத்தலைவன், வீண் தண்டமாக அவ்வளவு வட்டங்களையும் கவர்ந்து, பெட்டிக் குள் வைத்துக்கொண்டு பெருமிதத்தோடு புறப்பட் டான். தலைவன் அவ்வாறெனின், சேவகர் சும்மா இருப் பார்களா? அவர்கள் குருக்கள்பட்டி நிலையத்திலுள்ள கோவிற் பொருட்களையும், கட்டுமுட்டுகளையும், ஆடை

யணிகளையும், வேண்டியவாறு கவர்ந்து அவ்வெல்லையைத் தாண்டியேகினர்.

தானைத்தலைவன் தன்முன் நின்ற போதகர் இருவரையும் விளித்து, அவர்கள் போதித்துவந்த கிறிஸ்து சமயக் கொள்கைகளைக் குறித்து வினவினன். ஆன்ற முனிவர் அண்டர்நாயகன் காட்டிப் போந்த அன்பு நெறியை, வம்பு நெறிக்கண் ஒழுகிய தானைத்தலைவனுக்கு மிக்க மகிழ்ச்சியோடு விரித்துரைத்தார். இயேசு பெருமானின் அன்பு நெறியின் உயரிய பண்புகளைக் கேள்வியுற்றும், அத்தானைத்தலைவன் மனம் பண்படற்கில்லாமையால், அவன் குருக்கள் இருவரையும் விலங்கிடுமாறு பணித்துச், சவரிஅடியானைச் சவுக்கினால் நையப் புடைக்கவும் ஆணை சாற்றினன். சவரிஅடியான் சாட்டையாலும் சவுக்கினாலும் அடிபடுந்தோறும் அவன் தன்னை உடனே மதமாற்றம் செய்துகொள்ளவேண்டு மென்றும், மடத்துக் குருக்கள் மறைத்து வைத்திருக்கும் புதையலைக் காட்டித்தர வேண்டுமென்றும் வீரரால் வற்புறுத்தப்பட்டான். அன்னவர்தம் மிரட்டலுக்கு அஞ்சி, உண்மை நெறியை மறுதலிக்கும் மனமற்ற சவரிஅடியான், சாட்டை அடிகளை மேல் தாங்க இயலாது மயங்கி மண்தரையில் வீழ்ந்தான். ஒருபால் ஞானேந்திரரும் இவ்வாறே பல வாதைகளால் துன்புறுத்தப் பெற்றும், அவராலும் புதையல் வெளி வந்தபாடில்லை. ஈதுணர்ந்த தானைத்தலைவன் ஏமாற்றத்தால் கொண்ட இறங்கிய தலையனாய், வீரமாமுனிவர் இறந்துபடுமாறு கொலைத்தண்டம் விதித்துத் தன் கோபத்தையும் ஒருவாறு ஆற்றி நின்றான்.

இப்பாசறை நிகழ்ச்சியை நேரிற்கண்ட கிறிஸ்தவர்கள் உடனே தலைதெறிக்க ஓடிச்சென்று, குருக்கள்பட்டியைக் குறுகி, ஆங்குள்ள கிறிஸ்தவர்களையெல்லாம் விளித்து, முனிவர்க்கெய்திய கொலைத்தண்டம் பற்றியும் ஞானேந்திரருக்கும் சவரிஅடியானுக்கும் நேர்ந்த கொடுமைகளைப்பற்றியும் கூறினர். இலை இலை போல நிலை

குலைந்த கிறிஸ்தவர்கள் யாவரும் உருத் வேதனையுற்றும், அருத கண்ணீர் பெருக்கியும், அழுது நொந்தனர். ஆங்குள்ள கிறிஸ்தவப் பெரியோர் இருவர் உட்படப் பலர் எழுந்து, தானைத்தலைவன் இருந்த பாசறை நோக்கிப் பதைத்து ஓடினர். இடையில் கொலைத்தண்டம் விதிக்கப் பெற்ற குருமுனிவர் பட்ட பாடு கொஞ்சம் அன்று. அப்பாடுகளுக்கு முடிவாகத், தானைவீரர்கள் முனிவரைக் கொலைக்களத்திற்குப் பிணித்துச் செல்லவும் ஆயத்தமாயினர். அந்நிலையில் குருக்கள்பட்டியினின்று போந்தார் இருவர் பாசறையுட் புகுந்தார். அவ்விருவரும் தங்கள் சொல்வன்மையாலும் குடிப்பிறப்பின் உயர்வாலும் தானைத்தலைவனோடு மெத்தெனவும் வெட்டெனவும் பேசி, முனிவரை விடுதலை செய்யும்படி வேண்டினர்.

இதற்குச் சிறிது முன்புதான் தானைத்தலைவன் தான் வாரிக் கொண்டுபோன சொருப வட்டங்களைப் பொற்கொல்லன் ஒருவனிடம், தாறுப்பரிட்சை செய்யும்படி கொடுத்து, அவைகள் தங்கம் அன்று எனக்கேட்டு, ஏமாந்து தயங்கியிருந்தான். முனிவர்க்காகப் பரிந்து பேசிய இருவர்தம் சொல்வன்மையையும் செல்வாக்கையும் கண்டு, முனிவர்க்கு விடுதலை அளித்தலே முறைமை என்று ஒருபால் எண்ணினன். பொற்காசுகளைக் கவர்ந்தோம் என்று மதுரை மன்னனுக்கு ஏற்கனவே சொன்னமையின் பெரும் பிழையை உணர்ந்து, மனம் மாழ்கினான். ஆதலின், தானைத்தலைவன் முனிவர்க்குத் தீங்கியற்றுவது தனக்கே தீங்கு விளைக்குமென்று ஓர்ந்து, அவர்தம் குற்றமற்ற பான்மையை அறிந்தவன்போல, அவரை விடுதலை செய்தான்.

கயத்தாறு என்பது குருக்கள்பட்டியை அடுத்த ஓர் பாளையம். ஆங்கிருந்து ஆட்சிசெய்த பாளையக்காரன் கிறிஸ்து சமயத்திற்குப் பெரும் விரோதி. அவன் தானைத்தலைவன் முனிவர்க்கு அளித்த கொலைத்தண்டக்

தின் செய்திகேட்டுக் களிப்பினால் குதித்தெழுந்து, சுற்றுப்புறங்களில் இருந்த கிறிஸ்தவர்களை முற்றிலும் வேரறுக்கும் செயலில் முனைந்தான். தன் பாளையத்தி லிருந்த இந்துமக்களைத் தட்டிக்கொடுத்து, எல்லோரை யும் கிறிஸ்தவர்களுக்கு விரோதிகளாக எழும்பும்படி செய்தான். அந்தோ! கிறிஸ்தவ மக்கள் எண்ணருங் கேடுகளுக்கு இடமாயினர். கயத்தாற்றுப்பாளையக்காரன் இழைத்த கொடுமைகள் வெளியே உள்ள இந்துக்களின் காதுகளிலும் எட்டின. கிறிஸ்தவர்களுடைய வீடுகளில் பல நெருப்புக்கு இரையாயின; திருடர்தம் திருவிளை யாடல்களுக்கு உரியனவாயினபல. கிறிஸ்தவர்கள் மத மாற்றம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தப் பெற்றும், அடி மிதி உதைபட்டும் பல நிர்ப்பந்தங்களுக்கு ஆளாயி னர். இத்தனை அட்டூழியங்களும் நடந்து கொண்டிருக் கும் பொழுதுதான் வீரமாமுனிவர் அத்தனை அநீதங்களை யும் காணக் கண்கூசியவராகச் சிறையினின்று விடுதலை யடைந்து வெளியேவந்தார். அவ்விடுதலை அவருக்கு எத்தகை இன்பத்தையும் அளித்திருக்க முடியுமா? இந்தக் காட்சிகளைக் காணுந்தோறும் அவர் தாம் உயி ரோடு விடப்பட்டதை உன்னி உன்னி மனம் உளைந்தார். கிறிஸ்து பெருமானுக்காகச் சிறந்த வேதசாட்சியாக மரிக்கும்பேறு, 'வாய்க்கெட்டியது கைக்கெட்டாமல் போயிற்றே' என்று வருந்தினர். மன்னுயிர்க்காகத் தன்னுயிர் நீத்த மகிபன் தனக்கும் அத்தகைய வாய்ப்பை அருளாமையை அகத்தில் நினைந்து நினைந்து முகம்வாடி னர். தம் வாழ்க்கையின் லட்சியம் நிறைவேறப்போகின் றதை எண்ணி, ஆனந்தங்கொண்டு இருட்டறையில் சிறைப்பட்டிருந்த வீரமாமுனிவர், விடுதலை அடைந் தமைகண்டு, படுதுயருள் ஆழ்ந்தார். எனினும் இறை வன் சித்தம் இன்னும் சிலகாலம் மாசற்ற தொண்டுகளை அவனுக்கு ஆற்றும்படி உள்ளது என்று, ஒருவாறு

உள்ளந் தெளிந்து, உயரிய புத்துணர்ச்சி யுற்றுத், திருப் பணிகளில் திரும்பவும் ஈடுபடுவாராயினர்.

முனிவர் தம் இருக்கையை அடைந்தும் ஆங்கு அவருக்கு இருக்கை கொள்ளவில்லை. கிறிஸ்தவ சமய விரோதிகள் கயத்தாற்றுப்பாளையக்காரனாகிய லோகநாதனின் துணைகொண்டு, கிறிஸ்தவர்களுக்கு மேலும் மேலும் இன்னல் இழைத்துக் கொண்டுதான் இருந்தார்கள். கிறிஸ்தவர்கள் இருந்த இடங்களிலெல்லாம் அவர்கள் வீண்சண்டைகளையும் கலகங்களையும் கொள்ளைகளையும் நடத்திக்கொண்டுதான் இருந்தார்கள். இகல் காரணமாகத் தகர்க்கப்பட்ட கோவில்களை மறுபடியும் கட்டுவதற்கு அநுமதி அளிக்க லோகநாதன் மறுத்தான். ஈவு இரக்கமில்லாத கயத்தாற்றுப் பாளையக்காரனின் நெஞ்சம் நல்வழியில் திரும்புமாறு கர்த்தனைக் கெஞ்சி வேண்டிக்கொண்டு, அவன்பால் முனிவர் சென்று தம் குறைகளை எடுத்துக்கூறினர். 'கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே' என்னும் பழமொழியை மெய்ப்பிக்கவந்த பாளையக்காரன் மேலும் அட்டூழியங்கள் செய்யவே கங்கணம் கட்டி நின்றான். முனிவர் கூறிய பரிவுமொழிகளுக்குச் சிறிதேனும் இரக்கங் காட்டவில்லை. "கிறிஸ்தவக் கோயில்களை இடிப்பதும் கிறிஸ்தவர்களுக்கு இன்னல்கள் இழைப்பதும் தவறாயின், உங்கள் கடவுள் எனக்குச் செய்யும் கேடுகளைச் செய்யச் சொல்வீராக. இந்து மதத்தை எவ்வகையானும் பரவச் செய்வதும், பிற மதங்களை அறத்தொலையச் செய்வதுமே என் கடன்" என்று லோகநாதன் வஞ்சினம் கூறினன்.

> **"மறந்தும் பிறன்கேடு சூழ்க சூழின்**
> **அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு"** என்னும்

தெய்வப் புலவர் வாக்கை அறவே மறந்து, நாளும் நாளும் கிறிஸ்தவர்களுக்குக் கேடிழைத்த லோகநாதன் ஓராண்டிற்குள்ளேயே, யாது காரணத்தாலோ மதுரை

மன்னனது கோபக் கனலுக்கு இலக்கானான். சிறைவாச தண்டனையைச் சிறிது காலம் அநுபவித்த அப் பாளையக்காரன், பின்னர் நாட்டைவிட்டே ஓட்டவும் பெற்றான். யானை தன் துதிக்கையால் தன்மீது மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டவாறு, லோகன் தான் இயற்றிய கேடுகளால் தனக்குத் தானே கேட்டைத் தேடிக்கொண்டான்.

பாளையக்காரன் தொலைந்த காரியம் பெரிய களை எடுத்தது போலாயிற்று. அந்நிலப் பகுதியில் கிறிஸ்தவமாகிய பயிர் செழித்தோங்குவதற்கு இடமாயிற்று. அது நோக்கிக் கிறிஸ்தவர்கள் யாவரும் களிப்பில் மூழ்கினர். முனிவரும் தம் திருப்பணிகளை இடையறாது இடையூறின்றி இயற்றத் துணிந்தார். இடிந்து தகர்ந்த கோவில்களைப் புதுக்குவித்தார். மிடியால் வாடிய மக்களைத் தேற்றினார். பல்வேறு இன்னல்களால் பேதுற்றுப் பின்வாங்கியிருந்த மக்களை மீண்டும் நன்னெறிக்கண் கொண்டு சேர்த்தார்; இடுக்கண்களால் தளர்ந்து நடுங்கிய மக்களை மிடுக்குடையராக்கினர். மற்றும் பல்வேறு இடங்களுக்குச் சென்று இயேசு சமயத்தைப் பரவச் செய்ய வேண்டும் என்றும் தீர்மானித்தார்.

# ரு. வேறிடங்களில் ஆற்றிய விழுமிய தொண்டுகள்

1714-ம் ஆண்டின் முற் பகுதியில் வீரமாமுனிவர் கயத்தாற்று வட்டத்தினின்று வெளியேறினர். ஏறக் குறைய ஓராண்டளவு அவர் ஓய்வு எடுத்துக்கொண்டார். அக்காலத்தில் அவர் வெகு நிம்மதியுடனிருந்து தமிழில் உள்ள இலக்கண இலக்கிய நூல்களைக் கற்று ஆராய்ந்தார். பெருங்காவியமாகிய தேம்பாவணியை எழுதுவதற் கேற்ற அறிவாற்றல் பெற்று, அதனை உருவாக்கலும் செய்தார். இனிய செந்தமிழ் நடையில் வசனம் எழுதும் வன்மையும் பெற்றார். பரந்த தமிழ் நாட்டிற்கும் சிறந்த தமிழ் மொழிக்கும் உரந்தரு தொண்டாற்றும் வரந்தரும் புலமை எய்தி நின்றார். இவ்வாறு அவர் தம்மை வருங் காலப் பேரும் பணிகளுக்கு ஆயத்தம் செய்துகொண்டு யாண்டேனும் பாய்வதற்கு எத்தனித்தார்.

## 1. ஏலாக்குரிச்சி

வீரமாமுனிவர் தம் ஓய்வுக்குப்பின் இராமநாத புரத்தில் தொண்டாற்றும்படி விதிக்கப் பெற்றார். அக் காலத்தில் இராமநாதபுரத்திற்கும் தஞ்சாவூருக்கும் இடையில் நடந்த சண்டை சச்சரவுகளால் பெருங் குழப் பங்கள் விளைந்தன. ஆகையால் ஏனையா எவரும் உயிர் இழப்புக்கு அஞ்சி ஆங்குச் சென்றாரிலர். எனவே, 1716-ம் ஆண்டில் வீரமாமுனிவர் தஞ்சாவூரிலே, கொள்ளி டத்தின் கரையை அடுத்து அமைந்திருந்த ஏலாக்குரிச்சி என்னும் கிராமத்தை அடைந்தார். ஏலாக்குரிச்சியில் இருந்துகொண்டு தஞ்சாவூர்ப் பகுதியைச் சார்ந்த சபை களை எல்லாம் கவனிக்கும் பொறுப்பு முனிவர்மேல் விழுந்தது. ஆங்கும் கிறிஸ்தவர்களுக்கு நல்ல காலம் இல்லை. முனிவருக்கு முன் இருந்த குருவானவர் சிறை வாசம் செய்துகொண்டிருந்தார். கிறிஸ்தவர்களுடைய பணங்களைப் பறிப்பதும் கோவில்களைக் கொள்ளையடிப்

பதும், சொத்து சுகங்களைச் சூறையாடுவதும் ஆங்குள்ள பிறமதத்தாரால் மிகவும் சகஜமாக நடந்து கொண்டிருந்தன. வெல்லூரில் மகம்மதிய சமஸ்தானத்தில் மருத்துவராயிருந்த ஹிலாரி என்பவர் கிறிஸ்தவர்கள் படுந்துயரங்களை நவாப் பக்கர் ஆலிகானிடம் நன்கு எடுத்துக்கூற, தஞ்சாவூரிலிருந்த மராட்டிய அதிகாரிகள் சிறைப்பட்டிருந்த குருவானவருக்கு விடுதலை அளித்தார்கள். அது முதல் இந்துக்களும் பிறரும் கிறிஸ்தவர்களை இடுக்கண் செய்யாது வாளா இருந்தனர்.

வீரமாமுனிவர் ஈண்டு வருமுன் கிறிஸ்தவர்கள் யாவரும் திக்கற்றவர்கள் போலவே திண்டாடிக் கொண்டிருந்தனர். புளியக்குடியில் இருந்த கிறிஸ்தவ ஆலயமும் இடிந்து கிடந்தது. தஞ்சாவூரை ஆண்டுகொண்டிருந்த மராட்டிய மன்னன் சரபோஜியின் பகைமைக்கு அஞ்சிய கிறிஸ்தவ மக்கள் அனைவரும் புளியக்குடியை விட்டு வெளியேறி, எல்லைக்கு வெளியே இருந்த ஏலாக்குறிச்சி என்னும் ஊரில் குடிபுகுந்து வாழ்ந்தனர். வீரமாமுனிவர் அகதிகளாகவந்த அம்மக்கள் நடுவில் சில காலங் கழித்துப் பல்வாறு திருப்பணிகள் ஆற்றி, அவண் ஓர் நிலவரமான திருச்சபையின் கிளை வேரூன்றற்கு அடிகோலினர்.

முனிவர் நாட்டிய சபைகளில் ஏலாக்குறிச்சி என்று மறு பெயர் பெற்ற காவலூர்ச்சபை மிகவும் முதன்மை வாய்ந்தது. 1734-ம் ஆண்டில் மழவராயன் அரியலூரில் திருமலைராயன் கீழ் சிற்றரசனாய் இருந்தான். அக்காலத்தில் அவனது ஆளுகையின் கீழ் அமைந்திருந்த ஏலாக்குறிச்சிக்கு அருகில் திருக்காவலூரில் அவன் இயேசு சமயத்தார் திருக்கோயில் கட்டிக் கடவுளை வழிபட்டு வருமாறு சாசனவாயிலாக நிலமொன்று தானம் செய்திருந்தான். அதன்கண் ஓர் சிறிய ஆலயம் அமையப் பெற்றிருந்தது. வீரமாமுனிவர் ஆங்கு அன்னைமரி

யம்மையாரின் அழகிய உருவத்தோடு கூடிய ஆலய மொன்று கண்டார். அதுவே திருக்காவலூர்க் கோயில் என்னும் பெரும் பெயர் படைப்பதாயிற்று. தன்னை யடைந்தாரை அன்னையினும் அன்பு கூர்ந்து காக்கவல்ல மரியம்மையாருக்கு 'அடைக்கலமாதா' என்னும் திரு நாமத்தை முனிவர் சூட்டினார். தஞ்சாவூர் மன்னன் சரபோஜியின் பகைமைக்கும் பகைச் செயல்களுக்கும் பயந்து, ஏலாக்குறிச்சியை அடைக்கலமாகப் புகுந்த கிறிஸ்தவர்கள் இப்பெயரைக் கேட்ட அளவில் அதன் தகுதியை நோக்கி அம்மாதாவின்பால் மிகு பேரன்பும் பக்தியும் கொண்டனர். அடைக்கலமாதாவின் பெயரும் புகழும் எட்டுத்திசை அடங்கலும் பரவலாயின. அடைக் கல மாதாவின் சரண்களையே அரண் எனக்கொண்டு, அவள் அடியினின்று நொடியும் விலகாது, பக்தியில் ஆழ்ந்து பதிந்தார் அடிகளாகிய வீரமாமுனிவர். நெஞ் சத்தில் எழுந்த பக்தியால் முனிவர் பரவசமுற்று, அடைக்கல மாதாவின் திருவடிகளுக்கு என்றும் வாடாத பாமாலைகளைச் சாற்ற எண்ணி அடைக்கல நாயகிமேல் வெண்கலிப்பா, அடைக்கலமாலை, திருக்காவலூர்க் கலம் பகம் முதலிய அரிய பிரபந்தங்களைப் பாடியருளினார். முதலில் ஏலாக்குறிச்சி சபையை உறுதிப் படுத்தியது மன்றி, அவ்விடத்திற்கு மீண்டும் மீண்டும் போந்து, முனிவர், முடிப்பதற்கரிய தொண்டுகள் செய்து முடித் தார். ஆலய வழிபாடு செய்யவும் பக்தியில் ஆழ்ந்து பாடி மகிழவும் அத்தலத்தையே அடிகள் எக்காலும் மிகப்பற்றுடன் நோக்குவார்.

## 2. கோணான்குப்பம்

முனிவர் ஏலாக்குறிச்சியைவிட்டு வெளியே இருந்த காலங்களில் ஒன்றில், விருத்தாசலத்திற்கு ஆறு மைல் தூரத்திலிருந்த கோணான்குப்பம் என்னும் சிற்றூரில் திருப்பணி ஆற்ற வந்தார். அங்கே இருந்த சபை மிகவும்

தளர்ச்சியுற்றிருந்ததைக் கண்டார். பொது மக்கள் மனத்தில் ஊக்கமும் கிறிஸ்தவ சபைக்கு ஆக்கமும் உண்டாகுமாறு அங்கே ஆலயம் ஒன்று அமைக்க எண்ணினர். அடிகள் ஓவியத்திறம் படைத்தவராதலின், அன்னையின் அழகியதோர் ஓவியம் தீட்டி அனுப்ப, அதற்கொப்பான திருச்சுருபம் ஒன்று கைவரப் பெற்றார். அன்பின் அன்னையின் திருவுருவம் எழுந்தருளி விளங்குமாறு அழகிய ஆலயமொன்று கண்டார். அணி செறிந்த தமிழ்நாட்டு மாதருடை அணிந்து, ஆருயிர்க்கு அமுதம் அன்ன மீட்பை அருளிய மகவையும் கையேந்திய கோலத்தில் அமைந்த மாதாவின் திரு வுருவத்தைக்கண்டு பலரும் பரவசமாயினர். மாதாவின் பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்தனர். மாதாவின் புகழ் மாநிலம் எங்கும் மணம் வீசிற்று. அன்னையின் அருமை பெருமை நோக்கிய அடிகள் அவ்வம்மையாரைப் பெரிய நாயகி என்று அன்புடன் அழைத்தனர், மனம் குழைந்தனர். அன்னையருளிய அற்புதச் செயல்களால் மக்கள் அனைவரும் அவளை அன்புடன் பாராட்டி, ஆண்டுதோறும் பெருங் கூட்டமாகக் கூடி விழாக் கொண்டாடினர்கள். கோனான் குப்பத்தில் எழுந்தருளியிருந்த மாதாவின் துணை கொண்டே மாமுனிவர் தேம்பாவணியாந் தெய்வ திருக் காவியத்தைப் பாடத் தொடங்கினர். அக்காவியம் அம்மையின் திருவருளால் செம்மையின் முற்றும் பெற்றது.

### 3. ஆவூரும் ஆச்சண்டையும்

ஆவூர் தொண்டை நாட்டில் உள்ளது. ஆங்கு ஓர் கிறிஸ்தவ சபை ஓங்கியிருந்தது. மைக்கேல் என்னும் பெயரிய முதிய சுவாமியார் ஒருவர் அங்கே பெயரளவில் தங்கி இயன்ற அளவில் திருப்பணி ஆற்றி வருவார். ஆனல் வீரமாமுனிவர் ஆண்டு அடிக்கடி ஏகி, அவர்க்கு உதவி புரிவார். 1732-ம் ஆண்டு மகம்மதியர் தஞ்சாவூர்ப் பகுதியுள் புகுந்து படையெடுப்பாராயினர். மொக

லாயர் படையெடுப்பை எதிர்க்கவேண்டி, புடையிருந்த அரசர்களெல்லாம் ஆவூரை அடைந்தனர். தொண்டைமான் சேனை, மதுரைச் சேனை, மைசூர்ச் சேனை, தஞ்சாவூர்ச் சேனை, மொகலாயர் சேனை ஆக ஐந்து சேனைகளாலும் அந்நாடு கசகூழமாயிற்று. மக்கள் பட்ட மாபெருந் துயரங்கள் தக்கவாறு எடுத்துக்கூறவும் தகுதியற்றனவாயிருந்தன. சென்ற விடந்தோறும் சேனைகள் ஒழுங்கு முறை தவறி நடந்தமையால் அந்நாட்டு மக்கள் பீதியால் பீடிக்கப்பட்டனர். இவ்வல்லல்கள் நடை பெறற்கு நடு நாயகமாய் ஆவூர் அமைந்ததென்றால் அன்னவர் அடைந்த எல்லையற்ற தொல்லைகளைச் சொல்லவும் முடியுமோ? இந்நிலை ஆயினும் வீரமாமுனிவர் தம் வீரத்தை நெகிழவிடாராய்க், கிறிஸ்தவர்களுக்கு அநியாயமாக யாதாம் அவதிகள் நேருந்தோறும் தைரியமாகச் சேனை வீரர்களிடம் சென்று, வெகு சாதுரியமாகப் பேசி, அவ்வவதிகளை விலக்கி விடுவார். தன்னுயிரைத் திரணமாக மதித்து வாய்மை குன்றாது வாக்காடும் முனிவர் தம் திறத்தை நோக்கி, வீரரும் படமொடுங்கிய பாம்புபோலாகி, வாளாச் சென்றொழிவர். இவ்வாறு ஆவூர்க் கிறிஸ்தவர்களின் நலங்களையும் திருச்சபையின் நலங்களையும் கோரி, வீரமாமுனிவர் வெகு தீரமுடன் பணியாற்றி வருங்காலத்தில் விபரீத சம்பவமொன்று விளைந்தது.

ஒரு நாள் ஆவூரை அடுத்த கள்ளர்களில் சிலர் மகம் மதிய வீரர்கள் தங்கியிருந்த பாளையத்துட் சென்று, பல காளைகளையும் பசுக்களையும் கவர்ந்துகொண்டு காடேகி விட்டனர். களவுபோன செய்தியைக் காலையில் அறிந்த வீரர்கள் 'ஆக்களைக் கவர்ந்து சென்றவர்கள் ஆவூர்க் குடிமக்களே' என்று முடிவுகட்டினர். சீற்றம் ஓங்கிய சேனைவீரர் பதிலுக்குப் பதில் சூறையாடவும், ஊரைக் கலக்கவும் எண்ணங்கொண்டு, சரேலென ஊருள் புகுந்

தனர். அகப்பட்டோரை யெல்லாம் அகங்கலங்கப் பேசி வைதனர். உழைப்பட்டோரை யெல்லாம் உதைத்தனர். ஊரையே அழிக்க உன்னினர். பார்த்தார் வீரமா முனிவர். வேர்த்து விறுவிறுக்க வீரர்கள்பால் ஓடோடிப் போயினர். 'ஆலூர்க் குடிகள் ஆக்கள் திருடிய கள்வரல்லர்' என்று உரம்படக்கூறித் திறம்பட வாதித்தார். ஆயினும், முனிவர் கூறிய வாய்மையுரைகள் வன்னெஞ்சினர் மனத்துள் பாயவில்லை. "கள்வர் பொருட்டுப் பரிந்துபேசும் கருணை வாய்ந்த துறவியே களவுபோன காளைகளையும் பசுக்களையும் திரும்பத்தரல் வேண்டும். அல்லது, அன்னார் தம் தண்டத்தலைவன் பாற் சென்று போதிய சமாதானம் செய்தல் வேண்டும்" என்று வீரர்கள் வற்புறுத்தினர்.

'சரி, நானேவந்து, இந்த அவமாதத்தை ஆட்சேபிக்கிறேன்' என்று தைரியநாதர் கூறிய அளவில், வீரர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, ஒரு கைதியை நடத்திச் செல்வதுபோல கூட்டிக்கொண்டு போயினர். வீரர்கள் விளம்பிய வெருள் மொழிகளைக்கேட்டு வெருளாமலும் வெற்றுரைகள் கூறாமலும் முனிவர் முன்னுறச் சென்று பாசறை வாயிலைக் குறுகினார். முனிவரை இட்டுச் சென்ற வீரர்கள் அவரை வெளியே விட்டுவிட்டுத், தண்டத்தலைவனிடம்போய் சொல்லவும் ஏலாமல் மெல்லவும் முடியாமல் நெடுநேரம் நின்றனர். அத்துணை நேரமும் வெளியே வெயிலவன் கொடுமையைத் தாங்கிக் கொண்டே, முனிவர் மனங்கோணாது நின்றார். சின்னேரம் பின்னர் உள்ளேயிருந்துவந்த ஒரு சேவகன் முனிவர் பால் சென்று வாக்குமூலம் வாங்கிக்கொண்டு போனான். அவ்வாக்குமூலத்தைப் படித்த தானைத்தலைவன், உண்மையை ஓர்ந்து அறியும் உணர்வினன் ஆதலின், முனிவரைக் கொண்டுவந்த வீரர்களை நோக்கி, "கள்ளரைக் கொண்டுவர இயலாத நீங்கள் ஓர் வெள்ளையரையோ

கொண்டுவந்தீர்கள் நன்று, நன்று நும் தொழில். இது உங்கள் இயற்கைக் குணமன்றோ! மாடு கவர்ந்த கள்வரை விட்டு, வீடுதுறந்த முனிவரைக் கொண்டுவந்து, குற்றமும் சாட்டுகிறீர்கள். அம்மம்ம அறக்கொடுமை. அத்துறவியை உடனே போகவிடுமின்" என்று அதட்டினன். தானைத்தலைவனது தீர்ப்பைக் கேட்ட முனிவர் ஆனந்தம் எய்தி, அப்பெருந்தகையாளனது திருமுகங்காணும் கருத்தினைத் தெரியப்படுத்தினர். தலைவன் முனிவரது வேண்டுகோட்கு இசைந்து, அவரை வரவேற்று உரையாடினன். வார்த்தையாடலின்போது சேனைத்தலைவன் வீரர்கள் ஆற்றிய அடாத செயல் தன் ஆணையின்றியே நடந்தது என்றுகூறி, அதன்பொருட்டுத் தன் வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டான். அதன்மேல் இருவரும் மனமகிழ்ந்து உரையாடியபின், சேனைத்தலைவன் முனிவருக்கு இழைத்த இன்னலுக்கு ஈடுசெய்வான்போலப் பரிசில்களும் கொடுத்தனுப்பினன். அப்பொழுது முனிவர் மகம்மதிய சேனாதிபதியாகிய சந்தா சாகிபைத் தனக்கு அறிமுகம் செய்து வைக்குமாறு கேட்டுக்கொண்டார். தண்டத்தலைவன் அதற்குச் சம்மதித்துச் சந்தரைக் காணத்தக்க செவ்வியும் குறித்தான். அங்ஙனம் குறித்தபடியே முனிவர் ஒரு நாள் சந்தரைக்கண்டு பேசும் சந்தர்ப்பமும் கிடைக்கப் பெற்றார். தைரியநாதர் தம் குறைகளைச் சந்தரிடம் சாங்கோபாங்கமாக எடுத்துரைத்து, இயேசு சமயத்தாருக்கு மகம்மதிய வீரர்களால் எத்தகைய கேடுகளும் நேராவண்ணம் கடைக்கண் பார்த்தருள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். வீரமாமுனிவர் பேசிய நற்றமிழ்ச் சுவையிலும் பேச்சுத்திறத்திலும் ஆச்சரியமும் ஆனந்தமும் எய்திய சந்தர் அவரது வேண்டுகோட்கு இணங்க வேண்டுவார் ஆயினர். அந்நியராயினும் அழகிய தமிழறிஞராகிய அண்ணலின் அன்பு தனக்கு எக்காலும் இருப்பது நல்லது என்று சந்தர் எண்ணினர். அடிகளும் அமலன் அருளாலே

சந்தருடைய நட்பு கிடைத்ததை மிகவும் நல்லதென் றுள்ளி நனிமகிழ்ந்தார்.

தண்டத்தலைவன் முனிவர்க்கு வழங்கிய பரிசில்களைக் காண்டலும், வீரர்கள் யாவரும் முனிவர்பால் மிகவும் மரியாதையுடன் ஒழுகத் தொடங்கினர். மேலும், முனி வர்க்குச் சந்தாசாகிபோடு பழக்கமும் தொடர்பும் ஏற் பட்டதை வீரர்கள் கண்கூடாகக் காணலும், அவர்கள் முனிவரை முன்னினும் மதிக்கத் தலைப்பட்டனர்.

சந்தாசாகிபும் முனிவரும் பன்முறைகண்டு பழகியது காரணமாக, இருவருக்கும் இடையிட்ட நட்பு பிறைச் சந்திரனைப்போல் இன்பமுடன் பெருகுவதாயிற்று. சாகிப் துறவிபால் கொண்ட அன்புக்கு அறிகுறியாக, இயேசுமத குருக்களுக்கும் உபதேசிமாருக்கும் மகம் மதியப் படைகள் எச்சிறிய இன்னல்களும் இயற்றல் கூடாது என்று கண்டிப்பான ஆணையொன்றிட்டான். முனிவரும் அவருடன் சேர்ந்தாரும் தாம் முன்னிய இடங்கட்கெல்லாம் செல்லவும், அங்கங்கே இயேசு சமயப் பிரசாரம் இடையூறின்றி நடைபெறவும் உத்தர விட்டு, அதனை எழுத்து மூலமாய் உறுதிப்படுத்தும் சாசனங்களையும் நண்பருக்கு நல்கினன். முனிவர் சந்தா சாகிபின் பெருந்தன்மைக்கு மகிழ்ந்து, அவனுக்குத் தம் நன்றியையும், எல்லாம் வல்ல இறைவனாகிய இயேசு பெருமானின் இன்னருள் பேற்றினை எண்ணி, அவருக்குத் தோத்திரத்தையும் செலுத்தி, இறும்பூது எய்தினர்.

வடதேசத்து மகம்மதியனாகிய சந்தாசாகிபோடு கொண்ட தொடர்பைப் பலமுறுத்துமாறு முனிவர் இந்துஸ்தானியையும் பாரசீகத்தையும் மூன்றே மாதங் களில் கற்று முடித்தார். இந்துஸ்தானியிலும் பாரசீகத் திலும் உரையாடலைக்கண்ட முனிவர்பால் சந்தாசாகிப் இரண்டறக் கலந்த அன்புக்கு உரியனாயினன். முனி வரது மாசற்ற பண்புகளையும், உயரிய நோக்கங்களையும்,

பற்றற்ற வாழ்க்கை நிலையையும் சாகிப் மிகவும் நுணுக்கமாக அறியக் கூடியவனுனன். முனிவரின் மாட்சியை நன்குணர்ந்த சந்தர் அவருக்கு 'இஸ்மதி சந்நியாசி', என்ற சிறந்த பட்டத்தை அளித்து, அவர்பால் தனக்குள்ள மதிப்பைச் சிறந்தவகையில் காட்டினன். சந்தா சாகிப் பட்டத்தோடு பல்லக்கும் பரிசிலாக அளித்துப் பெருமைப்படுத்தினன் என்றும் சில வரலாறுகள் கூறுகின்றன. போதாக்குறைக்கு சந்தர் முனிவருக்கு உக்களூர், மால்வாய், அரசூர், நல்லூர் ஆகிய நான்கு கிராமங்களையும் சர்வமானியமாக அளித்து, அவருக்குத் திவான் உத்தியோகமும் உதவினன் என்றும், ஒருசில வரலாறுகள் வரையப்பட்டுள்ளன.

சந்தாசாகிப் தமிழ்நாட்டில் சேனுதிபதியாய் இருந்த காலமெல்லாம் தைரியநாதர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். வீரமாமுனிவர் ஆற்றிவந்த திருத்தொண்டுகள்யாவும் இடையூறுகளின்றி நடைபெறலாயின. ஏனைய படைகளாலும் மக்களாலும் இடையூறுகள் நேரின், மகம்மதிய வீரர்கள் யாவரும் வீரமாமுனிவருக்குப் பக்கத் துணையாய் நின்று அவ்விடையூறுகளை விலக்கினர். சந்தாசாகிப் ஓரோர் வேளைகளில் முனிவருக்குச் சிறிது பண உதவியும் செய்துவந்தான். சந்தர் தென்பகுதியில் உள்ள திண்டுக்கல், அம்மைநாய்க்கனூர் முதலிய இடங்களில் பேரரும் வெற்றிப் போர்கள் கண்டு, திருச்சிராப்பள்ளியில் சேனுதிபதியாய் இருக்கும் வரையில், சொல்லப்போனல் 1738 கி. பி. வரையில், அவன் வீரமாமுனிவருக்குப் பேருதவி புரியும் கேண்மை பூண்டிருந்தான் என்பதுமட்டும் உண்மையேயாகும்.

### 4. தூத்துக்குடி

1737-ம் ஆண்டுவரை திருச்சிராப்பள்ளியிலும், அதனையடுத்த குணம்பட்டியிலும் தொண்டாற்றிய வீரமாமுனிவர் பின்னர் தென்பாரிசக் கோடிக்கு வரவேண்டிய நிமித்

தம் ஏற்பட்டது. வடநாட்டு மராட்டியப் படையெழுச்சி ஒன்று தென்பகுதியை நோக்கிப் போந்து, சமர் உடற்றத் தொடங்கிற்று. ஆற்காட்டு அரசன் மராட்டியத் தண்டுகளை எதிர்த்து வெல்லும் வலியிழந்து, அமர்க்களத்தினிலேயே ஆருயிர் துறந்தான். சந்தாசாகிபும் மராட்டியரோடு சமர்செய்து, பன்முறை தோல்விகண்டு, 1740-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் சரணம் அடைந்தான். மராட்டியர் அவனைச் சிறையாகப் பிடித்து, சதாரா என்னும் இடத்தில் அடைத்தனர். அக்காலத்தில் நேர்ந்த குழப்பமாகிய கடலைத்தாண்டி, முனிவர் தூத்துக்குடிக்கு வந்தார். இதுகாறும் செய்த மாபெருந் தொண்டுகளினின்று நீங்கிச் 'சிரமபரிகாரம் செய்து கொள்ளுவான் சிந்தையுற்றே, அவர் தென்கோடி அடைந்தனர்போலும். முனிவர் தூத்துக்குடியிலிருந்தே தமிழ்-லத்தீன் அகராதியை ஆக்கிமுடித்தார். ஓய்வு கொள்ளவந்த முனிவர் நூலியற்றும் வேலையில் முனைந்தமை அன்றியும், கடற்கரை யோரத்தில் உள்ள மணப்பாடு, வேம்பார் முதலிய தலங்களுக்கும் அடிக்கடி சென்று, ஆண்டவனுக்குப் பணி ஆற்றினர்.

### 5. அம்பலக்காடு

சேரநாட்டு அரசைச் சேர்ந்த அம்பலக்காடு என்னும் ஊரில் வேதசாஸ்திரக் கல்லூரியொன்று இருந்தது. 1746-ம் ஆண்டில் அக்கல்லூரியின் கண்காணிப்பாளரில் ஒருவராகப் பணிசெய்யும்பேறு வீரமாமுனிவருக்குக் கிடைத்தது. சமய குருக்களும் போதகர்களும் அக்கல்லூரி வாயிலாகத் தத்தமக்கு வேண்டிய பயிற்சிகளைப் பெற்றனர். திருமறைப் போதனை அமைவுடன் நடைபெறற்குச் சாலவும் உதவியாக, ஆங்கு ஓர் அச்சக்கூடமும் நிறுவப் பெற்றிருந்தது. வீரமாமுனிவர் அக்கல்லூரியில் ஆர்வமுடன் தங்கி அருங்கடன் ஆற்றிவந்தார். சாலவும் மூப்பு எய்திய முனிவர் ஆங்குள்ள ஆசிரிய

குருக்களோடு சேர்ந்து எத்துணை ஆண்டுகள் அரும்பணி ஆற்றினரோ? அன்புடன் பக்தியும் வேத அறிவும் விழுமிய சூழ்நிலையும் பொதுளிய அம்பலக்காட்டிலே பெஸ்கி அடிகள் தம் அந்திய காலத்தை அமலன் பணியிற் கழித்து உவந்தார். அவர் தம் பரம இளைப்பாறுதலுக்குள் புகுமுன் ஆங்கு எவ்வளவு காலம் ஓய்ந்திருந்தாரோ? என்ன வியாதியால் மாண்டனரோ? அவைபற்றித் தெளிவிக்கும் குறிப்புகள் ஒன்றும் கிடைத்தில. ஓயாத உழைப்பையே இறுதிவரைத் தம் குறிக்கோளாகக் கொண்டு, உழைப்பின் மிகுதியான்வரும் களைப்பையே கடும்பிணியாயுற்று, எண்ணிறந்த தம் அலுவல்களுக்கிடையே முனிவர் நண்ணுதற்கரிய இறைவனின் திருவடி நிழலை, 1747-ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் நாலாம் நாளில் அடைந்து, அந்தமில் வாழ்வு எய்தினர்.

## ௬. முனிவர் நம் மொழிக்குச் செய்த தொண்டு

வீரமாமுனிவர் கலைகள் வாழும் இத்தாலிய நாட்டிற் பிறந்தவர். ஓவியமும் காவியமும் இளம் ஞாயிற்றைப் போலெழுந்து, உச்சநிலை கண்ட நாடு இத்தாலியா நாடே. சிற்பம், சித்திரம் முதலிய கலைகளின் செழுமையையும், சிகா நிலைகளையும் அந்நாட்டில் தான் கண்டு களிக்கலாம். ஐரோப்பாக் கண்டம் முழுமைக்கும் கலைக்கோயிலாக விளங்கும் இத்தாலிய நாட்டைக் கலைபயில்வோர் யாவரும் கண்டு களிப்பது இந்நாளிலும் வழக்கமாயிருந்து வருகிறது. பல கலைகளுக்கும் தாயகமாக இலங்கிய இந்நாட்டினிற் பிறந்து, கற்று வல்லோராய் விழுப்பம் எய்திய கலைவாணர்களைக் கணக்கிட்டுக் கூற இயலாது.

இனைய நாட்டில் அவதரித்த வீரமாமுனிவர் சிறந்த கலைஞராக விளங்கினரெனின், அது அந்த மண் வாசியன்றோ! அதிலும் பெருங்கவி வெர்ஜில் பிறந்த நாட்டின் பக்கத்தில் ஒரு செல்வக் குடும்பத்தில் தோன்றி, கலைப் பயிற்சியும் சமயப் பயிற்சியும் சிறுவயது முதலே செவ்விதிற் பெறும் வாய்ப்பும் பெற்ற இவர், உரிய பருவ காலத்தில் உயரிய கலைச் செல்வராயும், புலமைமிக்க மேதாவியாயும் விளங்காமல், வேறு என்செய்வர்?

முனிவர் தம் தாய்நாட்டின் மீது சாலவும் பற்றுடையராகவே இருந்தார். தாய்நாடு துறந்து தமிழ்நாடு போந்து, துறவு மேற்கொண்டு, தமிழரில் தமிழராக அவர் வாழ்ந்த காலத்தும், அவர் தம் தாய்நாட்டின் மீது கொண்ட பற்றினைப் பற்றியே இருந்தார். ஏறக்குறைய 40 ஆண்டுகளாக அவர் தமிழ்நாட்டில் தங்கியிருந்தார். தமிழ்ப் புலமையைத் தாய்வுரிமையன்ன பெற்றிருந்த அவர், தாம் எழுதிய தேம்பாவணி என்னும் நூலில், "எனை ஈன்ற இணையா இத்தாலியா நாடு" என்று பாடியுள்ளார். இவ்வளவில் தாய்நாட்டுப் பற்றுடைய அவர் தம் தமிழ்நூல்கள்யாவும், சிறந்த தனித்தமிழ் மணமே

யன்றி, அந்நிய மொழி மணம் அணுவளவேனும் வீசுவன அல்ல. முனிவருக்குள்ள தாய்நாட்டுப் பற்று கனவின் துளிகள்போல வேளாவேளைகளில் தட்டுப்படுகின்றதே யன்றி, அவர் தம் மனோவாக்குக் காயங்களில் முற்றும் தனித் தமிழராகவே மாறிவிட்டார். மேனாட்டுமக்க ளாய், பாரததேசம் புகுந்து ஈண்டுப் பல்லாற்றானும் சேவைசெய்து ஈண்டிய புகழ்படைத்த மேதாவிகளுள் இவர்போலும் நம்முடன் ஒன்றாகக் கலந்துநின்றார் ஒரு வருமிலர் எனல் இழுக்கன்று. ஆதலின், நம் மொழிக்குப் பெருமை தந்த இப்பெரியாரை யாமும் பெருமையுறச் செய்து அவரோடு உரிமை கொண்டாட வேண்டுமன்றோ!

வீரமாமுனிவர் தாம் அறிந்த சமய சத்தியங்களை இந்நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்கவே வந்தார். அம் மத வுண்மைகளால் தாம் அடைந்திருந்த நன்மைகளை யும் இன்பங்களையும் இந்நாட்டு மக்களுக்குக் கூறி, ஈண்டுள்ளாரும் அவ்வின்ப நலன்களைத் துய்க்குமாறு செய்யப் பெரிதும் விழைந்தார். "யாம் அடைந்த இன் பம் இவ்வையகம் எல்லாம் பெறுக" என்று எண்ணுவதே பெரியோர்தம் இயல்பு. அவ்வியல்பின் எழுந்த எண் ணத்தை ஏதமறப் பூர்த்தி செய்வான்வேண்டி, முனிவர் தாம் தொண்டாற்ற வந்த நிலத்தில் நிலவிய தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினர். நல்லாசிரியரை அடுத்து அவர் எல்லா நூல்களையும் கற்றுத் தேறினார். இவருக்குத் தமிழ்நூல்களைப் பாடஞ்சொல்லிய ஆசிரியர் களுள் முதன்மையானவர் பழனியிலிருந்த சுப்ரதீபக் கவிராயர் என்றார் பெரியார் ஒருவர். ஆழ்வார் திருநகரி என்ற திருக்குருகூரிலிருந்து 'பிரயோக விவேகம்' என்ற அரிய இலக்கணநூல் செய்த சுப்ரதீபக் கவிராயரும் இவரும் ஒருவரே என்று உன்னக் கிடக்கின்றது.

வீரமாமுனிவர் ஒன்பதிற்கு மேற்பட்ட பிறமொழி களை உணர்ந்தவர். இத்தலி, கிரேக்கு, லத்தீன், எபிரேயம்,

முதலிய மொழிகளில் புலமை வாய்ந்தார். இந்துஸ் தானி, தெலுங்கு, பாரசீயம் முதலியவற்றில் நல்ல பயிற்சி யுடையவர். பல மொழிகளைச் சிலகாலத்திற்குள் உணர வல்ல அறிவாற்றல் சான்ற அவருக்குத் தமிழ்மொழியின் மீதே தனிப்பற்று உண்டானது நம் அதிட்டமே ஆகும். தமிழ்மொழிப் பற்றற்று, வேறு மொழிப்பற்றுடையராய் வேற்று மொழிநூல்கள் ஆக்காமல், அடிகள் தம் ஆயுள் முழுவதிலும் தமிழ்மொழியின் மீதும் தமிழர் மீதும் ஆர்வம் கொண்டு சோர்வின்றி உழைத்தமையால், அவர் நமக்கும் நம் மொழிக்கும் அளித்த பெருமை அளப்பரிது.

முனிவர் மேனாட்டினராயினும், முத்தமிழ்ப் புலமை யில் மேனாட்டினருள் எவரேனும் இவருடன் இணை ஆகார்; தமிழ்நாட்டுப் புலவர்களில் இவருக்கு இணை யான பெருமை வாய்ந்தார் ஒருசிலரே ஆவர். முனி வர்க்கு இப்புலமை எங்கண் இருந்து வந்தது?

முனிவர் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலம், யுத்தமே கங்கள் இவண் குமுறிக் கொண்டிருந்த காலம். தமிழர் தம் கலைச் செல்வங்கள்யாவும் நிலைகுலையுமாறு அந்நிய ராகிய ஆந்திரரும், மராட்டியரும் மகம்மதியரும் நம் இகத்தில் புகுந்து ஆட்சிபுரிந்த காலம். உயிரையும் பொருளையும் ஓம்புதற் கண்ணேயே உலகோர் ஈடுபட் டிருந்த அக்காலத்தில், இந்நாட்டு மக்களின் ஆன்மநலங் கருதிப் போந்த முனிபுங்கவர் தமிழ்க்கலை நலம் கண்டார். அவர் கல்லாத நூல் இல்லை என்னுமாறு தமிழ்நூல் எல்லை கண்டார். கண்ட கலையின் காட்சியிலும் கொண்ட கருத்து மாட்சியிலும் ஒன்றெனக் கலந்து நின்றார். அவர் திருக்குறள் கருத்துக்களைத் தம் சிரசில் நிறுவினர் சிந்தாமணியையே சதா சிந்தையிற்கொண்டு திகழ்ந்தார். மணிமேகலையை மேகலையாகப் போர்த்துக், கம்பனைத் தம் கக்கத்தில் வைத்தார். சிலப்பதிகாரத்தைத் திலக மாகத் தரித்துத், தேவார திருவாசகங்களையே மணம்

மிக்க வாசனையாக மோர்ந்தார். சுருங்கச் சொல்லின் தமிழன் மரபையே தம் மரபாகவும் தமிழன் பண்பாடு களையே தம் உரிமையாகவுங் கொண்டு, தமிழ் மணங்கம ழும் தனித்தமிழன் ஆனார். எனவே, பண்டைத் தமிழ்ப் புலமை சான்ற சங்கப்புலவர்போல, பங்கமில் நூல்கள் செய்யும் ஆற்றலும் பெற்று அரிய புகழுக்கு உரியரு மானார்.

## 1. எழுத்துத் திருத்தம்

அச்சு நூல்கள் இல்லாத பழங்காலத்திலே எண்ணும் எழுத்தும் ஏட்டுவாயிலாகவே கற்றல் வேண்டும். ஏடு களில் எழுதப்பெற்று வீடுகளில் மூலையிற் கிடக்கும் காவிய மொன்றைக் கையில் ஏந்திப் பார்க்கப்புகின், அவ்வெழுத்துக்களை நன்கு இனம் அறிவதற்குப் பத்துக் கண்களிருந்தும் பற்றுவே. எழுத்தாணியால் எழுதப் படும் ஏடுகளில் உள்ள மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி வைப்பது வழக்கம் இல்லை. அங்ஙனம் புள்ளிகள் இடப் பெறின் பனையோலை ஏடுகள் துளைப்பட்டு எளிதில் சீக்கி ரத்தில் பாழாகி விடுமென்று எண்ணினர். தவிர முற் காலத்தில்,

> 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
> எகர ஒகரத் தியற்கையும் அற்றே'

என்று தொல்காப்பியர் கூறியபடி, எகர ஒகாரங்கள் ஏகார ஓகாரங்கள் ஆகும் நிலையில் புள்ளிபெறுவதுண்டு. எனி னும் ஏடுகளில் அவைகளும் புள்ளிகள் பெறு. இங்ஙனம் புள்ளிகளே இடப்பெறுத எழுத்துக்களை ஏற்றவாறு தேர்ந்து அறிந்து ஏடுகளைப் படிப்பதன்கண் வீரமா முனிவர் எத்துணை இடருற்றிருப்பார்! அத்துணை இடர் களையும் தாண்டி, நீட்டோலைகளில் தீட்டப்பெற்றிருந்த காவியங்களைக் கற்றுத் தேறிய முனிவர் இவ்விடர்ப் பாட்டைப் பின்னுள்ளோர் நலங்கருதிக் குறைக்க எண்ணினார். இதுவே முனிவர் தமிழ்மொழிக்குச் செய்த

முதற் பெருந் தொண்டு. எகர ஒகரங்கள் உருவேறு பாடு இன்றிப் புள்ளியிடப் பெறத்தக்கனவாய் நிற்றலை மாற்றினார். எகர ஒகரங்கள் தங்கள் புள்ளிகள் நீங்கப் பெற்று, சிறிது உரு வேறுபாட்டுடனே நெட்டெழுத்துக் கள் ஆகும்படி செய்தார். தற்போதுள்ள ஏகார ஓகா ரங்களின் உருவநிலை வீரமாமுனிவர் முயற்சியின் பயனாகக் கிடைத்தனவே. ஏடுகளில் எழுதுவோர் அது முதல் ஏகார ஓகாரங்களை நெட்டெழுத்துக்களாக இன மறிந்து கொள்ளத்தக்க நிலையில் முனிவர் காட்டியவாறு அது முதல் பிறரும் எழுதத் தொடங்கினர். ஒல்காப் புகழ் தொல்காப்பியர் கூறிய விதியைத் தமிழ்பால் அல்காப்பற்றுடைய முனிவர் மாற்றிவிடத், தமிழ்மொழி வாணர் யாவரும் அச்சீர்திருத்தத்தை விரைந்து ஏற்றுக் கொண்டனர். மரபு மரபு என்று நாளும் அடித்துக் கொள்ளும் பழம் புலவர்களும் வீரமாமுனிவர் செய்த மாற்றத்திற்கு மனம் இயைந்தனரென்றால், அவர்தாம் செய்த சீர்திருத்தத்தின் பெருமை என்னே! தமிழர் அவர்மீது வைத்திருந்த பற்றுதான் என்னே.

**2. வசன நூல்கள்**

வீரமாமுனிவர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் புலமைபெற்று நிலவிய புலவர்கள் ஒருசிலரே இருந்தனர். அவர் தாம் எழுதிய "கிளாவிஸ்" (Clavis) என்னும் இலத்தீன் இலக்கண நூலில் இவ்வுண்மைபற்றி உரைக் கின்றார். தமிழ்மக்கள் யாவரும் போதிய புலமையும் மொழிப்பற்றும் இன்றி வாழ்ந்தமைக்குக் காரணம் யாதெனத் தேடினார். பிற மொழிகளில் வசனநூல்கள் மலிந்து கிடப்பனபோன்று, தமிழ்மொழிக்கண் இல் லாமையே காரணம் எனத் தேறினார். கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் புரியமாட்டாத செய்யுளால் இயன்ற இலக்கியநூல்களின் வாயிலாக மக்களுக்கு அறிவு ஊட்டு வதைவிட, வசனநூல்களின் வாயிலாக அறிவுறுத்தல்

எளிது என எண்ணினர். ஆதலின் வீரமாமுனிவர் பல வசனநூல்களை ஆக்கத் தலைப்பட்டார். அறிவு சாலாத பாமரமக்களுக்கென்று "பரமார்த்த குரு கதை"யை எழுதி வெளியிட்டார். விகடச் சுவை விறுடன் செறிந்த அந்நூல் இக்காலத்திலுங்கூடப் பண்டிதர்களாலும் பாராட்டுடன் பயிலப்படுகின்றது. வேதத்தைப் புகட்டும் உபதேசிமாருக்கு ஞானத்தைப் புகட்டும் பொருட்டு "வேதியர் ஒழுக்கம்" என்னும் அரியநூலை ஆக்கினார். கிறிஸ்தவ வேதத்தின் கொள்கைகளை எவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி வேதவிளக்கம் எனப் பெயரிய பிறிதொரு நூலும் வரைந்தார். பரமார்த்த குருவின் கதை முதல் முதல் புதுச்சேரியில் அச்சடிக்கப்பெற்றது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் அந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுளது. வேதியர் ஒழுக்கம் என்னும் நூல் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் அல்லாத கிறிஸ்தவர்களாலும் பாராட்டப்பெற்றமையின் பயனாக, கன்னடத்திலும் தெலுங்கிலும் மொழிபெயர்க்கப்பட்டுளது. "வேத விளக்கம்" என்பது கத்தோலிக்கு மார்க்க உண்மைகளை 264 பக்கங்களில் விரித்துரைப்பது. இந்நூல் கிறிஸ்தவ வேதக் கொள்கைகளை எவரும் மறுக்கவொண்ணாத, மாசற்ற நிலையில் விரித்து விளக்குவது. ஆயினும், இந்நூலை லுத்தர் சபைக் கிறிஸ்தவர்கள், "திருச்சபை பேதகம்" என்னும் நூல் கொண்டு எதிர்ப்பாராயினர். தைரியநாதர் அந்நூலுக்கு மறுப்புக்களாகப், "பேதகம் மறுத்தல்"—"லுத்தர் இனத்தியல்பு" என்னும் இரு நூல்களை வெளியிட்டனர். இவை தவிர, வீரமாமுனிவர் கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவுபுகட்டும் ஆற்றான் எழுதி வெளியிட்ட நிருபங்களும் சிறு நூல்களும் பல உள.

### 3. அகராதிகள்

பெஸ்கி அடிகள் வாழ்ந்த காலத்திலே அகராதிகள் தமிழ்மொழியில் இல்லை. திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகளே இருந்தன. நிகண்டுகள் ஒரு பொருளுக்குரிய பல பெயர்களையும், ஒரு பெயர் உணர்த்தும் பல பொருள்களையும் அகராதி முறையிலன்றிச் செய்யுள் வாயிலாகத் தொகுத்துரைத்தனர். அவை செய்யுட் பயிற்சியுடையார்க் கல்லாது, எல்லோரும் அறியத்தக்க நிலையில் அமையவில்லை. ஆதலின், மேனாட்டு மொழிகளில் உள்ள அகராதி முறைப்படித் தமிழ்மொழியிற் பயிலும் சொற்களை அகரமுதல் னகரம் ஈறாகத் தொகுத்துச் சொற்பொருள் விளக்கம் காட்டவேண்டும் என்னும் அவா முனிவருக் குண்டாயிற்று. சதுர்முகம் வாய்ந்த பிரமனைப்போல, படைக்கும் சக்திவாய்ந்த முனிவர் சதுரகராதியைத் திறம்பட ஆக்கினார். எனவே, தமிழுக்கிருந்த மாபெருங்குறை நீங்குவதாயிற்று. சதுரகராதி பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு அதிகாரங்களைத் தன்னுள் கொண்டது. கவிபாடுவோருக்கு உதவியாகத் தொடையகராதியையும் மேனாட்டு வழிநின்று தொகுத்தார். ஆக, சதுரகராதியால் பேதையரும் மேதையரும் பெரும் பயனுறுவாராயினர். தமிழ் வளர்த்த தந்தையாகிய வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியே பின்னெழுந்த அகராதி நூல்களுக் கெல்லாம் முதனூலாகவும் வழிகாட்டியாயும் அமைவதாயிற்று. கற்றோரேயன்றி மற்றோரும் தமிழின் சொல்வளத்தை யறிந்து பேச்சிலும் எழுத்திலும் அனைவரும் வல்லுநர் ஆதல் வேண்டும் என்ற பேரெண்ணத்தோடு இயற்றப் பெற்ற சதுரகராதி மக்களுடைய கண்களைத் திறந்தது. தமிழ் என்னும் சலதியைத் தாண்டும் கலனென அது திகழ்ந்தது.

முனிவர் தமிழ்-இலத்தீன் அகராதி ஒன்றும் ஆக்கினார். இதில் 9000 தமிழ்ச் சொற்களுக்கு இலத்தீன் மொழியில் பொருள் விளக்கியிருக்கிறார். மற்றொன்று போர்த்துக்கீசியம்—தமிழ்—இலத்தீன் அகராதி. இதன் கண் 4400 போர்த்துக்கீசிய மொழிகளுக்குத் தமிழிலும் இலத்தீனிலும் உரை தந்திருக்கிறார். இம்மூன்று அகராதிகளும் தமிழ் நாட்டார் தமிழைக் கற்பதற்கும், பிற நாட்டார் தமிழைக் கற்பதற்கும், தமிழ் மக்கள் பிற மொழிகளைப் பயில்வதற்கும் நிரம்ப உதவி புரிவன என்பதை நாம் உரைக்கத் தேவையில்லை.

**4. இலக்கண நூல்கள்**

தண்டமிழ்மொழிக்கு மேலும் தொண்டுபுரிய விரும்பிய முனிவர் தம் கவனத்தை இலக்கணப் பகுதியின்பால் செலுத்தினார். தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களைக்கற்றுத் துறைபோகிய அவரது உள்ளம் கற்றோர்க்கும் கல்லாதார்க்கும் இன்றியமையாது வேண்டப்படும் இலக்கண நூல்களைப் புதுமுறையில் புகுத்துவான் துணிந்து, தொல்காப்பியத்தை ஐயந்திரிபு அற ஓதியவர், அந்நூற் பயன் முழுவதையும் சுருங்கிய நிலையில் அனைவரும் ஆயாசமின்றி அறிந்து கொள்ளுமாறு, குட்டித் தொல்காப்பியம் எனப் பல்லோரும் கொண்டாடும் 'தொன்னூல் விளக்கம்' என்னும் பொன்னூலைப் பொறித்தார். நன்னூலைப்போலவே இந்நூலும் நூற்பாவால் அமைந்தது. ஆனால், பிறதமிழ் இலக்கண நூல்களில் காணாத நுட்பங்களும் பாகுபாடுகளும் முறைகளும் ஐந்திலக்கணங்களாக கண்டு அமைந்துள்ளன.

அடிகள் உலக வழக்கில் அமைந்த தமிழ்மொழிகளின் இலக்கணங்களை இனிதுணர்ந்து, தமிழ்மொழிப் பயிற்சி நிரம்பாத தமிழருக்கும் பிறமொழியாளர்க்கும் உதவுமாறு கொடுந்தமிழ் இலக்கணம் ஒன்று லத்தீன் மொழியில் வரைந்தருளினார். 1738-ம் ஆண்டில் முனிவர்

காலத்திலேயே இது அச்சிடப்பெற்றது. இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் முயல்வார்க்கு இந்நூல் விழுத்துணை புரிய வல்லது. 1822-ம் ஆண்டில் வெளிவந்த ஆங்கில மொழிபெயர்ப்பைக் கண்ணுற்ற புலவர் போப்பையர், 'மூதறிவின் ஆராய்ச்சித் திறத்தால் எழுந்த இந்நூல் சாலவும் போற்றத் தக்கது' என்று சாற்றி மகிழ்ந்தார். இந்நூல், சொல், செய்யுள் என இரு பகுதிகளையுடைத்து. கிளாவிஸ் என்பது தொன்னூல் விளக்கம் போன்றதொரு இலக்கணநூல். இது இலத்தீன்மொழியில் தமிழிலக்கணம் கூறுவது.

### 5. மொழிபெயர்ப்பு நூல்கள்

சிறந்ததோர் ஒழுக்க நெறியை வகுத்துக் காட்டித் தமிழரை ஒழுக்கத்திற் சிறப்புடையராக்கியது திருக்குறள் அன்றோ! அந்நூலிற்கண்ட தமிழனது பண்புகளையும் ஒழுக்க நிலைகளையும் மேனாட்டினருக்கு அறிவுறுத்துமாறு வீரமாமுனிவர் திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீன்மொழியிற் பெயர்த்தெழுதினார். இது தவிர அவர் வேறு மொழிபெயர்ப்புநூல் செய்ததாகத் தெரியவில்லை.

### 6. செய்யுள் நூல்கள்

மேல்நாடுகளிலிருந்து பாரதநாட்டிற்குப் போந்த குருமார்கள் ஈண்டுப் பணிஆற்றத் தொடங்குமுன் இந்திய மொழிகளைப் பயில்வது வழக்கம். 16-ம் 17-ம் நூற்றாண்டுகளில் மதுரை வட்டத்தில் திருப்பணி ஆற்றிய தத்துவ போதகர் என்னும் பெயர் வாய்ந்த சுவாமியார் வடமொழியில் வல்லுநராய் இந்நாட்டிலுள்ள ஆரியரிடை வேலைசெய்தார். ஆனால் 18-ம் நூற்றாண்டில் இந்நாட்டிற்கு வந்த வீரமாமுனிவர் வடமொழிப் பயிற்சியால் பொது மக்களுக்குப் பயன்விளையாது என்று தெளிந்து, தமிழ் மொழிப் பயிற்சியை உச்சிமேற் கொண்டார். வீரமா

முனிவர் தமிழ் இலக்கிய நூல்கள் மக்களிடை பெற்றிருந்த செல்வாக்கின் சிறப்பை நேரிற் கண்டார். திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம், சிந்தாமணி முதலிய நூல்கள் தமிழ்மக்களால் பொன்னேபோல் போற்றப் படுவதைக் கண்ணாரக் கண்டார். தமிழ்மக்கள் அனை வரும் செய்யுள் படித்தலையே செவிக்கு விருந்தாகவும், சிந்தைக்கு இனிதாகவுங் கொள்ளும் இயல்பினர் என்பது தும், அவர் தம் காட்சியிற் பட்டது. பொருள் விளக் கம் செய்யவும் மனப்பாடம் பண்ணவும் செய்யுட்களே சிறந்தனவாம் என்று எண்ணும் தமிழனது மனப்பான் மையை நோக்கிய முனிவர் தாமும் செய்யுள் நூல்களைப் பயின்று, செய்யுட்களின் வாயிலாகவே சமயத்திற்கும் மொழிக்கும் தொண்டாற்றுவதே தகுதி எனக்கொண் டார்.

வீரமாமுனிவர் உலகப் பற்றை அறவே துறந்தவர். கடவுள் பற்றொன்றே அவர் தம் கருத்தில் உறுத்திக் கொண்டிருந்தது. கிறிஸ்துவின் சிந்தையையே தம் சிந்தையாகக் கொண்டு, ஆன்மநலங் காண அனைவரும் அச்சிந்தையராதல் வேண்டுமென்பது அவர் தம் சிந்தை யின் துணிபு. இனைய வுள்ளம் தமிழ்க் காவியங்களையும் தேவார திருவாசகங்களையும் கற்று, அவற்றின் சொற் சுவையில் ஊறிக்கிடந்தது. திருத்தக்க தேவரின் சிந்தா மணியும், திருவள்ளுவரின் திருக்குறளும், கம்பனின் ராமாயணமும், சமண முனிவர் அருளிய நாலடியாரும் முனிவர் தம் வாழ்க்கை இலட்சியங்களோடு பல பகுதி களில் ஒத்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். பண்டை கிரேக்க இலத்தீன் இலக்கியங்களைக்கொண்டு கத்தோ லிக்கு வேதசத்தியங்களைப் போதித்த பெரும் போதக ரைப்போல, தமிழ்நூல்களைக் கொண்டும் அவ்வாறு செய்ய மனமானார் தைரியநாதர். தாம் மனமார விரும் பிய விழுமிய மதக்கொள்கைகளைத் தமிழ்நூன் மரபிற்

கும், கருத்திற்கும், தமிழர்களது பண்பாடுகளுக்கும் இசைய, வெளியீடு செய்யுமாறு, துடியாய்த் துடித்தார்.

கம்பநாடர், மாணிக்கவாசகர், சீத்தலைச் சாத்தனார் முதலிய பண்டைப் புலவர்கள் தம் முதிர்ந்த மனக் கருத்துக்களை, வாழ்க்கையின் உண்மைக் குறிக்கோள்களை எதன்வாயிலாக வெளியிட்டார்கள்? சட்டியில் உள்ளதுதானே அகப்பையில் வரும். அகத்தில் அழுத்தமாய்ப் பற்றுண்டிருப்பது எதுவோ அதுவே காலாந்தரத்தில் கவியாய் வெளிவருமாயின், அதுவே உண்மைக் கவியாக இருக்க முடியும்; உயிரும் ஒளியும் வாய்ந்த கவியாக இருக்கமுடியும்; அதுவே என்றும் அழியாத கவியாக இருக்க முடியும். ஆகவே, முனிவர் தாம் பயின்ற தமிழ்க் காவியக்கலையின் சிகரங்கண்டு நின்றவர் தாம் அதுகாறும் கற்றுக் கருத்தினில் அடக்கிய உயரிய எண்ணங்கள் யாவையும் ஓர் காவியத்தின் மூலமாக வெளியிட உன்னினர். கிறிஸ்து பெருமானின் மீதுள்ள அகப்பற்றையே அனைத்துப்பற்றுக உடைய அவர் தம் மனமாகிய ஊற்றிலிருந்து வேற்று நீர் சுரக்க முடியுமோ? ஆதலின், கிறிஸ்துபெருமானின் வளர்ப்புத் தாதையராகிய சூசையப்பருடைய வரலாற்றை, ஓர் அழகிய காவியமாக வடிக்கலானர். அதுவே தேம்பாவணியாம் தெய்வ காவியம். சீத்தலைச் சாத்தனர் புத்தமதக் கொள்கைகளை விளக்கமுடன் எடுத்துக்காட்டும் மணிமேகலையைப் பாடியது போலவே, வீரமாமுனிவர் கிறிஸ்துமதக் கொள்கைகளையும் உண்மைகளையும் விரித்துரைக்கும் தேம்பாவணியை ஆக்கினர். முற்றத் துறந்த நிலையில் கிறிஸ்துமதப் பற்றொன்றையே அகத்திற் கொண்ட முனிவர் அவ்வடிப்படை மிசைநின்றே அழியாத அரும் பெருங் காவியம் செய்தார். ஆகையாற்றான் அது நவச் சுவையும் பொருந்திய நன்னூலாக மிளிர்கின்றது. சமய ஆசிரியர்களாகிய முன்னைய புலவர்கள் சென்ற வழியே

வீரமாமுனிவரும் சென்றமை குற்றமன்றே. இராமபக்தியில் மிகவும் ஆழ்ந்துபட்ட கம்பரும் தம் காவியத்திற்கு இராமபிரானையே கதாநாயகனாகக் கொண்டது போல, வீரமாமுனிவரும் தம் கடவுள் பக்திக்கு அடிப்படையாயும், தம்பெயரின் நாயகனாகவுமிருந்த சூசையப்பரைக் காவியநாயகராகக் கொண்டே, தேம்பாவணியை இயற்றலானார்.*

வீரமாமுனிவர் பன்னாட்களாகப் பாடிய தேம்பாவணியாம் பனுவலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினார். அவைக்களம் இருந்த அருந்தமிழ் வாணர்கள் அதன் சொற்பொருள் நயத்தை மிகுதியும் பாராட்டினர். அதுபோதே அவருக்கு வீரமாமுனிவர் என்னும் விழுமிய பட்டத்தை அவரது, பெருமைக்கு அறிகுறியாகவும், தம் வணக்கத்தைத் தெரிவுறுத்தும் வகையிலும் அளித்தார்கள் என்று ஒரு சிலர் கூறுவர்.

தேம்பாவணி என்பதற்கு வாடாதமாலை என்பது பொருள். முன்னொருகாலத்தில் புலவர் ஒருவர் கம்பரைப் பார்த்து, 'நும் இராமாயணம்' இங்ஙனம் ரஸிக்கக் காரணம் என்ன? என்று கேட்க, அவர் மறுமொழியாக, "ஒவ்வொன்றிலும் ஓரொரு அகப்பை அள்ளிக்கொண்டேன் அதுவே காரணம்" என்றாராம். தேம்பாவணி கூம்பாமாலையாக விளங்கற்குக் காரணமும் இதுவே. அக்காவியத்தில் சிந்தாமணியின் தீஞ்சுவையும் கம்பர் தம் கவிச்சுவையும் திருவள்ளுவரின் செஞ்சுவையும் கலந்து, ஓர் அரிய புதுச்சுவை பயந்து மிளிர்வதை மேலோட்டமாகப் பயிலுங்காலத்தும் தெள்ளத் தெளியக் காணலாம். இங்ஙனம் தமிழர்க்கு நல்விருந்தருளினார்.

தேம்பாவணி 36 படலங்களையும் 3615 விருத்தப் பாக்களையும் தன் அகத்தே கொண்டது. பெருங் காப்பிய நிலைக்குத் தொல்லோர் கூறும் இலக்கணங்களை

* வீரமாமுனிவரின் பெயர்கள் Joseph Constantine Beschi

யெல்லாம் பெற்றுத் தமிழ்மரபு பிழையாது செல்வது. கல்வியிற் பெரியோன் பாடிய 12000 இராமாயண விருத்தங்களில் 87 சந்த பேதங்களே காணப்படுகின்றன. தேம்பாவணியிலோ 90 சந்த பேதங்களை வீரமாமுனிவர் அமைத்துள்ளார். "சீவக சிந்தாமணிக்கு இணையானதோர் காவியம் இது" என்பார் திரு. பூரணலிங்கம் பிள்ளையவர்கள். "தமிழ் இலக்கியங்களில் தலைசிறந்த காவியங்களில் நான்கினைத் தேரின் தேம்பாவணியும் அவற்றுள் ஒன்றாகும்" என்று பிஷப் கால்டுவெல் கூறுவர். "வீரமாமுனிவர் தமிழ்மொழியின்மீது மிக்க அன்பு பூண்டு தேம்பாவணியாம் இலக்கியநூலை இயற்றியது மிகவும் பாராட்டப்படத்தக்கதொன்று" என்றார் டாக்டர் உ. வே. சுவாமிநாதையர்.

தேம்பாவணி கிறிஸ்துமதத்தை மேற்கொண்ட மக்களால் மிகவும் பாராட்டப் படுகின்றது. சூசையப்பர் சரிதையோடு கிறிஸ்து பெருமானின் பாடு மரணங்களையும், பழைய ஏற்பாட்டுச் சரிதைகள் பலவற்றையும் அலங்கார நயங்கள் பொருந்திய அரியதோர் நடையில் விரித்துரைக்கின்றது. அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற் பொருளும் சுட்டி எழுந்த இக்காவியங்கற்பார் பேரின்பம் காண்பது ஒருதலை. பிறர் தம் மனம் புண்படுமாறு மத தூஷணைகளுக்கு இடங்கொடாது, கிறிஸ்துவானவரின் தியாகச் சிறப்பை உயரிய முறையில் தமிழருக் குணர்த்தவென்று எழுதப்பெற்ற இக்காவியத்தை எம் மதத்தோரும் ஆர்வமுடன் கற்றலே முறைமை யாகும். தேம்பாவணியின் தீஞ்சுவை காண்பார் வீரமாமுனிவர் தமிழுக்குப் புரிந்த இப்பேருந் தொண்டினைப் போற்றுகிறார். தமிழ்வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாயிருக்கும் தேம்பாவணியைத் திறம்படக் கற்றுத் தெளிவது நம்மீதுற்ற பெருங் கடனும்.

1665-ம் ஆண்டிலே இஸ்பானியா நாட்டிலே வாழ்ந்த பரிசுத்த கன்னியரில் ஒருவராகிய மேரி அகிர்தாள் என்னும் மாது எழுதிய தேவமாதாவின் சரிதையே தேம்பாவணிக்கு முதனூலாகும். அந்நூலை ஆதாரமாகக் கொண்டு அடிகள் தமிழ்மரபுக்கேற்ப சில மாற்றங்களுடன் இந்நூலை ஆக்கியுள்ளார். அச்செய்கை இந்நூலுக்குப் புத்தழகைப் புகுத்தியது. மோட்ச நரகங்களைத் திறம்படத்தீட்டி மங்காப்புகழ் நாட்டிய தாந்தே என்னும் இத்தாலிய புலவரைப் பின்பற்றியே முனிவரும் மோட்ச நரகங்களைக் கற்பனைக்கண்களால் காண்கின்றார். தேம்பாவணியாம் காவியம் கிறிஸ்துவ வேதத்திற்காணும் பொருள்களையெல்லாம் நிரல்படக் கோத்துச் செல்வதால் இதனை 'வேதத்தின் சுருக்கம்' என்று கூறினும் பொருந்தா நிற்கும். இத்தகவு சான்ற நூலே பண்பட்ட தமிழர் தம் மனப்பான்மைக்கு ஏற்றது என்பது வீரமா முனிவரின் உட்கிடை. தமிழ்மொழிக்குப் பெரிதும் ஆக்கம் தரவல்ல இந்நூலைப் படித்தலும், தமிழின் தீஞ்சுவை பருகலும் முனிவர் தம் உள்ளத்தை உவப்பிக்கும் செயல்களாகும் என்பதில் ஐயம் இல்லை.

தேம்பாவணியாம் பெருங்காவியம் கண்ட முனிவர் சிறு காவியங்களையும் தமிழ்முறைப்படி இயற்ற எண்ணினார். கலம்பகம் என்பது ஒருவகை இலக்கண நெறிக்குட்பட்ட நூலாகும். கலம்பகத்துக்குரிய உறுப்புகள் 18 என்றும், பல்வகைப் பாக்களும் கலந்துவரல் வேண்டுமென்றும் இலக்கணம் வரையறுக்கப் பட்டுளது. வீரமாமுனிவர் இவ்விலக்கண வரம்புக்குள்ளே நின்று பாடினும், கவிதை நலங்கனிந்து செறிந்து காணும் திருக்காவலூர்க் கலம்பகத்தைக் கற்போர் இந்நூல் ஆசிரியர் பிறப்பிலேயே தமிழனாய்த்தான் இருக்கவேண்டும் என்று எண்ணுவர். ஏலாக்குரிச்சியின் அருகில் உள்ள திருக்காவலூரின்கண் கோயில்கொண்டு எழுந்தருளியிருந்த

தேவமாதாவின்மீது பாடப்பெற்றது இந்நூல். இது 101 பாக்களால் இயன்றது. பாக்கள் யாவும் சந்தம் செறிந்து அந்தமுடன் விளங்குவன.

முனிவர் பண்டிதர்களுக்கும் நூல் செய்தார்; பாமரர் களுக்கும் நூல் செய்தார். பாமரர்களுக்கு எழுதப்பட்ட கித்தேரியம்மாள் அம்மானை தன்மையில் பண்டிதரையும் கவரவல்லது. கித்தேரி அம்மாள் போர்த்துக்கீசிய நாட்டிலே வேதசாட்சியாக மாண்ட ஓர் கன்னிகை. பிலிப்பைன் தீவுகளின் தலைநகரமாகிய மணில்லாவிலிருந்து முனிவருக்கு இப்புனிதவதியின் சொரூபம் ஒன்று கிடைத்தது. இவ்வம்மையார் விளைத்த அற்புதங்களுக்கு அளவில்லை. ஆதலின் அர்ச். கித்தேரியம்மாளின் சொரூபத்தைத் தம் பங்குக் கோயில்களொன்றில் முனிவர் நிறுவினர். அதுமுதல் கித்தேரியம்மாள் மீதுற்ற பக்தி யாண்டும் பரவிப் பெருகியது. அப்பக்தியை மேலும் தூண்டுமாறு முனிவர் எளிய இனிய நடையில் அப்புனிதையின்மீது இந்த அம்மானை பாடினர்.

அம்மானைப்பாட்டு பெண்கள் கை கோத்து ஆடுகையில் பாடும் பாட்டு. இதனை வில்லடிப் பாட்டைப்போல இசைத்தலுங் கூடும், எனவே கல்லாதாரும் எளிதில் கற்று ரஸிக்குமாறு நுண்மாண் நுழைபுலம் வல்லார் இந் நூலை யருளியமை அவரது பெருந்தன்மைக்கோர் சான்று ஆதற்பாலது.

திருக்காவலூர் தேவமாதாவின் அன்பின் பெருக்கிலே ஆழ்ந்துபட்ட வீரமாமுனிவர் அம்மாதாவின்மேலே வேறு இரண்டு பாடல்களும் பாடினர். தஞ்சாவூரில் அரசுபுரிந்த மராட்டிய மன்னரால் துரத்தப்பெற்ற கிறிஸ்துவர்களைத் துணைக்கரத்தின்கீழ் சேர்த்து, அன்னவர்க்கு அடைக்கலம் கொடுத்த திருக்காவலூர் தேவமாதாவின்மேல் 'அடைக்கல நாயகி வெண்கலிப்பா' 'அன்னையழுங்கல் அந்தாதி' என்ற பிரபந்தங்களைப்

பாடினார். இச்சிறு காவியங்களிலும் வீரமாமுனிவரின் கவித்திறனைப் பெருவாரியாகக் காணலாம். பெஸ்கி அடிகள் பாடிய தேவாரப் பதிகம் 'கருணைம்பரப் பதிகம்' என்பது. அப்பதிகத்தின் முதற்பாட்டிலுள்ள முதலிரண்டு சீர்கள் 'மூவா முதலா' என்பன சீவகசிந்தாமணி கடவுள் வாழ்த்துப்பாட்டின் முதற் சீர்களேயாம்.

வீரமாமுனிவர் சில வண்ணச் செய்யுட்களும் செய்துள்ளார். பெஸ்கி சுவாமியார் தமிழின் கண்ணுள்ள நீதிநூற்கள்பால் மிகுதியும் நேயம் வாய்ந்தவர். அதற்குச் சான்றாக அவர் தொகுத்த 'தமிழ்ச்செய்யுள் தொகை' என்னும் நூல் ஒன்றுண்டு. இவர்தம் முறையைப் பின்பற்றியே ஏறக்குறைய ஒருநூற்றாண்டிற்குப் பின் வாழ்ந்த புலவர் போப்பையரும் செய்யுட்டொகைநூல் ஒன்று செய்தார்.

கவிவரம் சான்ற கனிந்த இலக்கிய வள்ளலாகிய வீரமாமுனிவர் தம் அரும் பெருந் தொண்டுகளால் நம் அன்னையைப் பல்லாற்றானும் அணிபெறச் செய்தார். இலக்கணம், காவியம் உரைநடை, அகராதி, பிற பிரபந்தங்கள்-கதை-ஆகிய இத்துறைகளிலெல்லாம் வியத்தகு சேவை செய்த அவர் 'தமிழ் வளர்த்த தந்தை' என்னும் இனிய பெயருக்கு இலக்காகத் துலங்குகின்றார். இப் பெருந்தகையாரின் நூல்களை மேலும் மேலும் படித்துப் படித்துப் பயன்பெற வேண்டின், இந்நூல்களை நன்முறையில் அச்சிட்டு உலகோர்க்கு உதவச், செல்வர்கள் முன்வருதல் வேண்டும்.

## எ. வீரமாமுனிவரின் புலமைத்திறம்

வீரமாமுனிவர் ஒப்பற்ற உண்மைக் கவிஞர். உண்மை யாவது உள்ளத்தின் தன்மை. சால்புடையோரது உள்ளம் உள்ளதை உள்ளபடியே கூறுந் தன்மையுடையது. உலகோர்க்கு வேண்டுவன உண்மைக் கவிகளே. உண்மைக் கவிகள் அழியா உயிரும் அழகிய உடலும் உடையனவாய், வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் உண்மையாய், குறிக்கோள்களை உரைப்பன. உண்மை கண்ட வீரமாமுனிவரின் உள்ளத்தினின்று உண்மைக் கவிகளே மலர்ந்தன.

வீரமாமுனிவர் கவிபாடத் தொடங்குகையில் உண்மைக்கும் இன்மைக்கும் இடையே சிறிது இடர்ப்படத்தான் செய்திருப்பார். ஏனெனின் தமிழரின் மரபு வேறு; இவர் பிறந்து வளர்ந்த மரபுவேறு. தமிழன் மரபுகளையும் பண்பாடுகளையும் உண்மைத் தத்துவங்களையும் காவிய நடையில் தழுவிச் செல்லுங்காலத்தே, அவர் தம் வாழ்க்கை மரபுகட்கும் பண்பாடுகட்கும் உண்மைத் தத்துவங்கட்கும் இடையில் பேதம் விளைக்கும் இடர்ப்பாடு கண்டிருப்பார். ஆயினும் உண்மை உரைப்பதில் அஞ்சாநெஞ்சம்படைத்த தைரியநாதர் யாண்டும் உண்மைநெறி யொன்றினையே கடைப்பிடித்துச் சென்றார் என்பதை யாம் மனதிற் கோடல்வேண்டும். உண்மைக் கவிஞனது இவ்வியல்பைப் பாராட்டுதலே நேரிய முறை. அன்றேல், உலகின்கண் போலிக்கவிஞர் பெருகுவர். அவர் தாம் அறிந்த உண்மைக்கு மாறான காரியங்களை உலகோர் புகழ உரைத்து, உண்மைக் குறிக்கோள்கள் யாவும் ஊறுபடச் செய்துவிடுவர். இவ்வுண்மையை நாம் கடைப்பிடித்து வீரமாமுனிவரின் புலமைத் திறத்தை மதித்தலே நேரிய முறையாகும். உதாரணமாக ஒன்று காட்டுதும்.

1. தேம்பாவணி

முனிவர் தேம்பாவணியின் முதற் பாயிரச் செய்யுளைப்பாடிய வகை இது.

"சீரிய வுலக மூன்றும் செய்தளித் தழிப்ப வல்லாய்
நேரிய வெதிரொப்பின்றி நீத்தவோர் கடவுள் தூய
வேரிய கமலபாதம் வினையறப் பணிந்து போற்றி
ஆரிய வளன்தன்காதை அறமுதல் விளங்கச் சொல்வாம்."

என்றார் முனிவர். இதற்கு இணையா நிற்கும் கம்பரது கவி இது.

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே."

வீரமாமுனிவர் மற்றோர் மார்க்கத்தைச் சார்ந்த நிலையில், தமிழன் சார்ந்துற்ற இந்து மார்க்கத்தின் மரபுகளையும் உண்மைகளையும் எத்துணை அளவில் தழுவிச் சென்றுள்ளார் என்பதையே ஈண்டு நாம் அறிதல் வேண்டும். தமிழ்மக்களின் மொழியோடு கருத்துக்களையும் தழுவிச்செல்லும் பழுதில் மனப்பான்மை கொண்ட முனிவர் ஈண்டு தம் சமயக்கொள்கைக்கு முரண்படாது என்னும் கருத்தினராகவே கம்பரது கருத்தைத் தழுவிச் செல்கின்றார். இங்ஙனம் தழுவிச் செல்வது முனிவரது உதார உள்ளத்தையும் பெருந்தன்மையையும் சுட்டிக் காட்டுகிறது. ஏனெனில், சக்திவாய்ந்த முத்தொழில்கள் கடவுளுக்கு உண்டெனினும், ஈற்றுத் தொழிலாகிய அழித்தல் தொழிலைக் கிறிஸ்து சமயம் வற்புறுத்துவதன்று. கிறிஸ்து சமயம் அன்பு ஒன்றையே அல்லது படைத்தல், காத்தல் ஆகிய இரண்டையே வற்புறுத்தா நிற்கும். ஆயினும், முனிவர் தமிழனது மரபுக்கேற்ப, முத்தொழில்களும் கடவுளுக்கு ஓராற்றான் உண்டு என்னும் உண்மையைக் கடைப்பிடித்தே, கம்பரைத் தழுவலானார்.

ஆனால், தமிழரின் தத்துவக் கொள்கைகள் தாமறிந்த நித்திய உண்மைகளுக்கு வேறுபட்டு நிற்குமாயின் அக் கொள்கைகளைப் புறத்தே தள்ளி, தாம் அறிந்த நித்திய உண்மைகளையே வற்புறுத்துவார். இதுவே உண்மைக் கவிஞனது இலக்கணமாகுமன்றோ! உதாரணமாக ஒன்று காட்டுதும்.

மறுபிறப்பு இந்துமதத்தின் அடிப்படையான கொள் கைகளில் ஒன்று. கிறிஸ்துமார்க்கம் இக்கொள்கையை ஏற்றுக்கொள்வது அன்று. இக்கொள்கை உண்மையற்ற தொன்று என்பது முனிவர் மனத்தில் படுகின்றது. மன திற்பட்ட உண்மையை மறுக்க முனிவர் தயங்குவாரல் லர். மறுபிறப்பு என்பது ஒன்று உண்டோ என்று ஒருவன் சூசைநாதரைக் கேட்கின்றான். சூசைநாதர் நிலையில் முனிவர் தம்மைவைத்துத், தாம் அறிந்த உண் மைக்கு முரண்படாத நிலையில் வினவினவனுக்குப் பின் வருமாறு விடையளிக்கின்றார்.

"அரிய வேத எட்டெட்டும் எண் ஆகமத்து
உரிய விவ்வழி யொன்றல (து) இல்லையால்
பிரிய மாண்டுயிர் பின்பு பிறத்தலே
கரிய கங்குல் கனா என ஓதினான்"

வேதத்தில் உள்ள (8×8+8) 72 ஆகமங்களுக்குள்ளே இறந்தவர் உயிர் எல்லாம் முன்பு சொல்லிய மூன்று இடங்களில் (மோட்சம், நரகம், உத்தரிக்கும் ஸ்தலம்) ஒன்றினையே அடையும். தவிர, வேறு வழிஇல்லை. ஆகையால் இறந்து உடலைப்பிரிந்த உயிர் மறுஉடலிற் புகுந்து, பிறக்கும் என்பது, தூங்கினார் இரவிற்கண்ட கனா என்றால் ஒக்கும் என்றார். இவ்வாறு கூறுவது எங்ஙனம் குற்றமாம்? முனிவர் தாமறிந்த உண்மையை விளக்கும் உண்மையான சொற்சித்திரம் இது. இவ்வாறு உண்மையை அஞ்சாது கூறியதைக்கேட்டே, தேம்பா வணியின் அரங்கேற்றத்தின்கண் வீற்றிருந்த புலவர்கள்

அவரை வீரமாமுனிவர் என்று பாராட்டினர். இவ்வாறு நந்தமிழ்ப் புலவர்கள் யாவரும் உண்மைப் புலவர்களாகத் திகழின், நம் நாடும் மொழியும் விரைவில் முன்னேற்ற முறும் என்பதில் ஐயமில்லை.

தேம்பாவணியாம் காவியத்தின் சுவைகாண வேண்டு மெனின், முதன் முதலாக அதை உண்மைக்கண் கொண்டு பார்த்தல்வேண்டும் என்பதை வற்புறுத்தவே இத்துணை கூறினோம். இனிமேல் அக்காவியத்தின்கண் புலனாகும் முனிவரின் புலமைத்திறத்திற்கு இரண்டொரு சான்று கள் தருவாம்.

வீரமாமுனிவர் துறவியாதலின் இல்வாழ்க்கைச் சித் திரம் ஒன்றும் அநுபவ வாயிலாக அறியாதவர். ஆனால், இயற்கையழகிலும் வானுலகத் தெழிலிலும் மிகவும் ஈடுபட்டவர். அவர் இம்பருலகத்துச் சிறப்பை வரு ணித்துக் கொண்டிருக்கும்போதே உம்பருலகத்திற்கு மனக் கண்ணால் விரைந்தோடிப் போவார். இம்பாத்து இயற்கையோடு அம்பாத்து இயற்கையையும் இணைத்துக் காட்டி, மக்கட்கு நல்லறிவு ஊட்டும் வீரமாமுனிவரின் புலமைத்திறம் மிகவும் வியப்புறுத்த வல்லது. முனிவர் யூதேயா நாட்டு மலைச்சாரலை வருணிக்கப் புகுந்தவர்

> "படநாகம் தோலுரித்த பான்மையின் கல்லூடுரிஞ்சித்
> தடநாகம் தூங்கருவி தாவழகார் நாடிதுவே
> தாவழகார் நாடிதுவேல் தாங்கமிலா தருட்பவ்வம்
> வாவழகார் திருநிலைத்த வானுலகம் நாடேமோ"

என்று முடித்தார். நாகம் என்னும் மொழி, மலைக்கும் பாம்புக்கும் பெயராகும். ஆதலின் படநாகம், தடநாகம் என்னும் அடைகளைக் கொடுத்து முறையே பாம்பையும் மலையையும் குறிக்கவைத்தமை பாராட்டப்படத்தக்கது. யூதேயாநாட்டு மலைகளின் பிளவுக்குள்ளிருந்த நாகம் தன் வெள்ளிய சட்டையை உரித்துக்கொள்ள, அது அப் பிளவினூடே நீளமாகத் தொங்குகிற பாவனையில் அந்

நாட்டு மலைகளின் விடரகத்தைப் பிளந்துகொண்டு பாய்ந்து தொங்கும் அருவிகள் காணப்படுகின்றனவாம். நாகத்தின் உரித்ததோல் வெண்ணிறமும் பளபளப்பும் வாய்ந்து வரைகளுடன் அமைந்திருப்பன. அது அருவியின் வெண்ணிறத்திற்கும் துலக்கத்திற்கும் குமுழிகட்கும் உவமையாகின்றது. செய்யுளின் அடுத்த இரண்டடிகளின் எதுகை எடுப்பு மாறுகின்றது. முனிவர் அங்கிருந்தே வானுலகம் தாவுகின்றார். யூதேயா மலைநாட்டினின்று அலைபோல் எழுந்த எண்ணம் அலைகள் இல்லாது அமைதி வாய்ந்த அருட்கடல் வழிந்தோடும் அழகு செறிந்த வானுலகம்போய் எட்டுகிறது. இறைவனால் இம்பரில் படைக்கப்பெற்ற இம்மலைநாடு இத்துணை மாண்புடைத் தென்றால், இறைவன் இருக்கை கொள்ளும் அம்பரவுலகம் ஆஹா! எத்துணை மாட்சியுடைத்து. இம்பர் உலகில் நாட்டம் வைப்பதைவிட அம்பரவுலகத்தின் மீதன்றோ நாட்டம் வைப்பது சிறந்தது என்று முடிக்கிறார். மக்களால் நாடப்படுவது நாடு. உலகமக்கள் தம் கண் முன்னுள்ள இடத்தையே நாடுகின்றனர். முனிவரோ முன்னின்ற நாட்டை விட்டுவிட்டுச், செய்மைக் கண்ணுள்ள வானநாட்டை நாடுகின்றனர். ஈண்டும் புலவரது வாய் உண்மை நிலையையே வருணிக்கலாயிற்று. துறவியாய் அமைதியை நாடும் இயல்புவாய்ந்த அவர்க்கு அருவிகளின் ஓசையும் ஓட்டமும் பிடிக்கவில்லைபோலும். அமைதியான அருட்கடல் படிந்து அரிய அழகோடு அந்தமின்றி நிலைத்து நிற்கும் அமரலோகமே அவருக்குப் பிடித்தமாயிற்று. ஈண்டு முனிவரது புலமைத்திறமும் உண்மைத்திறமும் ஒருங்கே புலனாகின்றன. மக்கட்கு அறிவு கொளுத்தும் முறைகளில் இதுவன்றோ சிறந்த முறை!

முனிவர் தம் வாழ்க்கை எவர்க்கும் மேல்வரிச்சட்டமாக அமைய வாழ்ந்தார். பல நல்ல குறிக்கோள்களுக்கு,

அவரே சான்றாக விளங்கினார். ஆகையால் ஒன்றினை விளக்கிக் காட்டுவான் உவமை ஒன்றுவேண்டின், அவர் தம்மையும் தம் வாழ்க்கை அநுபவத்தையும் நோக்கி, உவமையைத் தேடிச் சேய்மை செல்லாது அண்மையி லேயே அதைக் கண்டுகொள்வார்.

நாட்டுப்படலத்திலே நதியின் நீரோட்டத்தையும் அது கால்களாகப் பாய்ந்து கழனிகளுக்குச் செல்வதை யும் வருணிக்கத்தொடங்கிய முனிவர்,

**"செறியுலாம்புனல் சிறைசெய்து பயன்பட ஒதுக்கி**
**வெறியுலாம் மலர் மிடைந்தகல்வயல் வழிவிடுவார்**
**பொறியுலாம்வழி போக்கில (து) இயல்பட் அடக்கி**
**நெறியுலாம்அறம் நேர்அவை நிறுத்தினர் போன்றே"**

என்றார், உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங்காத்த முனிவர், தாம் எடுத்துக்கூற வந்ததோர் பொருளுக்குத் தம்மையும் தம் அநுபவத்தையுமே உவமையாக எடுத் தாளுகின்றார் என்பது வெள்ளிடைமலை. இச்செய்யுளின் பொருள் :

"நிறைந்து ஓடும் சலத்தை மறித்துப் பயன்பட ஒதுக்கி மணம் வீசும் மலர்கள் நிறைந்து விரிந்த வயற் கண் பாயவிடுவார், ஐம்பொறிகளைப் போம்வழியே போக்காமல் நலம்பட அடக்கி தருமம்பேணும் செவ்வை யான வழியே அவைகளை நிறுத்துவார் போல்வர்" என்பது. மலையருவிகளாலும் கால்களாலும் திரண்டு பாயும் ஆற்றின் நீர் வீண்போகாமல் அடக்கி ஆளும் மள்ளர்களைப், பொறிபுலன்களைப் புறத்தே தீயநெறியிற் போகவிடாது நன்னெறிப் படுத்துவான்வேண்டி அவற்றை அடக்கி ஆளும் முனிவர்களோடு உவமித்துக் கூறினார். முனிவர் தம் வாழ்க்கையின் அநுபவமும் இது தானே!

முனிவர் தமிழ்நூற் கருத்துக்களையும் புராணக் கதைகளையும் தம் நூலிடைச் செருகும் திறம் ஓரோ விடத்தில் மிகவும் வியப்பைத்தருகின்றது,

> உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல்பவர்—

இக்குறளை முனிவர்,

> உழுதுண்பார் உயிர்வாழ்வார் மற்றெல்லாம்
> தொழுதுண்பார் எனில்

என்று ஓர் பாட்டிடை செருகிவைத்துள்ளார். திருக்குறளடியை அப்படியே எடுத்து ஆள்வது மிகவும் இன்புறுத்துகின்றது. மற்றொன்று,

> 'சீரியார் நட்புவேர்கொள்
> சீரென நிலத்தில் தாழ்ந்து,
> பூரியார் நட்புப் போல
> புணர்ந்த சைவலம் மேல்ஆடி'

என்பது தேம்பாவணி—இச்செய்யுளின் கருத்தை

> ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
> இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்குமே—
> நாளுண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
> நீர்க்குட் பாசிபோல் வேர் கொள்ளாதே.

என்னும் வெற்றிவேற்கைச் செய்யுட்களில் காண்கிறோம். ஈண்டு முனிவர் செய்யுட்களில் மொழிகளைப் பெரும்பாலும் தழுவாமல் கருத்தொன்றையே தழுவியிருக்கின்றார். தமிழ்நூற் செய்யுட்களையும் கருத்துக்களையும் புலவர்கள் தழுவியே நூல்செய்வது மரபு. அம்மரபுநெறியில் நின்று தேம்பாவணியை இயற்றினும் ஆசிரியர் எப்பொழுதும் அவ்வாறு தழுவுகின்றவரு மல்லர்; ஒருபால் மரபை ஒட்டிச்செல்லினும் ஒருபால் தம் சுய மனோபாவத்தில் நின்றே பாடுவார். உதாரணமாக ஒன்று காண்குவம்.

நாட்டுப்படலத்தில் மழைவளங்கூறும் கட்டம் ஒன்றுண்டு. அக்கட்டத்தின் ஆரம்பத்தில் மேகந்திரண்டு

மழைபொழியுங் காட்சியைப் புலவர்களில் பலர் ஒரே படித்தாய் வருணிப்பதைக் காணலாம். இத்தகைய கட்டத்தைக் கம்பரும் அதிவீரராம பாண்டியரும் பின்வருமாறு வருணிக்கின்றனர்.

" நீறணிந்த கடவுள் நிறத்தவான்
ஆறணிந்து சென்று ஆர்கலி மேய்ந்தகில்
சேறணிந்த முகத்திரு மங்கைதன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டவே "

இது கம்பர் பாடியது.

" கருவிமாமழை கலைமகள் உருவென விளங்கி
இருவிசும்பிடை பரந்து சென்றினமணி கொழிக்கும்
பரவை வெண்டிரை மேய்ந்து உயர்பனி வரையுயிர்த்த
உருவ வோடரித்தடங்கணாள் உருக்கொடு மீண்ட."

இது நைடதத்தின் முதற் செய்யுள்.

வீரமாமுனிவர் இக்கட்டத்தைப் பின்வரும் இரண்டு செய்யுட்களில் வருணிப்பதைப் பாருங்கள் !

" புள்ளுலாம் விசும்பிடைதொறும் பொரும்படை பொருவ
வெள்ளுலாம் மழை வெண்கொடி யுருக்கொடு விளங்கி,
தெள்ளுலாம் திரைதிளைப்ப உண்டெழுந்துயர்பரந்து,
வள்ளுலாம் கருமதகரி இனமெனத் தோன்ற
போர்புறங்கொடு பொருந்தலர் உரத்தில்தேய்த் தொளிர்வேல்
சீர்புறங்கொடு திசைதொறும் இருளற மின்னி
வார்புறங்கொடு வளர்முரசொலியென அதிர்ந்து
நீர்புறங்கொடு நீல்முகில் முழங்கின மாதோ ? "

கம்பர் நீறணிந்த சிவபெருமானைப்போல மேகங்கள் வெண்ணிறமுடன் சென்று, கடல்நீரைப் பருகி, இலக்குமி கேள்வனாகிய திருமாலின் கருநிறங்கொண்டு திரும்பின என்றார். அதிவீரராம பாண்டியர் வெண்ணிற மேகத்திற்குச் சரஸ்வதியையும், கருக்கொண்ட மேகத்தின் நிறத்திற்கு உமாதேவியின் நிறத்தையும் உவமை கூறினார். கம்பர் தாம் கருதியவாறு இருதேவர்களை உவமை காட்டிப்போந்தார். அதே முறையில் நின்று பாடிய

அதிவீரர் வேறிரண்டு உவமைகளாக இரண்டு தேவதைகளைக் காட்டினார். வீரமாமுனிவரோ அங்ஙனம் உவமை கூறவிரும்பிலர். முனிவர் கடல் நாடிச்சென்ற மேகக் கூட்டம் வெண்கொடிகள் போன்றும், கடல்நீர் பருகித் திரும்புவன கருநிற யானைகள் போன்றும் உள்ளன என்றார். மேகத்தை யானையோடு உவமிப்பது மரபு. மேகங்கள் கடல்நீர் பருகித் திரும்பும் ஐதீகத்தையும் முனிவர் விட்டிலர். ஆயினும் முனிவர் காட்டும் உவமைகள் இயற்கையோடு மிகவும் பொருந்துவன. அடுத்த செய்யுளில் மேகத்திலிருந்து தோன்றும் மின்னலையும் முழக்கத்தையும் மிக அழகாக வரைகின்றார். மின்னல்கள் வீரம் மிக்க சேவகனின் வேலின் ஒளியையும் வென்றன என்றார். முழக்கம் போர் முரசென அதிர்ச்சியுடன் கேட்க, மழை சொரிந்தது என்றார். இக்கட்டத்தை முனிவர் இயற்கை ஓவியம்போலும் தெள்ளிதின் விளக்கும் நிலை ஏனை இரண்டு ஓவியங்களையும் வென்றது என்பதில் ஐயமில்லை. முனிவர் தமிழ் மரபுக்கேற்பப் பொருள்மேற் கொள்ளினும், இயற்கையோடு நன்கு இயைந்த உவமைகள் அமையப்பாடியது மிகவும் போற்றற்குரித்து.

முனிவர் புராணக்கதைகளைக் கையாளும் திறமும் வேறு. வேசையரது வாய்மொழியின் இயல்பை முனிவர் மக்கட்கு எடுத்துக்கூறி, அம்மொழியின்கண் மயங்கி விடாதபடி எச்சரிக்கும் எண்ணம் கொள்கின்றார். அப்பொழுது,

**“கடலைக்கடைய அமிர்தமொடு கடுவும் பிறந்ததெனப்**
**படலைக்கதையாய் அறிந்ததலால் பயனுய்க்கண்டதிலை**
**மடலைக்குடைய ஊறியதேன் வதைத்தசொல் அமிர்தத்து**
**உடலைக்கொலைசெய்து உயிருணும் நஞ்சுஉகும் தெண்வாய்மொழியே”**

என்று பாடுகின்றார். “கடலைக்கடைந்த அளவில் அமிர்தமும் அதனுடன் நஞ்சும் கூடப்பிறந்தது என்பது கட்டுக்கதையே யொழிய அதனாற்பட்ட பயன் யாதும் இல்லை.

ஆனால், வண்டுகள் குடைந்த பூவிதழ்களினின்று ஊறிய தேனினும் இனிய மாதரின் வாய்ச் சொல்லாகிய அமிர்தத்திலே உடலைக்கொன்று உயிரையும் உண்ணவல்ல நஞ்சும் உண்டு". என்றார் அடிகள். வைகுண்டநாதன் பள்ளிகொள்ளும் அழகிய பாற்கடலிலே அமிர்தமும் நஞ்சும் பிறந்தனவென்றால், அது நம்பத்தக்கதன்று; ஆனால் அழகுக்கடல் அன்னதோன்றும் ஓர் அணங்கின் கண் அமிர்தமொழியுடன் ஆலகாலம் போன்ற நஞ்சும் எழும்புகின்றன என்றால், அது உண்மை உரையே என்று கூறுகின்றார். நம்பக்கூடாத புராணக்கதையை எடுத்துக்கொண்டு, அதன்கண் உள்ள செய்தி பிறிதோர் இடத்தில் உளது என்று காட்டிய திறம் கற்றோர்க்கு மிகுதியும் களிப்பூட்டுவதொன்று.

முனிவர் எருசலேம்நகரைப் படம்பிடித்துக் காட்டுகிறார். ஒவ்வொரு நகரமும் அவர்காட்டுமாறு அமைதல் வேண்டும் என்பது அவருடைய அவா. தலைசிறந்த குறிக்கோள்களை மக்களுக்கு எடுத்துணர்த்தலே புலமை சிறந்த கவிஞர்தம் போக்கு. ஆதலின் அச்சித்திரத்தைச் சிறிது மிகைப்படுத்தி உயர்வு நவிற்சியணி வாயிலாகப் புலமுறுத்தினும் அது குற்றம் அன்றே. ஓரளவில் உயர்வு நவிற்சி ஒலிக்க முனிவர் எருசலேம் நகரின் பெருமையைப் பின்வரும் பாவாற் கூறுகின்றார்.

"நீரல்லது அலையில்லது நிறைவான் பொருளிடுவோர்
போரல்லது பகையில்லது புரிவான் மழைபொழியும்
காரல்லது கரையில்லது கடிகாவலும் அறனல்
சீரல்லது சிறையில்லது திருமாநகர் இடையே"

என்பது அந்தச் சொல் ஓவியம். எருசலேம் நகரின் நீரின் அலைச்சல் உண்டன்றி, வேறு அலைச்சல் இராதாம்: அலைவது நீரல்லது மக்கள் அல்லர் என்றார். மக்கள் நீதி நெறி தவறி அலைவதிலர். வேலையில்லாது வேலைக்காக அலைவது இல்லை. கடன் கொடுத்துவிட்டுக் கடன் கேட்க

அலையும் அலைச்சல் இராது, கோடு கச்சேரிகட்கு அலையும் அலைச்சலும் ஆங்கில்லை. ஆனால் நீரின் அலைச்சல் மட்டும் உண்டு என்றார். ஆதலின் நீர்வளம் மிக்கநாடு அது என்பதும் செல்வம் மிக்கநாடு அது என்பதும் பெறப் பட்டது. வானம் வழங்கப்பெற்ற நாடாதலின், தானமும் தவமும் அங்கே தங்கியிருந்தன. அது பற்றியே அடுத் தாற்போல " நிறைவான் பொருள் இடுவார் போரல்லது பகையில்லது " என்றார். உயர்ந்தபொருளைத் தாராள மாகக் கொடுப்போர் இரப்போரை "இன்னும் அதிக மாகப் பெறுமின்" என்பதாலும் அவர்கள் 'வேண்டாம் வேண்டாம்' என்று மறுப்பதாலும், இவ்விருவருக்கு மிடையே நிகழும் போரையன்றி, வேறு சண்டை ஆங் கில்லை என்றார். ஏன் ? இரப்போர் இன்மையால் செல்வர் சிலரை எளியர் என மதித்து அவர்கட்கு ஈதலும், அவர் கள் சீ வேண்டாமென்று இகழ்தலுமே ஆங்குள்ள சண்டைகட்குக் காரணம். வேறெவ்வித காரணத்தா லும் ஆங்குச் சண்டை இல்லை என்று அந்நாட்டுச் செல்வ வளம் கூறினார். இச்சண்டை நிகழினும் ஆங்குள்ளா ருக்கு மனதில் களங்கம் என்பதே கிடையாது என்பதை வற்புறுத்தவேண்டிப், பின்னர், வானத்தில் மழை மேகத் தில் கறுப்பு இருக்குமே தவிர மக்கள் மனத்தில் கறுப்பு இராது என்பதை, " புரிவான் மழைபொழியும் காரல்லது கறையில்லது " என்று கூறினார். எனவே, " ஒற்றுமை யும் புனிதமும் வாய்ந்த உயரிய இலட்சிய மக்கள் ஆங்கே வதிந்தனர் " என்றார். மேலும், " சீர்மைமிக்க அறவேலி யல்லாது, சிறைவேலி ஆங்கில்லை " என்றார். அறமாகிய வேலியால் மக்கள் தங்களைத் தூயராகக் காவல்செய்து கொண்டனர். அறத்தினின்று வழுவுவார் ஆங்கிலர் ஆத லால், அரசனால் சிறைத்தண்டனை பெறுவாரும் ஆங்கில்லை. எனவே கயவரைக் காவல்செய்யும் சிறைச் சாலைகள் ஒன்றும் இல்லாத நகரம் என்றார். இத்தகைய நகரம் ஒன்று அமையுமாயின் அந்நகரத்தை மேல்வரிச் சட்ட

மாகிய நகரம் என்று கூறலாமே. இத்தகைய நகரம் ஒன்றை முனிவர் தம் மனோ கற்பனையில் அமைத்துக் காட்டுகின்றார். புலவர் கூறும் இவ்வுயரிய இலட்சியங்களும், மக்கட் பண்புகளும் நம் மனதில் பதியப்பதிய நாம் அதிற் பாதியையேனும் அடைந்து பண்படுவோம் அன்றோ!

தேம்பாவணி ஆசிரியர் யூதேயா நாட்டு மலையொன்றினைப்பார்த்து, அதன் அழகில் மிகவும் கவர்ச்சியுறுகின்றார். அப்பொழுது மழை தாரைதாரையாகக் கொட்டுகிறது. வெண்ணிற அருவிகள் மலையினின்றிறங்குகின்றன. முனிவர் தம் முன்னிற்கும் மலையின் காரணமாக இருதிறத்தாருக்கு இடையில் ஒருபெரும் போட்டி நிகழ்வதாகத் தம் மனோகற்பனையில் குறித்துக் காட்டுவார். எவ்வாறு எனில்,

> "புள்ளிமால்வரை பொன்னுலகிடத் தெடுத்துய்த்தல்
> உள்ளிவான்விடும் வடமெனத்தாரைகள் ஒழுக
> வெள்ளிநீள்துடர் விசித்ததைப் பிடித்தெனச்சூழத்
> துள்ளிவீழ் உயர்தூங்கிய அருவியின் தோற்றம்"

என்று கூறுவார். அந்தப் பெருமைவாய்ந்த மலையை வானவர் பொன்னுலகத்திற்குக் கொண்டுபோக எண்ணி, பெயர்த்து எடுக்கத் துணிந்து வானத்தினின்று விட்ட வடக்கயிறுகள்போல மேலிருந்துவிழும் மழைத்தாரைகள் தோன்றுகின்றனவாம். மலையைச் சூழத் துள்ளி விழும் அருவிகளோவென்றால், அம்மலை பெயர்ந்தெழாதபடி பூமாதேவி பூமியோடு சேர்த்துக்கட்டியிருக்கும் வெள்ளிய நீண்ட சங்கிலிகள் போலத் தோன்றுகின்றனவாம். விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் மிகவும் விரும்பத்தக்க அம்மலையின் பேரழகை இங்ஙனம் தற்குறிப்பணி வாயிலாகக் கூறியது இன்பத்தை விளைக்கின்றது.

அந்தம் வாய்ந்த சந்தக்கவி பாடுவதில் அதிகத் திறம் படைத்தவர் நம் பெஸ்கியடிகள்; பின்வரும் பாடலைச் சந்தம்சேர்த்துப் படித்துப்பார்க்கின் அவ்வோசைநயம் தெரியும்.

ஒருநா தன்என்று தனியே கன்றின்றும்
ஒருமூ வர்என்று பெயராய்க்
குருவா கிவந்து தணவா (து) அகன்று
குறுகா தும்எங்கு முளனுய்ப்
பொருளா தியென்று பொருள்தோறும் நின்று
பொருள்தோ றழிந்து சிதையா
அருவா கிநின்றும் உருவோய் இயார்உன்
அருவீ ரஆண்மை அறிவார்!

குறில்களான நிரையசைகளை அடுத்து, நெடில்களான நேரசைகளை நிறுவி, ஏற்றமும் இறக்கமும் ஆகும் துள்ளலோசை பிறக்கச், சீர்களை அமைத்துப், புனைந்த கவியில் பொருந்திய சந்தம் இசைக்கு ஓர் இலக்கியமாக மிளிர்கின்றது.

2. திருக்காவலூர்க் கலம்பகம்

இதுகாறும் தேம்பாவணியில்உள்ள சில அழகிய செய்யுட்களைப் பெயர்த்தெழுதி முனிவரின் முற்றிய புலமைத் திறங்கண்டோம். இனிமேல் திருக்காவலூர் கலம்பகத்தினின்று சில காட்டுவோம்.

திருக்காவலூரில் கோயில்கொண்டெழுந்தருளிய தேவமாதாவின்மேல் மூவாமுதல் அன்பு கொண்ட நம் முனிவர் அவ்வன்பை வெளியீடு செய்யும் விருப்பம் கொள்கின்றார். அவர் தேவாரம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய பக்திச்சுவை ததும்பிய பனுவல்களைப் படித்துப் படித்து அவற்றின் சொற்சுவையில் தோய்ந்தவர், அனைய தன்மைவாய்ந்த அவர் தம் வாயினின்று, அப்பக்தர்கள் தம் அன்பை வெளிப்படுத்தியவாறு, சொற்கள் வெளிப் படத் தானே செய்யும்! திருவேங்கட நாதனின் திருச்

சந்நிதியிலேயே எப்பொழுதும் நீங்காதிருக்கவேண்டும் என்னும் பேரவாவைக் கொண்ட தம் மனத்துள்ளே, "யான் ஏன் அங்குமிங்கும் அலைந்துதிரியும் மனிதனாய்ப் பிறந்தேன். இத்திருவேங்கடமலையின் சுனையில் வாழும் ஒரு மீனாகப் பிறந்திருக்கமாட்டேனா? ஆயின், நாடோறும் எண்ணிறந்த பக்தர்களைக்காணும் பேற்றுடன் பகவானையும் காணும் பாக்கியமும்பெற்று இவ்வெல்லையினின்று நீங்காதிருப்பேனே. அல்லது இம்மலையில் உள்ள படிகளில் ஒன்றாகப் படிந்திருக்கமாட்டேனா? அல்லது இங்குள்ள சுனைக்கரையில் வதியும் கொக்காகப் பிறந்திருக்கமாட்டேனா?" என்றெல்லாம் பாடுகின்றார். இப்பாடல்களிலும் விவிலிய நூலின் தேன் சொட்டும் பல பனுவல்களிலும் தோய்ந்த வீரமாமுனிவரும் தேவமாதாவின்மேல்உள்ள தம் பக்தியை அவ்வண்ணமே காட்டி மனம் உருகப்பாடுகின்றார். திருக்காவலூர்க் கலம்பகம் முப்பத்தாறும் செய்யுளிலே,

> **தாள்அணிந்த மதிமுதலாத் தமியனும்அக்**
> **கமலத்தாள் தாங்கி லேனோ?**
> **கோள்அணிந்த குழல்அணிதார் குடைவண்டாப்**
> **புகழ்பாடி மதுஉண் ணேனோ?**
> **வாள்அணிந்த வினைப்படைவெல் வலிச்சிங்கம்**
> **ஈன்ற ஒரு மானாய் வந்தாள்**
> **கேள்அணிந்த காவல்நலூர்க் கிளர்புனத்துப்**
> **பசும்புல்லாக் கிடவேன் நானோ?**

என்று பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பரவச நிலையில் நின்று பாடுகின்றார். ஈண்டு தேவமாதாவை "வாள்அணிந்த வினைப்படைவெல் வலிசிங்கம் ஈன்ற ஒரு மானாய் வந்தாள்" என்றார். "கொடுமைவாய்ந்த தீவினைகளாகிய சத்துருக்களை வென்ற வலிய சிங்கத்தை ஈன்ற மான் என வந்தாள் தேவமாதா" என்றார். 'சிங்கம் ஈன்ற

மான்' என்றமை பொருட்சுவையும் சொற்சுவையும் மிகச் செறிந்துநின்றது. "அம்மாதாவின் திருவடித் தாமரையைத் தாங்கும் சந்திரனாகப் பிறந்திருக்கமாட்டேனா? உடுக்கள் இலங்கும் அவளது கூந்தலில் அணியப் பெற்றுள்ள மலர்களைக் குடையும் வண்டாகப்பிறந்து, அவ்வம்மையாரின் செவிக்கு இன்னிசையூட்டி, அம்மலர்களின் மதுவைஉண்டு களித்திருக்கமாட்டேனா? கேள்வியால் எங்கும் பெயர்பெற்று விளங்கும் திருக்காவலூர்க் கோயிலைச்சார்ந்த சோலையில் வளரும் பசும்புல்லாகக் கிடக்கும் பேறுபெற்றிருக்கலாகாதா?" என்று கூறுவதே மற்றை அடிகளின் பொருளாகும். எனவே, முனிவர், ஆழ்வார் கூறிய கூற்றுக்களின் கருத்தையே தம் கருத்தாகக்கொண்டு கவிபுனைந்தமை தெள்ளிதிற் புலனாகின்றது.

அம்மானைச்செய்யுள் என்பது பெண்கள்கூடிக் கும்மியடிக்கும்போது பாடுகின்ற ஒருவகைச் செய்யுள். ஒன்பது பெண்கள் பெரும்பாலும் ஆடுகிற இக்கும்மியாட்டத்தில், முதல் மூன்று பெண்கள் யாதாம் ஒரு கருத்தை எடுத்துரைப்பார். அடுத்துள்ள மூன்று பெண்கள் அக் கருத்திற்கு மறுப்புக் காட்டுவர். ஏனை மூன்று பெண்கள் மறுப்புக்குச் சமாதானங்கூறுவர். இம்முறையில் அம்மானைச்செய்யுள் பாடப்படும்.

திருக்காவலூர்க் கலம்பகத்தில் தேவமாதாவின்மேல் சில அம்மானைச் செய்யுட்களை முனிவர் பாடியுள்ளார். தேவமாதா சந்திரசூரிய நட்சத்திரங்களை முறையே பாத குறடாகவும், ஆடையாகவும், மகுடமாகவும் கொண்டுள்ளாள் என்பது அருளப்பர் எழுதிய காட்சியாகமத்தில் உள்ளது. இவ்வுண்மையை அடிப்படையாகவைத்து முனிவர்பாடிய அம்மானைச்செய்யுட்கள் அகத்தை இன்

பத்தில் ஆழ்த்துவனவாகும். அவற்றுள் ஒன்று பின் வருமாறு:—

"போதலரும் தண்சினைக்காப் பூங்காவல் ஊர்அரசி
ஆதவனைத் தூசாய் அணிந்தனள்காண் அம்மானை
ஆதவனைத் தூசாய் அணிந்தனள்என் றுமாயின்
மாதர் அரும் மேனிநலம் வாடாதோ அம்மானை?
மா (து) அருள்நீர் மூழ் (கு) இரவி வாய்குளிரும் அம்மானை."

முதல் இரண்டடிகள் முதல் பஞ்சாருடைய கூற்று. அவர்கள் மூவரும் சேர்ந்து, "அரும்புகள் அலரும் குளிர்ச்சிபொருந்திய மரங்கள் அடர்ந்த சோலைவாய்ந்த திருக்காவலூர்த் தேவமாதா, சூரியனை ஆடையாகத் தன் மேனியில் அணிந்துள்ளாள்" என்று ஒரு செய்தியை விளம்புகின்றனர். அடுத்துள்ள இரண்டு அடிகள் இரண்டாம் பிரிவினர்தம் கூற்று. அவர்கள் மூவரும் சேர்ந்து, முதல் மூவரை நோக்கி, "தேவமாதா ஞாயிற்றை ஆடையாகப் போர்த்தியிருப்பது உண்மையாயின் வெப்பம் வாய்ந்த ஞாயிறால் தேவமாதாவின் திரு மேனி வாடி-விடாதோ" என்று கூறி, முற்கூறப்பட்ட விஷயத்தை மறுக்கின்றனர். பின்னுள்ள ஈற்றடி மூன்றும் பகுதியாருடைய கூற்று. அவர்கள் முதற் கூற்றின் பின்எழுந்த மறுப்புக்குச் சமாதானம் கூறத்தொடங்கி, அது எப்படி-வாடற்பாலது? "தேவமாதாவின் திரு அருட்கடலிலேயே எப்பொழுதும் முழுகிப் படிந்துகிடக்கும் ஆதவனும் உடல் குளிர்ந்து போகின்றான்." என்றுகூறி, மறுப்புக் கூறியவர்களது வாயை அடைத்துவிடுகின்றனர். எனவே செய்தியும், ஆக்ஷேபனையும், சமாதானமும் அடங்கிய நிலையில் உள்ள இச்செய்யுளின் நயம் பன்னப்பன்ன உண்ணின்று ஊறும் உவகைக்கடலுள் நம்மை ஆழ்த்த வல்லது.

3. கித்தேரியம்மாள் அம்மானை

அர்ச். கித்தேரியம்மாள் கி.பி. 130-ம் ஆண்டு மே மாதம் 21-ம் தேதி கிறிஸ்துவின் வேதசாட்சியாக மரித்த ஓர் மாதரசி. இத்தவப்பெண் இஸ்பானியா நாட்டிலுள்ள பொம்பேரு மலைக்குன்றின்மீது கட்டப்பெற்றிருந்த அர்ச். இராயப்பர் கோவிலின்கண் ஒரு மடம் நிறுவிக் கடவுளுக்கென்றே தன் காலத்தைக் கழித்து வருங்காலத்தில் கிறிஸ்து மத விரோதியாகிய அவளது தந்தையின் ஏவலால் சிரங்கொய்யப் பெற்றுப் பரமபதம் எய்தினள். அவள் பெயரால் நடந்த அற்புதங்களும் புதுமைகளும் எண்ணிறந்தன. அவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து அவை யாவும் உண்மை எனக் கண்ட பெரியோர்கள் கி. பி. 1716ம் ஆண்டில் அவளைப் 'புனிதவதி' எனத் தீர்மானித்தனர். அதுமுதல் அவளது பெருமை ஐரோப்பாவில் மட்டுமன்றி, இந்திய நாட்டிலும் பரவிற்று. அவள்மேல் ஆரா அன்பு மலிந்த வீரமாமுனிவர் அவ்வம்மையாரை இந்நாட்டில்,

"ஏலாக்குரிச்சி வடக்கேந்து நிழல்காட்டருகே
அருட்காவல் நீங்காஅடைக்கலத்தாய் கோயிலிடை
திருக்காவலூர் வணங்க"

நிறுவினர்.

அன்றியும், கற்றோரும் மற்றோரும் எளிதில் சுவைத்தறியுமாறு ஓர் அம்மானையும் அவ்வம்மையார்மீது பாடியருளினார்.

சொல்லழகு பொருளழகு முதலிய நல்லழகுகள் பலவும் செறிந்து செல்லும் இந்நூல் முதற்கண் இலுசித்தானியா (போர்த்துக்கல்) நாட்டின் பெருமையைக் கூறுகின்றார். இந்தப் போர்த்துக்கல் தேசவாசிகளே முதல் முதலாகக் கிறிஸ்து மார்க்கத்தை எங்கும் பரப்பினர் என்பதை முனிவர்,

"ஓராழி ஆண்டவரை ஓதமரக்கலங்கள்
நீராழி எங்குமருள் நேர்ந்துவிடும் நாடதுவே

பாரில்எங்கும் பாவவினை பாய்ந்தவிருள் நீத்திரவி
நேரவெங்கும் வேத ஒளி நீட்டிஒளிர் நாடதுவே"

என்றார். அந்நாட்டு நீர்வளம் நிலவளம், மக்கட்பண்பு முதலியனவற்றை முனிவர் வருணிக்கும் பகுதி மிகவும் சுவைக்கத்தக்கது. அவற்றினின்று சில தாழிசைகளை மட்டும் எடுத்தெழுதின் அந்நயத்தை ஓரளவில் பருகலாம். அவைகள் பின்வருமாறு—

1\. "மெய்யாம் மறைப்பயன்போல்
மேய்ந்தகடல் நீர்உமிழ்ந்(து)
பொய்யா மழையால்
பொலிசைபொய்யா நாடெனவே,

2\. "பங்கயம்மேல் ஓதிமங்கள்
பார்ப்பொடு நற்பள்ளியுறப்
பொங்கயம்நீர்ச் சங்கார்ப்பப்
பூங்கழனி பூத்ததுவே

3\. "கடைந்த தயிரல்லால்
கலங்குவன அங்கணிலை
குடைந்தசுழி நீருமலால்
கோணிச் சுழன்றதிலை

4\. "தேனரும்பும் பூங்கரும்பின்
செல்வமொடு காய்த்தசெந்நெல்
கூனிரும்பால் கொய்திடும்போர்
கொள்வதலால் போர்இலதால்,

5\. "காயும்எனக் கண்ட(து) உலை
காயம்எனக் கண்ட(து) உள்ளி
மாயும்எனக் கண்ட(து) நாள்
மாறும்எனக் கண்ட(து) அலை,

6\. சாயும்எனக் கண்டதுசூழ்
சாலிநெடும் பொற்கதிரே
தேயும்எனக் கண்டதுகை
தேய்த்துரைத்த சந்தனமே

7. தாழ்வன ஆங்கில்லை
தவத்தின்நலோர் உள்ளம்அலால்
வாழ்வனஆங் கல்லதில்லை
மாறிலவாழ் நாடதுவே

8. பூமா தணிமுடியாம்
பொற்புறுமந் நாடணிசீர்
பாமா புலவருந்தாம்
பாடுவரோ அம்மானை"

இவ்வாறு எளிமையும் இனிமையும் வாய்ந்த அடிகள் நூல் முழுவதிலும் பரந்து நிற்கப் பார்க்கலாம்.

கித்தேரியம்மாளுடன் பிறந்தார் எண்மர். நவ கன்னியரும் சிறு வயது முதலே இயேசுவின் அடியார்களாக அவரையே தியானிப்பதிலும், அவருக்கே பணி செய்தலிலும் அவரையே புகழ்வதிலும் இடையறாது தம் பொழுதைப் போக்கினர். அன்னவர் தம் பக்தி நிலையை முனிவர் பாடத்தொடங்கி,

1. "காலைக் 'கமலம்'எனக்
கர்த்தன்புகழ் வாய்மலர,
மாலைக் கமலம்என,
வந்தடியில் கைகுவிய,

2. முப்பொழுதும் ஓர்பொழுதாய்
முற்றறிந்த நாயகனை
எப்பொழுதும் ஓர்பொழுதாய்
எண்ணிநனி நாடுவரால்

3. தேன்வாய் மலர்பூத்த
சீர்கண் டிவைபடைத்தோன்
வான்வாயிற் கட்டழகெம்
மாண்புளதோ? என்பவரால்

4. கந்தமலர்ச் சூழ்ந்தவண்டு
கவ்விமொய்க்கும் ஆசைகண்டே
எந்தைஅடி மேவேமோ!
இவ்வளவா என்பவரால்

5\. கண்டதெலாங் கர்த்தாவைக்
காட்டியகண் ணடியெனக்
கொண்டதெலாம் மெய்ஞ்ஞானம்
கூறியவாய் ஆயினவே."

என்று கூறி முடித்த திறம் கூறமுடியாத பாராட்டுரைகளுக்கு இலக்காக விளங்குவதாம்.

காயன் என்னும் அரசன் தன் குழந்தைகளாகிய நவ கன்னியர் இயேசுவின் திருவடிச் செல்வராய் வாழ்வதைப் பொறுக்கவில்லை. அன்னவர் தன்னணையை மறுத்துக் கிறிஸ்தவ சமயப்பற்றில் ஆழ்ந்து கிடந்தமையால் அன்னவர்க்குச் சிறைத் தண்டனை வகுத்து இன்னலுறும்படி செய்தான். அவர்கள் சிறை புகுந்த அன்றிரவில் இயற்கையாகிய அன்னையும் மென்னி மென்னி அழுது மெழுகாய் உருகுகின்றாள். அந்நிலையை ஆசிரியர் தற்குறிப் பணிவாயிலாக அணிபடச் சித்தரிக்கின்றார் பின்வருமாறு:

1\. "நீதியொழிந் தன்றுசெய்த
நிந்தைபொறு நொந்ததெனச்
சோதியொழித் தாழ்கடலுள்
தோய்ந்திருள்மேல் போர்த்ததுவே.

2\. காலை யிவர் நல்வதனம்
காட்டிமலர் செங்கமலம்
மாலையிவர் பாடறிந்து
வாசலடைத் தஞ்சினவே.

3\. அறம்பகைத்த வேந்தனுளத் (து)
அந்தரம்போல் நண்பகலின்
திறம்பகைத்த மாலைஇருள்
சேர்ந்துலகம் மூடினதே.

4. இவருளம்நேர் என்றிருளை
ஈர்த்துலகம் தான்விளக்க
உவருளநீர் மொய்கடல்மேல்
ஒண்மதியம் தோன்றியதே.

5. தன்னினமாம் மின்னார்
தருந்துயர்காண் வானமுது
மின்னினமார் கார்த்துளிபோல்
வீழ்ந்தபனி மிக்கனவே."

இங்ஙனம் அழகிய நடையில் பொழுது அடைதலைக் கூறும் வகையாலே, அக்கன்னியர் பொருட்டு இயற்கைப் பொருட்கள் அடைந்த துன்ப நிலையையும் அங்கைக் கனி யெனக் காட்டினர் முனிவர்.

சிறையிருந்த செல்வி ஒருநாள் தேவமாதாவின் திரு முக தரிசனம் கண்டு அகமுருகப்பாடி அம்மாதாவை வேண்டும் நிலையைக் கவிஞர் கவினொழுகப் பாடுவதுடன் இதனை முடிப்போம். அவ்வடிகள் வரையப்பெற்ற வாறு :—

1. "வானோர்க் கமுதியலே!
மண்ணோர்க் குயிர்நிலையே!
ஈனோர்க் குறுதுணையே!
என்னரசே மாமரியே!

2. கல்லார்க்கு நூற்கடல்நீ,
காவலிலார்க் கோரரண்நீ,
இல்லார்க்கு மேல்திருநீ,
எல்லார்க்கு மெல்லாம்நீ,

3. கனியீன்ற கன்னிகையே!
கன்னியர்க்கெல் லாம்தாயே!
இனிதீன்ற கன்னியெனும்
என்மேல் இரங்கலையோ?!

4. இருளீர்த்த வெண்பிறைமேல்
ஏறியொளிர் மெல்லடியாய்!
மருளீர்த்த நானிருளா
வாய்த்தவழி காட்டிலேயோ?

5. மனங்குளிர்க்கும் செங்கதிரை
வாய்த்துடுத்த மேனிநலாய்!
இனங்குளிர்க்கு மோர்கதிரை
இன்றெனக்கு நல்கிலேயோ?
என்றுருகா நின்றழுதாள்"

என்றார்.

# அ. வரகவியின் வாழ்க்கைத்திறம்

## 1. தியாகம்

ஜோசப் கான்ஸ்டென்ஷியஸ் பெஸ்கி கி. பி. 1680ம் ஆண்டில் பிறந்து முப்பது ஆண்டு வரையில்தான் மேனுட்டில் வாழ்ந்தவர். அவர்தம் இளமைப் பருவத்தையும் கல்விப் பருவத்தையும் மட்டும் அங்கே கழித்துவிட்டு, நல்ல வாலிபப் பருவத்தில் இங்கே வந்து சேர்ந்தார். அவர் தம் வாழ்நாளில் சிறந்த பகுதியை, ஏறக்குறைய 37 ஆண்டுகளைத் தமிழ் நாட்டின் நன்மைக்கென்றே செலவு செய்தவர். ஆதலின் அவர் தமிழரில் தமிழனுய் வாழ்ந்தார்.

பெஸ்கி அடிகள் ஆரம்பத்தில் இருந்தே மிக்க சுறு சுறுப்புடனும் விறு விறுப்புடனும் தம் அலுவல்களைச் செய்திருப்பர் போலும். அஞ்சாத் தன்மையும் சுறு சுறுப்பும் வாய்ந்தமையால் 'தைரியநாதசுவாமி' என்ற பெயருக்கு மிகவும் பொருந்தியவராய் இருத்தல் வேண்டும். கொள்கையில் சாந்தம் மேற்கொண்ட துறவியாய் இருப்பினும், செயல்களை நடை முறையில் சாதிக்கும் நிலையில் அவர் வீர தீரம் படைத்த முனிவராய் இருந்தார். ஆதலால் கற்றோரும் மற்றோருமடங்கிய மக்கட் கூட்டம் அவரை 'வீரமாமுனிவர்' என்று அழைத்ததும் சரிதான். வீரத்தையும் தைரியத்தையும் விழையும் தமிழ் மக்கள் முனிவர்பால் காணப்பட்ட வீரத்தையும் தைரியத்தையும் நோக்கி, மிகவும் உரிமை கொண்டாடினர். ஆண்மை நிரம்பிய வீரனிடமே அருளும் வழியும் அன்றோ? முனிவர்பால் கண்ட சாந்தத்தையும் சற்குணங்களையும் பற்றற்ற பண்புகளையும் முற்றுமறிந்த சந்தாசாகிப் 'இஸ்மதி சந்நியாசி' என்னும் இனிய பெயரால் அவரை அழைத்துப் பெருமைபடுத்தினர். 'இஸ்மதி சந்நியாசி' என்பது ஒரு பாரசீகப் பட்டப் பெயர். 'விழுமிய விரத்தர்' என்னும் பொருளைத் தன்பால் அடக்கியது. வீரமா

முனிவர் ஆற்றிய அரும் பெருஞ் சேவைகளாலும் செயற்கரிய செயல்களாலும் தமிழ் மக்கள் அவரது ஆண்மைத் திறத்தை அறிந்தார்களாக, அவர்பால் கொண்ட நட்புடைமையாலும் நட்பின் செயல்களாலும் சந்தாசாகிப் அவருடைய அருட்டிறத்தை அறிந்தார். இவ்வாறு தமிழ் நாட்டில் வதிந்த இந்து, முஸ்லிம் கிறிஸ்தவர்கள் ஆகிய எல்லா மக்களும் பெஸ்கியடிகளைத் தமராகக் கொண்டு வாழ்ந்தனர் எனலாம்.

வீரமாமுனிவர் ஐரோப்பிய மொழிகளையும் கலைகளையும் பயின்றபின் துறவறம் புகுந்தார். அப்பண்டைக் காலத்தில் இவர் அரசியல் அலுவலொன்றை நாடியிருப்பின் அவர்தம் கல்வித் திறத்திற்கேற்ப, அரிய பெரிய பதவிகளில் ஒன்றில் அமர்ந்திருக்கக்கூடும். ஆயினும் அரசியல் துறையை அற்பமென மதித்து, அவர் திருவருள் துறையில் இறங்கினர். தாம் பெரிதும் விழைந்த அறத் தொண்டுகளை பரந்த நிலையில் ஆற்ற எண்ணியே, சுயதேசம் நீத்துப் பரதேசம் செல்லக் கருதினர். அவர்தம் திருவுளச் சீட்டு இந்தியாவின் பேரில், சிறப்பாகத் தமிழ் நாட்டின் பேரில், விழுந்தது. நமக்கும் நமது மொழிக்கும் பேரும் புகழும் பெருக அது உதவிற்று.

வீரமாமுனிவர் மதுரைக்கு முதலாவது வந்த நோக்கம் திருப்பணி செயற்கே; செந்தமிழ்ப்பணி செயற்கன்று. இயேசு சபையின் குருமாரில் ஒருவராகிய அவர் வறுமையையும் தியாகத்தையும் மேற்கொண்டு, துறவறத்தில் ஊன்றியிருந்து மக்கட்கு அறம் புரியவேண்டும் என்றெண்ணினர். இத் தீர்மானத்தையே முதன் முதலாகச் செந்தமிழ் நாட்டில் நிறைவேற்றித் தீர்த்தார்.

முனிவர் மக்களது ஆன்ம நலங் கருதி ஆரணவுரை புகட்டி அருந் தொண்டாற்றினர். ஆன்மப் பிணியகற்றுவிக்கும் அரிய மருந்து அளிக்கவே, அவர் கிறிஸ்துவானவரின் அறவுரைகளைப் பரிமாறினர். ஆன்ம நல் விளைவு

கட்கு உறுதியான ஆதாரமாக விளங்குவன கிறிஸ்து பெருமான் காட்டிய நெறிகள் என்பது அவர்தம் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட உண்மைப் பொருள். இவ்வுட்கோளை மக்களுடைய மனதில் ஊன்றுவிப்பதில் அவர் விழுமிய வெற்றி கண்டார்.

2. உயிர்ப்பலி

உண்மைக்கு ஊறு நேருமாயின், உடலையும் உயிரையும் கொடுத்து, அவ்வுண்மையை ஓம்பும் ஒப்பற்ற வீரசிகாமணிகளில் ஒருவராக அவர் விளங்கினர். இயற்றமிழ் முனிவர் தாம் எண்ணிய காரியத்தில் திண்ணிய வெற்றி கண்டார் எனினும், அவர் தாம் விரும்பிய தொன்று, நிறைவுறாமைகண்டு, மனம் நொந்தார்.

**"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயிர் எல்லாம் தொழும்"**

என்னும் திருமறை தெளிந்த அவர்தம் வாழ்நாள் முழுதும் ஓரியூரில் அருளானந்தருக்குக் கிடைத்த பேறு தமக்குக் கிடைக்காமற் போனது பற்றியே மனம் இடைந்தார். அருளானந்தர் அடைந்த பேறு எது? இவர் அடையாமற் போனது எது? அக்காலத்து வரலாற்றின் மூலமாக இதனைத் தெளிந்து கொள்ளலாம்.

சேது நாட்டிலே போர்த்துக்கீசிய குருவானவர் ஒருவர் அருளானந்தர் என்னும் தமிழ்ப் பெயர் பூண்டு, கிறிஸ்து சமயத் தொண்டுகள் செய்து வந்தார். அருளானந்தருடைய அறவுரைகளும் தவவொழுக்கங்களும் சேது நாட்டு மக்கள் மனத்தைக் கவர்ந்தன.. சேதுபதியாய் விளங்கிய விஜயரங்கநாதத் தேவர்க்கு இது பிடித்தம் இல்லை. அவர்தம் உறவினரிற் சிலருங்கூட இயேசு சமயத்தை உயர்வாகப் பேசியது கேட்டு, மனம் கூசினர். அவன் அருளானந்தரைப் பிடித்து ஆரிருள் படிந்த சிறையகம் புகுத்தினன். அருளானந்தர் சிறை புகுந்தும்,

புது மறை புகுந்தவர் அதனை விட்டபாடில்லை. ஆதலின், சேதுபதி சீற்றங்கொண்டு, சிறை மாற்றம் செய்பவன் போல திருத்தொண்டரை ஓரியூருக்கு ஓரவஞ்சகமாக அனுப்பி வைத்தனன். சேதுபதிக்கு உறவினனாகிய ஓரியூர்த் தலைவன் சேதுபதிக்கு மிஞ்சிய நிலையில் இயேசு சமய விரோதி. ஆதலின், அவன் அருளானந்தரைச் சிரச்சேதம் செய்தான். சிரச்சேதம் செய்வித்தவனும் சின்னாளில் ஓர் சதிக்கு இரையாகித் தன் விதியை முடித்துக்கொண்டான். இது வீரமாமுனிவர் இந்நாடு புகுதற்குச் சின்னாள் முன்னர் நடந்தசெய்தி. இதுபோலும் அவர்தாமும் கிறிஸ்துவுக்கு வேதசாட்சியாக மரிக்க விரும்பினார், அதுமட்டும் கைகூடாமற் போயிற்று.

உயரிய எண்ணம் படைத்த உத்தம முனிவர் திருத்தொண்டாற்றுவதில் மனஉரம் படைத்தவராய் விளங்கினார். அம்மனோபலத்தைத் தம் சலியா உழைப்பினால் செயல் முறையில் காட்டினார். ஆதலின் கொந்தளிப்பு நிரம்பிய அக்காலத்திலும் மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து கிறிஸ்தவர்களாயினர். நாடெங்கும் சபைகள் பெருகின ; உறுதி கொண்டன.

வீரமாமுனிவர்பால் பொருந்திய அரிய பண்பாடுகளே அவர்தம் தொண்டில் பெரிய வெற்றியையளித்தன. கிறிஸ்தவர் என்ற பெயருக்கேற்ப, கிறிஸ்து அவராக விளங்கினார். உடல், உயிர், ஆன்மாவென்னும் முப்பகுதிகளில் யாவேனும் ஒன்றிற்கு அநியாயமாக அவதி ஏற்படுமாயின், அது மக்களின் நல்லொழுக்கங்களுக்குத் தீங்கு விளைத்தற்பாலது. இவ்வுண்மை நெறிநின்ற அடிகள் தன்னுயிர் போல மன்னுயிரைக் கருதினர். வெறுமனே உபதேசவுரைகளால் அவர் மக்களிடை மத மாற்றம் உண்டு பண்ணவில்லை. கிறிஸ்து பெருமானின் தியாக சிந்தையையே தம் சிந்தையாகக் கொண்ட முனிவர் மக்கள்தம் உடல் உயிர்களுக்கு அபாயம் நேரும்

பொழுது, அவர்கட்கு மனதார உதவினர். இந்நாட்டு மக்களைத் தம் மக்களாகப் பாவித்துச், சாலவும் அன்பு கூர்ந்தார். அம்மக்களும் அவரை அன்புடன் கொண்டாடி, ஆன்ம நலங்கருதி, அவர் காட்டிய நன்னெறிக் கண் வருவாராயினர்.

### 3. கடவுட் பற்று

சீலமும் பக்தியும் ஆர்ந்த துறவியின் சிந்தையில் சுய நலம் அணுவேனும் இல்லை. தனக்கென வாழாது பிறர்க்கெனவே வாழநினைத்த முனிவர், தம் புறக் கோலத்தையும், சொல்லப்போனால் அகக் கோலத்தையும் தமிழ்க் கோலமாகவே மாற்றிக் கொண்டார். அக்காலத்தில் காவியாடை கட்டிய கசடறு முனிவர்களுக்கு மக்கள் மிக்க மரியாதை கொடுத்து வந்தனர். இந்நாட்டாருக்குத் தம்மைத் துறவி என்று காட்டுவார் தாமும் காவியுடையும் தலைப் பாகையும் அணியலானார். அவர் மடத்திலிருந்தாலும், வேறிடத்தில் இருக்கை கொள்ளினும், புலித் தோலாசனத்தின் மேல்தான் வீற்றிருப்பார். வீரமாமுனிவர்தாமே தேம்பாவணியில்,

> "கோலமே வீணடா குளித்தல் வீணடா
> சூலமே வீணடா துறவு வீணடா
> காலமே மந்திரம் கதைத்தல் வீணடா
> சீலமே கெடநசை செகுத்திலா வரோ?"

என்று புறக்கோலத்தின் பயனின்மை கருதிப் பாடியிருப்பினும்,

> "மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்த தொழித்து விடின்"

என்னும் தமிழ் மறையின் கருத்தை நன்கு அறிவாரெனினும், அகமும் புறமும் ஒப்ப அருந்தவ முனிவர் வேடங் கொள்வது குற்றம் அன்று என்றே அடிகள் தேர்ந்தருளினார்.

4. வாதுபுரியும் வன்மை

வீரமாமுனிவர் செந்தமிழ் நாட்டில் ஆற்றிய தொண்டு வாதத்திற்கு இடமான தொண்டேயாம். இயேசு சமயப்பற்றை மக்களிடை மாண்புற நிறுவுதல் வேண்டிப் பணி செய்த அவர் இந்து மதப் பற்றுடையாரோடு வாதம் நிகழ்த்தியே ஆதல்வேண்டும். வார்த்தையாடலால் சிலரை அவர் வசப்படுத்துவார். வாய்ப்புடைய நன்மைகளைச் செய்து சிலரை வசப்படுத்துவார். இங்ஙனம் வீரமாமுனிவர் பலரை வசப்படுத்தியது வாதத்திற்கு இடமான செயலாயிற்று. அவ்வாதத்திற்கும் அவர் பதில் சொல்லித்தான் தீரவேண்டும்.

இரு பக்கங்களில் நின்று வாதம் செய்வோரது வாதம் சுவைபட நிகழ வேண்டுமானல், அவ்விருவரும் இருபட்சத்து அறிவையும் போதிய நிலையில் உடையராயிருத்தல் வேண்டும். கிறிஸ்து சமயத்தை மட்டும் அறிந்தவன் தான் ஒன்றும் அறியாத இந்து மதத்தைப்பற்றி அதை முற்றும் அறிந்தவனோடு வாதம் செய்தால் அவ்வாதம் கேட்போருக்கும் பயன் தராது. செய்வோரையும் இடையில் திண்டாட்டத்திற் கொண்டு வந்துவிடும். முன் கூறியதற்கு மாறான பேர்வழிகள் விவாதத்துள் புகுவாராயினும் இக்கதியே நேரும். ஆகையால் வீரமாமுனிவர் இந்து மதத்தையும் அதைச் சார்ந்த நூல்களையும் நன்கு கற்றுணர்ந்தார். தற்காலத்தில் வதியும் இந்துக்களில் பலர் இந்து சமயத்தைப்பற்றி யாதும் அறியாதிருந்தும், வெறுமனே மூடப் பழக்கங்களையும் வழக்கங்களையும் கைக்கொண்டு, அல்லது, மாமூலைப் பின்பற்றி, அல்லது, பிறர் செய்வதைப்பார்த்து எங்ஙனம் வாழ்க்கையை நடத்துகின்றனரோ அங்ஙனமே அக்காலத்தில் இருந்த பலரும் வாழ்வு நடத்தினர் என்பது ஒருபுடை உண்மைதான். ஏனெனில், வீரமாமுனிவர் அறிந்த அளவு இந்து மதத்தை அறிந்தார் ஒரு சிலரே அப்பொழுது இருந்தார்கள்.

ஒருகால் சிவனடியாராகிய செஞ்சடைப் பண்டாரங்கள் ஒன்பதுபேர் வீரமாமுனிவரோடு சமய வாதம் செய்து, பணயமாக வைத்த சடைகளைப் பறிகொடுத்துத் தம் நடையையும் கட்டினர் என்பது வீரமாமுனிவர் சரித்திரத்தில் உள்ள வரலாறுகளில் ஒன்று. தமிழறிவும், சமயப் பற்றும் சான்ற வீரமாமுனிவர்பால் யாரும் வாதுக்கு முன்நிற்றல் முடியாது. மேலும் கற்றவர்களும்கூட அவர் என்ன சொன்னாலும் கேட்டு வியந்தனரேயன்றி, மீட்டுப் பதில் சொல்லக் கூடாதவராயினர். ஏனெனின், அவர் கூறும் ஒவ்வொரு மொழியும், அறிவும், அர்த்தபுஷ்டியும் உடைய மொழிகள்; அவற்றினை ஆராய்ந்து மறுமொழி கூறுவதெனின் அறிவு சான்றவர்க்கே அது அடுத்தபடி. உதாரணமாக வீரமாமுனிவர் சரித்திரத்தில் கூறப்படும் மற்றொரு நிகழ்ச்சி உண்டு. அதையும் கூறுவோம்.

முனிவர் ஒருநாள் சோழநாட்டிலுள்ள புள்ளிருக்கு வேளூர் என்னும் ஊரின் வழியே சென்றுகொண்டிருந்தார். தற்காலத்தில் அவ்வூர் வைத்தீஸ்வரன் கோயில் எனப் பெயர்தாங்கி மிளிர்வது. அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் ஈசுவரன் சிறந்த வைத்தியனாய் எல்லாப் பிணிகளையும் தீர்க்கவல்லவன் என்பது அனைவருக்கும் உடன்பாடு. அதுபற்றி உற்சவ காலங்களில் நோயுற்றோரின் வரவு மிக்கிருக்கும். அதுபோது அவ்வழியே வந்த வீரமாமுனிவர் வைதீஸ்வரனின் பெருமையை அவ்வூரார் சொல்லக்கேட்டு,

> **"வாதக்கா லாந்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்**
> **போதப் பெருவயிறும் புத்திரற்கு—மாதரையில்**
> **வந்தவினை தீர்க்க மருந்தறியான் வேளூரான்**
> **எந்தவினை தீர்த்தான் இவன்"**

என்று பாடினாராம். அவ்வூர்ப் புலவர்கள் இச்செய்யுளைக் கேட்டு வியப்புற்று வாளா நின்றனராம். ஏன் வாளா

நிற்கமாட்டார்கள்! "போற்றினும் போற்றுவர்; தூற்றினும் தூற்றுவர்; சொன்ன சொற்களை மாற்றினும் மாற்றுவர்" புலவர். இத்திறம்படைத்த முனிவர்பால் எதிர்த்துச் சொல்லமுடியுமா? "என்னங்க, நிரம்பக் கேவலமாய்ப் பாடிவிட்டீர்களே," என்று யாரேனும் கேட்டிருந்தால் முனிவர் என்ன சொல்லியிருப்பார் என்பதை நாம் ஆராய்தல் வேண்டும்.

சிவபெருமானுக்கு 'வாதக்கால்' என்றார். சிவபெருமான் நடனம் செய்யும் காலத்தில் காற்றைப் பார்க்கிலும் கடிதாகக் கால்கள் சுழல்கின்றன. — வாதம் = காற்று மேலும் ஒருகாலை ஊன்றியும் ஒருகாலை மேல்தூக்கியும் நிற்பதால் வாதக்கால் போலும் என்றார். இப்படியே நிற்பதாயின் வாதமும் உண்டாகலாமே என்று முனிவர் பரிவுகொள்ளுகிறார் போலும். மைத்துனராகிய விஷ்ணுவுக்கு 'நீர் இழிவு' என்றார். அவருடைய பாதங்களிலிருந்தே ஆகாய கங்கை இழிந்தோடுவதுபற்றி நீரிழிவு என்றாரே தவிர, நீரிழிவு என்னும் வியாதி உண்டு என்பது அர்த்தமில்லை. புத்திராகிய கணபதிக்கு உள்ளத்து அறிவு அடங்காது, வயிற்றிலும் அறிவு நிறைந்து நிற்கிறது என்று சொன்னதிலும் குற்றமில்லை. போதம்= அறிவு. இத்தரையில் வந்த வினைகளைத்தீர்க்கச் சிவன் தன்னைத் தவிர வேறு மருந்தறியான். அவன் தானே மருந்தாகி எந்த வினைகளையும் தீர்ப்பதினால், 'எந்த வினையை இவன் மருந்தினால் தீர்த்தான்? வந்த வினை தீர்க்க மருந்தறியான்' என்றார். இவ்வாறு பொருள் கொள்ளக் கிடக்கும் இக்கவியை வசைக்கவி என்பதா இசைக்கவி என்பதா?

கம்பர் வாதம் செய்தலில் நிபுணர். கும்பகர்ணன் பட்சத்தில் நின்று கம்பர் வாதம் செய்தால் கும்பகர்ணன் சொல்வதெல்லாம் உண்மைபோல் தோன்றும். வீடணன் பட்சத்தில் நின்று பேசினால், வீடணன் சொல்வதெல்

லாம் மெய்போல் தோன்றும். இவ்வாறு சீதை அநுமான் வார்த்தையாடலிலும் காணலாம். கம்பர் வாதத்திறத்தில் வல்லவராயிருந்தது போலவே வீரமாமுனிவரும் இருந்தார். இக்கூற்றின் உண்மையைத் தேம்பாவணியைக் கொண்டே நிரூபிக்கலாம். வீரமாமுனிவர் யாண்டும் நிகழ்த்துவதும் உண்மை வாதங்களேயாம்.

### 5. மொழிவன்மை

சமய முனிவராகப் போந்த பெஸ்கிஅடிகள் தமிழ் முனிவராகவே மாறிவிட்டார் என்று முன்பு கூறினேமல்லவா? அது உண்மைதான். கம்பர் முதலிய கவிச் சக்கரவர்த்திகளும்கூட, கற்றுச் சொல்லிகள் பின்வரக், கால்நடையாகவே நடந்துசென்றனர். வீரமாமுனிவரோ வெளியில் புறப்படும்போது, பூங்காவி அங்கியும், பூங்காவி இடைக்கட்டும், காவி உத்தரியமும் கடுக்கன்களும், போட்டுக்கொண்டும், காலில் சோடும் கையில் தண்டும் தரித்துக்கொண்டும், செல்வதை நினைக்குங்கால், அவர் பால் செறிந்து மிளிர்ந்த செந்தமிழ்ப் பெருமைக்கு ஏற்றதோர் செம்மைசான்ற கோலத்தையே அவர் மேற்கொண்டிருந்தார் எனலாம். வீரமாமுனிவர் இத்துணை செல்வக் கோலத்துடன் செல்வதற்குப் பெரிதும் காரணமாயிருந்தவர் சந்தாசாகிப் என்பவர். அவர் முனிவருக்குத் திவான் பதவியும், அப்பதவிக்குரிய பல வரிசைகளும் சிறப்புகளும் சின்னங்களும் அளித்தனர் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுவர். துறவிக் கோலமும் திவான் கோலமும் கலந்ததோர் திருக்கோலம் அனைவர் கண்களையும் ஈர்த்தன. முனிவர் செல்லுமிடமெல்லாம் பீதாம்பரக் கொடிகளுடன் முப்பது சேவகர்கள் குதிரைகள் மேல் முன்செல்வார்களாம். ஒட்டக மொன்றின்மீது முனிவர் பூசைத்திரவியங்களுடன் பின்செல்வாராம். முனிவர் இறங்கும் இடங்களில் இசைக்கச்சேரி ஒருபால் நடக்க, மற்றொருபால் புலித்தோலாசன மொன்றின்மீது

முனிவர் அமைதியுடன் எழுந்தருளி இருப்பாராம். இவ் வரலாறுகள் எழுத்தின்படி உண்மையற்றன எனினும் சந்தாசாகிப் முனிவர்க்கு அன்புடைமைபற்றி அளித்திருந்த மரியாதைகள் பல என்றும், முனிவர் அவற்றுள் ஒன்றையோ இரண்டையோ சந்தர்ப்பங்களுக்கேற்ற வாறு பயன்படுத்திக்கொண்டமை உண்டு என்றும் உணரக்கிடக்கின்றது.

செய்யுள் இயற்றும் வன்மை முனிவர்பால் திறம்பட அமைந்து கிடந்தமைக்கு அவர் அருளிய நூல்களே சான்றுகளாக இன்றளவும் மிளிர்கின்றன. செய்யுள் இயற்றும் செயலில் அவர் முதற்கண் சிரமம் எய்தியிருக்கலாம்; ஆயினும், 'அடிக்க அடிக்க அம்மியும் நகரும்,' என்றவாறு செய்யச் செய்யச் செய்யுளும் தானே வந்தது; 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது மறுக்கமுடியாத ஒரு உண்மை. கடைசியாக முனிவர் செய்யுள்பாடும் பழக்கத்தில் கைதேர்ந்தவரானார். அவர் பாடும் ஒரு செய்யுளை உடனடியாக எழுத நான்கு அல்லது ஐந்துபேர்கள் அவசியமாயினர். ஒரு செய்யுளை முனிவர் கூறத்தொடங்கி, "கல்லையேற்றலும் கவணினைச் சுழற்றலும் அக்கல்" என்று முதலடியைப்பாடுவாராயின், அதை ஓர் மாணவன் எழுதுவான். அவன் அவ்வடியை எழுதிமுடிக்குமுன் முனிவர், "ஒல்லையோட்டலும் ஒருவருங் காண்கிலரிடிக்கும்" என்று இரண்டாம் அடியைப் பாடிவிடுவார். ஆகையால் வேறொரு மாணவன் பாடப்படும் இரண்டாவது அடியின்மேல் கவனமாயிருந்து அதை எழுதல் வேண்டும். அவன் எழுதிமுடியுமுன் முனிவர்வாயில் மூன்றாவது கவிபிறந்து முடிந்துவிடும். ஆகையால் "செல்லை யொத்தனசிலை நுதல் பாய்தலும் அன்னான்" என்று எழுந்த மூன்றாவது கவியை மற்றொரு மாணவன் வரைவான். அது முற்றும் வரையப் பெறுமுன் சற்றும் தாமதமில்லாது பிறக்கும் நான்காவதாகிய "எல்லைபாய்ந்திருள் இரிந்தென வீழ்தலும் கண்

டார்" என்னும் அடியை நாலாங் கற்றுச்சொல்லி எழுதுவான். இந்நால்வர்க்கும் இடையில் ஐந்தாவது மாணவன் ஒருவன் இந்நான்கு அடிகளையும் மொத்தமாகச் சேர்த்தெழுதிச் செய்யுளை இவ்வாறு படித்துக் காட்டுவான் :—

"கல்லை யேற்றலுங் கவணினைச் சுழற்றலு மக்கல்
ஒல்லை யோட்டலும் ஒருவருங் காண்கிலர் இடிக்கும்
செல்லை ஒத்தன சிலைநுதற் பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்திருள் இரிந்தென வீழ்தலும் கண்டார்"

முற்ற முடிந்ததோர் செய்யுள் முன்னின்று மிளிர்வதை நோக்குங்கள். இச்செய்யுள் முனிவர் வாயில் எப்படிப் பிறந்தது? எப்படி முடிந்தது? என்று எண்ணுதற்கு நேரமில்லை. இவ்வளவு நேரத்திற்குள் இச்செய்யுள் எவ்வாறு உருவாயிற்று? எனின், அது அதிசயமே. தாவீது கோலியாத்தைக் கொல்லத்துணிந்தபோது, கல்லையேற்றலையும், கவணைச் சுழற்றலையும் ஒல்லையோட்டலையும், உயிரைப் பிரித்தலையும் ஒருவரும் கண்டிலர். ஆனால் கோலியாத்து தரையில் வீழ்தலையும் பிணம் சாய்தலையுமே அனைவரும் கண்டனர். தாவீது கோலியாத்தின்மீது கண்ட வெற்றி எத்துணை சீக்கிரத்தில் முற்றுப்பெற்றதோ அத்துணை சீக்கிரத்தில் வீரமாமுனிவர் பாடுங்கவியும் முடியும். இராமன் மிதிலாபுரிக்குச் சென்று மைதிலியைக் கலியாணம்செய்ய எண்ணி, வில்வளைக்கும் செய்தியைக் கம்பர் கூறுமிடத்தே,

"தடுத்திமை யாமலி ருந்தவர் தாளின்
மடுத்தநும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்."

என்பார்; அதாவது இராமன் அப்பெரிய வில்லைத் தாளால் மிதித்தலையும் வளைத்தலையும், நாணை நுனியில் ஏற்றலையும், ஒருவரும் கண்டிலர். ஆனால், அவ்வில் இற்றது ஆக,

எழுந்த ஓசையை மட்டும் யாவரும் கேட்டனர் என்றார். வீரமாமுனிவர் கவி ஆக்கிய திறமும் அங்ஙனமேயுள்ளது. அவர் முதல் நான்கு அடிகளைப் பாடப்பாட, எழுதி எழுதிக் கொண்டிருந்தவர்கள், ஐந்தாவது கற்றுச் சொல்லியின் வாயால் அப்பாடல் முழுவதையுங்கேட்டு ஆச்சரியம் எய்துவர். கவியின் சொற்சுவை இன்பத்தில் ஆனந்தம் எய்துவர். இத்துணை வேகத்தில் ஒரே படியாக நூற்றுக்கணக்கான கவிகளைப் பாடும் வன்மை பெற்றிருந்தமையால்தான், முனிவர் பல காரியங்களை இனிது இயற்றக் கூடியவரானார்.

## 6. உலகியல் ஆசிரியர்

முனிவர் உலகியல் அறிவும் கற்பனை சக்தியும் ஒருங்கே வாய்ந்தவர். அவர், தம் உலகியல் அறிவுத் திறத்தால் அக்காலத்து மக்கள் நிலையை உற்று நோக்கினார். அவர்கட்கு வேண்டிய நல்லறிவையூட்டினார். முனிவர் தமது கற்பனை சக்தியையும் கூடக் கலந்து, சிறந்த அறவுரைகள் வாயிலாக மக்களை நல் வழிப்படுத்த எண்ணங் கொண்டார். இந்நாட்டு மக்களை எளிதிற் கவரக்கூடிய செய்யுட்கள் வாயிலாக, அவர்கட்குச் சான்றோர் காட்டும் ஒழுக்க விதிகளை எடுத்தோதினார். நிலத்தின் தன்மையால் நீர்திரிவதுபோல, மனத்தின் தன்மையால் மன்னிய பொருள்கள் தோன்றும். அம்மனம் நன்மனமாயின் அனைத்தும் நல்லனவாகத் தோன்றும். தீயதாயின் அனைத்தும் தீயனவாகத் தோன்றும். அன்பினால் தீயனவும் நல்லனவாகத் தோன்றும். பகையினால் நல்லனவும் தீயனவாகத் தோன்றும். இவ்வுலகியல் அறிவை ஆசிரியர் அறவுரையாக்கிக் காட்டுமாறு:—

> " நிலத்தின்தன்மையால் நீர்திரிந்தனைய பற்றுளந்தன்
> புலத்தின்தன்மையால் புறத்தவை தோன்றலால் அன்பின்
> நலத்தின்தன்மையால் தீயவும் நல்லவாம் பகைகொள்
> சலத்தின் தன்மையால் நல்லவுந் தீயவாம் சகத்தே "

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு"

என்று வள்ளுவர் கூறிய அறவுரையைத் தேம்பாவணி ஆசிரியர் அழகிய விருத்தப் பாவினால் மக்களுக்கு எடுத்துணர்த்தியுள்ளார். மேதகு சான்றோர்களுக்குத் திலகமாக மேல் இலங்கிய முனிவர், மக்களுக்கு அறவுரை புகட்டும் கருத்துக்கொண்டே காவியங்களும் வசன நூல்களும் எழுதினார். அறவுரைகளை வெகு அழகான முறையில் எடுத்துச் சொல்லி, மக்கள் அவ்வுரைகளை ரஸிக்கவும், ஊன்றி நோக்கவும் செய்தார். இளமை நிலையாது என்னும் உண்மையை முனிவர் மக்கள் மனதில் நிலைநாட்டக் கருதி,

"மீய்முகத்து உடையில் தோன்றி
விசும்புசூழ் வரையில் தூங்கித்
தூய்முகத்(து) அலைகள் ஓட்டித்
துள்ளிவீழ் அருவி போல
வேய்முகத்(து) இனிமை காட்டி
விரைவிலோ டிளமை நம்பேல்
காய்முகத் (து) அதிர்கால் வீசக்
காய்முதல் வீழு மன்றோ"

என்று பாடுகின்றார். 'இளமை நிலையாது' என்பது யாவரும் அறிந்த உண்மையே. ஆயினும் அவ்வெளிய உண்மையை மக்கள் தம் வாழ்க்கையில் கொண்டு நடப்பதில்லை. அங்ஙனம் நடவாமைக்குக் காரணம் என்ன? அவ்வுண்மை பட்டும் படாமலும் பதிந்தும் பதியாமலும் இருக்கும் நிலையில் அதுபற்றி மக்கள் போதிய கவனம் செலுத்துகின்றாரிலர். ஆனால் வீரமாமுனிவர் போன்ற வரகவி ஒருவர் அவ்வுண்மையோடு தம் கற்பனா சக்தியையும் கலந்து திறம்படச் சொல்லி, உரம்பட உளத்தில் நாட்டும்போது, அவ்வுண்மை நம் உளத்திடை நாளும் ஊன்றி உறுதி கொளற்பாலது என்பதில் எட்டுணையும் ஐயம் இல்லை.

முனிவர் பாடிய செய்யுளில் இவ்வுண்மை பொதிந்து கிடக்கும் முறை மிகவும் களிப்புறுத்தவல்லது. இவ்வுண்மையை ஓர் உவமையாலும் பழமொழியாலும் விளக்கவந்தவர், முதலாவது அருவியை எடுத்துக்கொண்டார். அருவியானது முதல் வடிவில் ஆகாயமங்கையின் மேற் போர்த்த வெண்ணிற ஆடைபோலும் தோற்றம் அளிக்கிறது. பின்னர் அது தவழ்ந்துசென்று மலையுச்சியில் காளமேகமாகத் தொங்குகின்றது. இது இரண்டாவது தோற்றம். மூன்றுவதாக அது அலைகளோடு துள்ளி விழும் அருவியாக அம்மலையினின்று கழிந்து அகன்று ஒழிகிறது. "பல வடிவங்களை அடைந்து, கடைசியாக அருவி வடிவில் உருவி விழும் அருவிபோலவே நமது இளமையும் துள்ளி ஓடுகிறது" என்றார். 'மனிதனுடைய பருவங்கள் பல்வேறு மாறுதல்களையுடையன. மனிதன் தன்னிடத்தினின்று திடீரெனத் துள்ளியோடி மறைவான்' என்னும் உண்மைகளை, அருவியைக் கொண்டு வெகு அழகாகக் கூறி விளக்கினார். மேலும், அருவி இனிமை காட்டி இழிந்து மறைவது; அதுபோலவே இளம் பருவமும் இனிமை காட்டி மறைவதொன்று என்றார். பின்னர்

> "காய்முகத்து அதிர்கால் வீசக்
> காய்முதல் வீழுமன்றே"

என்று ஓர் பழமொழியை எடுத்துக் கொண்டார். கோபத்தோடு வீசும் கொடிய புயற் காற்றில் கனிகளோடு காய்களும் வீழும். இதுதான் தமிழ் நாட்டில் வழங்கிய பழமொழி. இப் பழமொழியையும் பொருளையும் கொண்ட செய்யுள் ஒன்று 'பழமொழி நானூறு' என்னும் நூலில் உளது. "பெருங்காற்றில் சிறு காய்களும் வீழ்வனபோல், காலமாகிய சுழற்சியிற்பட்ட பெரியோர்களோடு சிறியோர்களும் மடிவது இயற்கை; ஆதலின், "இளமை நம்பேல்" என்று முனிவர் கூறும் அறவுரைகள் மனதில் ஆழமாய்ப் பதியவல்லன ஆயின.

# ௯௰. முடிவுரை

தமிழுக்கு மறுமலர்ச்சி உண்டாக்கியவர் வீரமாமுனிவர். வீரமாமுனிவர் இலரேல் தமிழிலில் வசனநூல்கள் எங்கே! அகராதி நூல்கள் எங்கே! மேனாட்டு மொழி நிபுணராகிய அவர் இந்நாட்டு மொழியாகிய தமிழுக்கு மறுமலர்ச்சியுண்டாக்கி மறைந்துபோக, அத்தகைய மறுமலர்ச்சியை நாம் தமிழ் மொழிக்கண் உண்டாக்க இயலாதிருந்தும், அவர் செய்த மறுமலர்ச்சிக்குரிய ஏதுக்கள் யாவை? என்பது பற்றி ஆராய்ந்தறியாமலும் இருந்தோமாகில், நமது நிலைமை மிகவும் பரிதபிக்கப்படத்தக்கதேயாகும். வெறுமனே மரபு மரபு என்று நாம் பண்டைய மரபையே தழுவிக் கொண்டிருப்போமானால் நாம் நம் மொழிக்குப் புது மலர்ச்சி அளிக்க முடியாதவர்களாவோம். மரபைத்தழுவி, உறவையும் நல்லெண்ணத்தையும் நழுவவிடுதலிற் பயன் ஒன்றுமில்லை. வீரமாமுனிவர் தமிழ் மரபைத் தழுவியே தேம்பாவணியாம் காவியம் யாத்தார். அவர் முற்றிலும் தமிழ் மரபைத் தழுவியதால்தான் அக்காவியம் படிப்பதற்குக் கடினமாயமைந்துளது. சிந்தாமணி ஆசிரியரின் நடையைத் தழுவியதால் தேம்பாவணியின் நடை அதனினும் கருகலான நடையில் முடிந்தது. ஆதலின் வீரமாமுனிவர் மரபுக்கு மாறாக விருந்தையும் மேற்கொண்டார். 'விருந்து' என்பது புதுமை முறையில் எழும் பனுவல்களும் பாவினங்களுமாம். இவ்விருந்து முறையில் பனுவல்களும் பாக்களும் ஆக்க எல்லாத் தமிழர்களுக்கும் உரிமை உண்டு. தொல்காப்பியர்கூட அத்தகைய உரிமையைத் தமிழ் மக்கள் தழுவிக்கொள்ள விடையளித்துச் சென்றார். எனினும் புலவர்கள் மரபு மரபு என்று தம் புலமையைப் பாழாக்கினர். வீரமாமுனிவரோ 'விருந்து' மேற்கொண்டு, வசனநூல்களும், தர்க்கநூல்களும், விகடநூல்களும் செய்தார். அக்காலத்தில் விகடநூல் செய்வதும் மரபுக்கு அடாதசெயலே. ஏனெனில், 'அறம் பொருள் இன்பம்

வீடே நூற்பயன்' என்றார் ஆகலின். வீரமாமுனிவர் மரபைத்தள்ளி விருந்து மேற்கொண்டே அகராதிகள் ஆக்கினார்; அம்மானை பாடினார். தமிழுக்கு மறுமலர்ச்சி அருளினார். பாரதியார்கொண்ட முறையும் இது தான். அவர் விருந்து நெறி மேற்கொண்டு தமிழர் செவிக்குப் புதுவிருந்து அளித்தார். தமிழ்மொழிக்குப் புதுவிருந்து அளித்தார். 'விருந்து' முறைபற்றிச் சென்றே வீரமா முனிவரும் பாரதியாரும் ஆரமுதன்ன அரும்புகழ் படைத்த பெருந்தொண்டர்களாக விளங்குகின்றார்கள். இம்முறையையே நாமும் பின்பற்றித், தமிழுக்கு மேலும் மறுமலர்ச்சியும் புத்தழகும் உண்டாக்குவோமாக. இதுவே தமிழ்வளர்த்த தந்தையும் மறுமலர்ச்சியளித்த தாதாவுமாகிய வீரமாமுனிவருக்கு நாம் செய்யும் கடமையுமாகும். வீரமாமுனிவர் வாழ்க. ஆரமுதாம் தமிழ் வாழ்க.

வீரமாமுனிவர் வாழ்க்கையில் தோல்வி என்பதே கிடையாது. அவர் அடைந்த வெற்றி வேறு எவராலும் அடைதற்கு அரிய வெற்றி. அவர்தாம் இயல்பாகக் கொண்ட வாழ்க்கை மரபுகளையும் நடையுடை பாவனைகளையும் கொண்டதோர் குறிக்கோள் காரணமாக மாற்றும் வன்மை வாய்ந்தவராய், அதில் மாபெரு வெற்றி கண்டார். இயல்பின்வந்து, தாய் ஊட்டிய பால்வழியே சென்று, வாயிலும், வயிற்றிலும் உள்ளத்திலும் பதிந்து பட்ட பால்வாய்ப் பசுந்தமிழைப் பயின்று, அதன்கண் புலமை எய்துவதென்றால், அது நம்மிலேயே பெரும் பாலர்க்கு அரிய பெரிய செயலாகத் தோன்றுகின்றதே! வீரமாமுனிவர் கண்ட வெற்றியைத் தமிழன் மனம் வைத்தால், இறைப்பொழுதில் காணமுடியும். ஆகையால், தமிழராகிய நாம் வீரமாமுனிவரைப் பின்பற்றிப் போதிய தமிழ்ப்புலமை பெற்று, அப்புலமை கொண்டு புலன் கெட்ட மக்களுக்கு எவ்வழியாலாயினும் நல்லறிவு அளிப்போமாக. புதுமைநெறிகண்டு, பழமையைப்

போற்றுவோம். பழம் புலவர்களின் கருத்துக்களை மேற்கொண்டு, புதுக்கருத்துக்களை மக்களிடையே புகுத்துவோம். முன்பு பெரும்பான்மையராயிருந்த சமணர்களையும் பௌத்தர்களையும் தமிழர்களாகிய நாம் ஒருவாறு வெறுத்தோமாயினும், அவர்களால் வரையப்பெற்ற காவியங்களைக் கைவிடாது கண்ணேபோல் போற்றிக், காத்தும் வருவதுபோல, வீரமாமுனிவர் என்னும் வீறுசான்ற வித்தகர் எழுதிய அனைத்து நூல்களையும், மதவேறுபாடு கருதி உதறித்தள்ளிவிடாது, தமிழ்நலங்கருதி, அமுதெனவாய்ந்த அவற்றைப் பல்காலும் பயின்று, நம்மன்னையின் யௌவனத்தன்மையைக் காப்பாற்றிக் கொள்வோமாக. கல்வியிற் பெருமிதம் கொண்ட தமிழன்பர்கள் தேம்பாவணி முதலிய காவியங்களைக் காப்பாற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

‘தமிழன்னை வாழ்க—தவமுனிவர் வாழ்க’

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 22 | ஒப்பற்ற | ஒப்புடைய |
| 7 | 11 | மனஞ் | வனஞ் |
| 7 | 26 | தீர்த்தா | தீர்த்தாய் |
| 13 | 24 | யென | என்பதை |
| 28 | 27 | சூழ்க | சூழற்க |
| 30 | 14 | ஏலாக்குரிச்சி | ஏலாக்குறிச்சி |
| 48. | 18 | துணிந்து | துணிந்தது |

தமிழ் இலக்கியக் கழக நூற்பண்ணை
தூத்துக்குடி

துணை நூல்கள் ℰ𝓋
REFERENCE BOOKS

இலக்கிய நூல்கள் ℰ𝓋
LITERATURE

ஆராய்ச்சி நூல்கள் ℰ𝓋
RESEARCH

பரிசில் நூல்கள் ℰ𝓋
PRIZE BOOKS

நூற்கூட இலக்கியம் ℰ𝓋
LIBRARY BOOKS

வேண்டுவோர்
எழுதிக் கேட்க

Write for
Catalogue

THE T. L. S. BOOK CENTRE
TUTICORIN